நன்றி - நூலகத்திட்டம்


# சரிநிகர்

இதழ்-178 ஓகஸ்ட் 19, செப்.01-1999 விலை ரூபா 10.00





## ஈ.பி.டி.பிக்கு சிறந்த விருது!



## முஸ்லிம்களைக் குறிவைக்கும் பேரினவாதம்!

### கார்கில் யுத்தம்: அயோக்கியர்களின் கடைசிப் புகலிடம்!




## தூக்கைத் தூக்கிலிடு!

நன்றி - நூலகத்திட்டம்



# ரணிலுக்கு வந்த மடலை திருடினார் அமைச்சர் !

ரெலிபோன் உரையாடலை ஒட்டுக் கேட்பது பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். அரசாங்கமும், சி.ஐ.டியினரும் தமக்கு தேவையான தகவல்களை அறிய சந்தேகத்துக்குரிய நபர்களது தொலைபேசிகளை ஒட்டுக் கேட்பது பற்றி அறியாதவர்கள் இருக்க முடியாது. அவர்களுக்கு வரும் கடிதங்கள் கூட உடைத்துப் பார்க்கப்படுவதும் புதிய விடயம் அல்ல.

ஆனால், அப்படிச் செய்ய முடியாத, சங்கேதச் சொற்கள் மூலமே அறிய முடியுமான ஈ.மெயிலை (இலத்திரனியல் மடல்கள்) எடுத்துப் படித்த கதை இப்போது புதிதாக இங்கு அடிபடுகிறது. ஒட்டுக் கேட்டவர் விஞ்ஞான தொழில் நுட்பத்துறை அமைச்சர் பட்டி வீரக்கோன். கடிதம் எதிர்க்கட்சித் தலைவருக்கு வந்தது.

எதிர்க்கட்சித் தலைவருக்கு சச்சி அன்ட் சச்சி என்ற நிறுவனத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட மடல் தவறுதலாக தன்னுடைய கணனிக்குள் வந்து சிக்கிக் கொண்டது என்றும் அதனாலேயே தான் அதைப் படிக்க நேர்ந்தது என்றும் கூறுகிறார் அமைச்சர். எதிர்க் கட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்ட கடிதம் எப்படி அமச்சரது கொம்பியூட்டருக்குப் போனது என்பது ஒரு புறமிருக்க, அப்படித்தான் ஒரு கடிதம் வந்தாலும் அதை எந்த ஒரு சாதாரண நேர்மையுள்ள நபரும் செய்வது போல உரியவருக்கே சேர்ப்பிக்காமல், அதைப் படித்ததும் அல்லாமல் அதை அமைச்சரவைக் கூட்டத்திற்கு எடுத்துச் சென்று படிக்கவும் செய்திருக்கிறார் அமைச்சர் பட்டி வீரக்கோன்.

இந்தக் கடித்ததை அவர் இவ்வளவு முக்கியமானதாக கருதியதற்கு நியாயம் இருக்கிறது. சச்சி அன்ட் சச்சி கம்பனியை சேர்ந்த மரிகோ என்ற , மக்கள் தொடர்பு நிபுணரிடம் இருந்து வந்த அந்தக் கடிதம், ஐ.தே.க. எதிர்காலத்தில் எப்படிப்பட்ட செயற்பாடுகளில் ஈடுபடலாம் என்று தொழில் ரீதியான ஆலோசனைகளை தெரிவிக்கும் ஒரு கடிதமாக இருந்தது தான் வீரக்கோனின் இத்தகைய செயலுக்குக் காரணமாக இருந்திருக்கிறது. ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் சாரம் இது:

"நாம் அண்மையில் தொலைபேசியில் பேசிக் கொண்டதற்கமைய, நான் கலந்துரையாடியது போலவே நான் எனது அறிக்கையையும், முடிவுகளின் சுருக்கத்தையும் தயார் செய்து விட்டேன். இந்த அறிக்கை அபேறொஸ்மொன்ட்டிடம் சமர்ப்பிக்கப்பட்டு விட்டது. அவர் தனது அறிக்கையை (என்னுடையதையும் சேர்த்து) உங்களுக்கு விரைவில் அனுப்பி வைப்பார். நான் ஒப்புக் கொண்டது போலவே, வடிவமைப்புக்களையும் தொழில் நுட்ப அளவிடங்களையும் உருவாக்குதல், செய்திகளை வளர்த்தல், வழங்குதல் தொடர்பான சிந்தனைகள் என்பவற்றையும் தயார்செய்வேன்.

இலங்கையில் நாம் பேசிக்கொணடதற்கு மேலாக, என்னிடம் சில ஆர்வமூட்டும் புகைப்பட வாய்ப்புகளை தயார் செய்வது தொடர்பான ஒரு எண்ணக்கருவும் உண்டு. கூடவே, 'எதிர்கால அரசாங்கம்,' ஆன ஐ.தே.க.விற்கான ஒரு காத்திரமான புரிதலை உருவாக்கவும், வெளிப்படுத்தவும் வல்ல ஒரு மூலோபாயத்தையும் உருவக்குவது தொடர்பாகவும் என்னிடம் எண்ணக்கரு உண்டு. இது ஒரு பொக்கற் சைஸ் அளவிலான பிளாஸ்டிக்கில் செய்யப்பட்ட வாக்குறுதி அட்டையையும் உள்ளடக்கும். இது இங்கிலாந்து தொழிற்கட்சியால் வெற்றிகரமாகப் பாவிக்கப்பட்டது. இது ஒரு தேர்தல் விஞ்ஞாபனப் பொதியாகும். அது ஒவ்வொரு வாக்குறுதியையும் தெளிவாக முன்வைக்கிறது. அத்துடன் இது அரசாங்கத்தின் நிறைவேற்றப்படாத வாக்குறுதிகளை அம்பலப்படுத்தும் ஒரு எதிர்மறைப் பிரச்சாரத்திற்கான எண்ணக் கருக்களையும் கொண்டுள்ளது. நான் லண்டனிலுள்ள அதாத்தில் வைத்து தந்த அவுஸ்ரேலிய லிபரல் கட்சியினரின் ஒளிநாடாவை தயவு செய்து ஒரு தடவை பார்க்கவும்.

இக்கடிதத்தை படித்த போது ஐ.தே.க. மிகவும் திட்டமிட்ட முறையில், தொழில் துறை நிபுணர்களின் உதவியுடன் தம்மை சவாலுக்கழைக்கத் தயாராகிறது என்பது தெளிவாக வீரக்கோனுக்குப் புரிந்து விட்டது. அதை அவர் அமைச்சரவையில், பெரிய கண்டுபிடிப்புப் போன்ற ஒரு வகைப் பரபரப்புடன் படித்துக் காட்டிவிட்டார். தனக்கு தற்செலாக கிடைத்த ஒன்று என்று அமைச்சர் சொன்னாலும், இது திட்டமிட்டு களவாக எடுத்துப் பார்க்கப்பட்டது கண்டிக்கப்பட வேண்டிய ஒரு குற்றச் செயல் என்று குற்றம் சாட்டினார், ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

இந்த விவகாரம் இப்போது இலத்திரன் மடலைப் பாவிக்கும் அனைவருக்கும் பெரும் அச்சம் தரும் விடயமாக மாறிவிட்டுள்ளது. அரசாங்கம் இப்படியான தகவல்களை அறிவதற்காக, இப்படிச் செய்வது ஒருபுறத்தில் அரசியல் மனித விழுமியங்களுக்கு முரணானது மட்டுமல்ல, தொலைத் தொடர்பு சட்டத்தின்படி, ஒரு குற்றமும் ஆகும். அரசாங்கம் இப்படி இலத்திரன் மடல்களை இழுத்துத் தரவல்ல கம்பியூட்டர்களை இறக்குவித்திருக்கிறது என்றும், இக் குற்றச் செயலில் அமைச்சர் இறங்கியிருப்பது மன்னிக்க முடியாத குற்றம் என்றும் கருதும் ஐ.தே.க.வினர் சட்டரீதியான நடவடிக்கை எடுக்க முயன்று வருவதாகத் தெரிகிறது.

இவ்விடயத்தைப் பாராளுமன்றத்தில் கொண்டுவரப் போவதாக கூறும் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க, சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த ஒருவர் இப்படிச் செய்வது தனக்குக் கவலையை ஊட்டுகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

ஆக, இலத்திரன் மடல் கூட பாதுகாப்பில்லாத ஒரு சாதனமாகிவிட்டதோ என்று அங்கலாய்க்கின்றார்கள் அதை இரகசிய தேவைகட்காக பயன்படுத்தும் அனைவரும்.

# "நன்றாக விசாரிக்கப்பட்ட" இளைஞர்கள்!

திருகோணமலை நகருக்கு வெளியேயும் பாதுகாப்புக் கெடுபிடிகள் அதிகரிக்கத் தொடங்கியிருக்கின்றன. மட்டக்களப்பு போல் இந்தப் பகுதியும் மாறிவிடக்கூடாது என்பதில் பாதுகாப்புத் தரப்பார் கூடிய கரிசனை கொண்டுள்ளனர்.

முன்னரெல்லாம் நகரப்பகுதி மாத்திரமே சுற்றிவளைப்பு இலக்காவது சகஜம். இப்போது சுற்றிவளைப்புகள் கிராமப்புறங்களுக்கும், விஸ்தரிக்கப்பட்டுள்ளன. நன்றாகத் தெரிந்த முகங்களைக் கூட சுற்றிவளைப்பு என்ற பெயரில் துருவித் துருவி விசாரிக்கிறார்கள்.

நிலாவெளியில் இடம்பெற்ற சுற்றிவளைப்பொன்றின்போது இருபது இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டு "நன்றாகவே" விசாரிக்கப்பட்டிருக்கிறார்கள். புலிகளுக்கு உணவு வழங்குகிறார்கள். உளவு சொல்கிறார்கள் என்பதே இவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு. கண்களைக்கட்டி நன்றாகக் கசக்கிப்பிழியப்பட்ட இவ்விளைஞர்கள் அடுத்த நாள் இராணுவமுகாமிலிருந்து திருகோணமலை நகரப் பொலிசாரிடம் கையளிக்கப்பட்டு விடுதலையாகி இருக்கிறார்கள்.

வழக்கமாக திருகோணமலைக் கிராமப் புறங்களில் சனத்தொகை குறைவு. இராணுவ - புலிகள் கெடுபிடிகள் காரணமாகப் பலர் நகரப்பகுதிக்கே குடிபெயர்ந்து விட்டார்கள். போக்கிடமற்றவர்கள் மாத்திரம் தான் துன்பங்களைச் சகித்துக் கொண்டு துயரங்களைச் சுமந்து கொண்டு அங்கு குடியிருககிறார்கள். புதிய நபர் ஒருவர் வந்தாற் கூட பளிச்சென்று அடையாளம் காணக்கூடிய நிலையில் இருக்கும் இராணுவத்தினர் அவர்களை நம்பி அவ்விடத்தில் வாழும் ஏழை இளைஞர்கள் மேல் புலிவேட்டை செய்வது மக்கள் மனதில் பய உணர்வை விதைத்துள்ளது.

நிலாவெளித் தேடுதல் வேட்டைக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் அங்கிருந்து வடபுறமாகப் பத்து மைல் தொலைவிலுள்ள சல்பையாறு என்ற இடத்தில் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட எதிர்பாராத மோதலில் இராணுவத்தினர் மோசமாகப் பாதிக்கப்பட்டனர். இந்த "வெப்பத்தில்"தான் நிலாவெளித் தேடுதல் நடைபெற்றிருக்கலாம் என்று கருத இடமுண்டு.

⇨19

## அரசின் அக்கறை!

பேச்சுவார்த்தை பற்றி முன்பு பேச்சு அடிபட்டது. விடுதலைப் புலிகள் தரப்பில் அரசுடனான பேச்சுவார்த்தையொன்றிற்குத் தாம் போவதானால்,இரு தரப்பாரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய மூன்றாம் தரப்பொன்றின் மத்தியஸ்தின் அவசியம் வலியுறுத்தப்பட்டிருந்தது. கடந்த காலக் கசப்பான அனுபவங்கள் இது தவிர்க்க முடியாதது என்பதை எடுத்துக்காட்டுவதாகப் பலரும் ஒப்புக் கொண்டனர். சமாதான விரும்பிகள் பலரும் கூட இதுபற்றி வலியுறுத்தினர். ஆயினும் அரசாங்கம் அதை மறுத்து விட்டது. புலிகளுடன் பேச மூன்றாம் தரப்புத் தேவையில்லை அது ஆயுதங்களைப் போட்டுவிட்டு வந்தாலே போதும், நாம் பேசுவோம் என்றது.

இப்போது, தீர்வுப் பொதியைப் பாராளுமன்றத்திற்குக் கொண்டுவந்து வாக்கெடுப்புக்கு விட அதற்கு ஐ.தே.கவின் ஆதரவு தேவைப்படுகின்றது.

இந்த ஆதரவைப் பெற அது ஐ.தே.கவுடன் பேசவும் தயாராக இருப்பதாக அறிவித்தது. ஐ.தே.கவும் பேசுவதற்கு மறுக்கவில்லை. ஆனாலும் கூட அவர்களால் பேச முடியவில்லை.

இப்போது, இரு தரப்பையும் பேச வைக்கும் முயற்சியில் வர்த்தகத் தரப்பினர் முயல்கின்றனர். ஒரு ஆளும் கட்சியும், எதிர்க் கட்சியும் தீர்வு பற்றிப் பேசவே மூன்றாவது தரப்புத் தேவைப்படுகின்றது.

ஆனால் புலிகளுடன் பேச அது தேவையில்லையாம்.

சிங்கள பௌத்தத்தை ஏற்றுக் கொண்ட இன்னொரு பெரும்பான்மைக் கட்சியான ஐ.தே.கவுடன் பேசவே அது தேவைப்படும்போது காலம் காலமாக ஏமாற்றப்பட்டுவந்த தமிழ்த் தரப்பு இயக்கம் ஒன்றுடன் பேச மூன்றாம் தரப்புத் தேவை இல்லை என்பது எதைக் காட்டுகின்றது ?

" சமாதானத் தீர்வின் மீதான அரசின் அக்கறையை " என்று நீங்கள் சொல்வது கேட்கின்றது.

சரி, ஏற்றுக்கொள்வோம். வேறென்ன செய்ய ?

## எள்ளும் தண்ணீரும் தேடி . . .

இறந்துபோன தனது குழந்தையை உயிர்ப்பித்துத் தருமாறு புத்த பகவானிடம் இறைஞ்சினாள் ஒரு தாய்.

அந்தப் பெண்ணின் துயரம் கௌதமருக்குப் புரிந்து, அவளது கோரிக்கையின் பேதமையும் அவருக்குப் புரிந்தது. அவர் அந்தப் பெண்ணிடம் சொன்னார் : ஏழு தலைமுறைகளுக்கு மரணம் சம்பவிக்காத ஒரு வீட்டில் போய் எள்ளும், தண்ணீரும் எடுத்து வா, உயிர்ப்பித்துத் தருகின்றேன். "

அந்தப் பெண் எள்ளும், தண்ணீரும் தேடி அலைந்தாள். சாவு வீடு நடக்காத ஒரு வீட்டைத் தன்னும் அவளால் கண்டுபிடிக்க முடியவில்லை.

புத்த பிரானிடம் அவள் வந்து அதைக் கூறினாள். சாவு ஒரு தவிர்க்க முடியாத, இயற்கை நியதி என்பதை அவள் அப்போது புரிந்து கொண்டாள்.

புலிகளுடன் பேச வேண்டும் என்று அரசாங்கம் கூறுகின்றது: அரசாங்க அமைச்சர்கள் கூறுகின்றார்கள். ஆனால் ஐ.தே.கவுடன் உடன்பாடு கண்ட பிறகே அவர்களுடன் பேச்சு என்கின்றார்கள்.

ஆனால் அரசாங்கத்திற்கும், ஐ.தே.கவுக்குமிடையில் உடன்பாடு வருவது என்பது எள்ளும், தண்ணீரும் எடுப்பதை விடவும் அரிதான விடயம் என்பது எல்லோருக்கும் தெரியும்.

அந்த முயற்சியில் இப்போது இறங்கியிருக்கின்றது வர்த்தக சம்மேளனம்.

வர்த்தக சம்மேளனத் தலைவரும் அதையே அறிவித்திருக்கின்றார். ஐ.தே.க. - அரசாங்கம் பேசி ஒரு உடன்பாட்டுக்கு வந்த பின்னர் தான் புலிகளுடன் பேச்சுவார்த்தை என்றுவிட்டார் அவர்.

ஆக, புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் இப்போதைக்கு நடக்கப் போவதில்லை என்பது மட்டும் நன்றாகத் தெரிகின்றது. !

## உரிமை கோர உரிமை இல்லை

"எந்த இனமும், மதமும் இலங்கைக்கு உரிமை கோர முடியாது " என்கின்றார் இரத்தினபுரி மறை மாவட்ட ஆயர் மல்கம் றஞ்சித்.

மடு மாதா கோவில் திருப்பலிப் பூசையின்போது பேசுகையில் அவர் இப்படிச் சொன்னார்.

ஒரு சிறுபான்மை மதமான கிறீஸ்தவ மதத்தின் தலைவர் என்ற முறையில் ஆயர் அவர்களது இந்தக் குரலில் உள்ள நியாயம் நமக்குப் புரிகின்றது.

ஆனால் இலங்கைக்கு எந்த இனமோ, மதமோ உரிமை கொண்டாட முடியாது. அது ஒரு பல்லின, பல் மதங்களையும் கொண்ட நாடு என்று சொல்வது எல்லாம் சரிதான்.

இலங்கையின் அரசாங்க மதமாகப் பௌத்த மதம் அரசியலமைப்பு ரீதியாக எழுதி வைக்கப்பட்டிருக்கின்றது.

சிங்கள பௌத்த நாடு இது என்று திரும்பத் திரும்ப முழு அரச தலைமைப் பீடங்களும் வலியுறுத்தி வருகின்றன.

புதிதாக அரசாங்கத்தால் பெரும் பாடுபட்டுத் தயாரிக்கப்பட்ட தீர்வுப் பொதியிலும் கூட அதில் மாற்றம் செய்யப்படவில்லை.

ஆக, எந்த இனமும் உரிமை கோர முடியாது என்ற ஆயரின் கூற்று, ஏற்கெனவே அதிகாரத்தில் இருக்கின்ற இனத்துக்கும், மதத்துக்குமே சாதகமாகிப்போய் விடும் என்ற துரதிர்ஷ்டமான நிலையை அவர் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆயர் அவர்களின் கூற்று நியாயமானது மட்டுமல்ல, சரியானதும் கூட.

ஆனால், உரிமை மறுக்கப்படும் இனங்களும், மதங்களும் தமக்கும் சொந்தம் உண்டு என்று கோருவதை எப்படி மறுக்க முடியும் ?

அப்படி மறுப்பது தானே இன்றைய பிரச்சினையின் சாரம்.

அந்த மறுத்தலை மறுப்பதல்லவா இன்றைய தேவை ?

ஆயரவர்கள் அதைச் சொல்வது தான் அதிகளவிற்கு உண்மை நிலையுடன் பொருந்திப் போகும் ஒள்றாக இருக்கும்.

நன்றி - நூலகத்திட்டம்



# சாரம் அணியும் உரிமையை வாங்கித் தரும் தமிழ்க் கட்சித் தலைமைகள்

கழுதை தேய்ந்து கட்டெறும்பாவது போல் தமிழ்க்கட்சிகள் தேய்ந்து இப்போது தனிமனிதர்கள் போலாகிவிட்டன. ஒரு மோசமான தனிமனிதன் தன்னைச் சமுதாயத்தில் அடையாளப்படுத்திக் கொள்ள எத்தகைய விளம்பர தந்திரங்களை மேற்கொள்வானோ அதேபோல் தமிழ்க்கட்சிகளும் பத்திரிகை அறிக்கைகள் மூலமும் உப்புச்சப்பில்லாத போராட்டங்கள் மூலமும் தாங்களும் இருக்கிறோம் என்று மக்களுக்கு விளம்பரப்படுத்தும் துர்ப்பாக்கிய நிலைக்குக் கீழிறங்கி விட்டன.

இத்தகைய ஒரு விளம்பர உத்தியின் கீழ் செய்யப்பட்டது தான் ஈ.பி.டி.பியினரின் பாராளுமன்றப் பகிஷ்கரிப்புத் தமாஷா. தமிழ்மக்களுக்கு எந்தவித அடிப்படை அரசியல் அறிவும் கிடையாது என்ற முட்டாள்தனமான எண்ணத்தின் அடிப்படையில் அரங்கேற்றப்பட்ட இந்நாடகத்தில் திறம்பட நடிப்பதற்காக ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இவ்வருடத்தில் சிறந்த நகைச்சுவை நடிகர்களுக்கான விருதுகள் வழங்கலாம்.

மீனவர்களுக்கு சாரம் அணிவிப்பது, வன்னிக்கு போக்குவரத்துப் பாதை திறப்பது, யாழ் அகதிகளுக்கான உலர் உணவு நிவாரணத்தைப் பெற்றுக்கொடுப்பது, யாழ்ப்பாணத்துக்கான கப்பல், விமானப் போக்குவரத்தை ஏற்படுத்துவது, பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெறாமலே வடபகுதிக்கு சென்று வரத்தக்க நிலையைக் கொணருவது என்ற ஐந்து கோரிக்கைகளின் அடிப்படையில் இந்நாடகக் கதை புனையப்பட்டுக்காட்சிகள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

வில்லனை ஒரு வேட்டில் தீர்த்து விடக் கூடிய சந்தர்ப்பங்கள் இருக்கின்ற போதிலும் கதை நகர வேண்டிய தேவை கருதி அவற்றை நிராகரித்து கதை நகர்த்துகின்ற கதாசிரியனைப் போல் ஈ.பி.டி.பியினரும் அவசரகாலச் சட்டத்துக்கு எதிர்த்து வாக்களிப்பதன் மூலம் ஒரே மூச்சில் முடிக்கக்கூடிய போராட்டக் கதையை ஜனங்களின் ஜனரஞ்சகத் தேவை கருதி அட்டகாசப் பகிஷ்கரிப்பாக மாற்றி நகர்த்தி வருவது கற்பனைவளச் சிறப்பே தான்.

எவ்வாறிருப்பினும் இந்தக் கெட்டிக்காரப் போராட்டத்தின் விளைவால் இரண்டு விடயங்கள் நிறைவேறி விட்டதாகப் பத்திரிகைகள் மூலம் விளம்பரப்படுத்தப்பட்டு வருகின்றன. ஈ.பி.டி.பியினரால் மீனவர்கள் சாரம் கட்டத் தொடங்கியது ஒன்று. வன்னிக்கு மக்களும் உணவுப் பொதிகளும் சென்றது மற்றது. இந்த இரண்டு விடயங்களும் மாதாமாதாம் சம்பளம் பெறும் இராணுவ உத்தியோகத்தர்கள் சம்பந்தப்பட்ட தீர்வாகவே இருப்பது தான் வேடிக்கையான சமாச்சாரம். வாலை விட்டு தும்பைப் பிடிப்பது போல் அவசரகாலச் சட்டத்துக்கு ஆதரவளித்து இராணுவத்துக்கு அதிகாரத்தை வழங்க உதவிவிட்டு, அந்த அதிகாரத்தின் அடிப்படையில் இராணுவ உத்தியோகத்தர்கள் பிரயோகித்த பலத்துக்கு எதிராக பாரளுமன்றப் பகிஷ்கரிப்பைச் செய்வது யாரை ஏமாற்ற என்று கேட்கத் தோன்றுகிறது.

உண்மையில் இவர்கள் பகிஷ்கரிப்பால் தான் இந்தக் கோரிக்கைகள் நிறைவேறின என்பதற்குக் கூட அவர்களது அறிக்கைகளை விட்டால் வேறு சான்றுகள் கிடையாது. இவர்கள் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிக்கிறார்கள் என்பது கூட உத்தியோகபூர்வமாக பாராளுமன்றத்துக்குத்



தெரியாத நிலையில் இவர்கள் பகிஷ்கரிப்பைக் கண்டு அரசு பணிந்தது. கோரிக்கைகள் நிறைவேறின என்பது வெறும் பூச்சுற்றல் தான்.

"நாட்டில் யுத்தத்தை நிறுத்து", "விடுதலைப் புலிகளுடன் பேசியாவது பிரச்சினையைத் தீர்", "தமிழ் மக்களை அடிமைகளாக நடத்தாதே" என்பன போன்ற பல கோரிக்கைகளில் ஒன்றை முன் வைத்துப் பாராளுமன்றப் பகிஷ்கரிப்பு செய்திருந்தால் அதில் ஒரு நியாயம் இருந்திருக்கும். அதை விடுத்து பாதுகாப்பு அமைச்சருடன் கூட்டமாகப் பேசி ஒரே நாளில் முடிவு காணக்கூடிய விடயங்களுக்கு நடத்தும் பகிஷ்கரிப்பு இராணுவ அதிகாரிகளின் முடிவை அங்கீகரித்து அதீதப் பெறுமதி கொடுத்து மண்டியிடும் கோழைத்தனத்தைத் தான் காட்டுகிறது. இந்தக் கோணங்கித்தனமான அரசியல் கட்சிகளை விடச் சாதாரண மனிதன் தைரியமானவன் என்ற முடிவல்லவா வருகிறது. அப்படியானால் கட்சிகள் ஏன்? அறிக்கைகள் ஏன்? புரட்சிகரக் கோஷங்கள் தான் ஏன்?

தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் வேகம் காணாது என்று வீரவரலாறு படைக்கப்புறப்பட்டவர்கள் வெற்றிகரமாகப் பணிந்து அரசியல் ஆற்று நீரோட்டத்தில் தொபுக்கடீர் என்று குதித்து நீந்தவும் தெரியாது கரையேறும் வழியும் புரியாது தத்தளிப்பதையும் பார்க்கின்ற எந்தத் தமிழ் மனிதருக்குத் தான் இவர்கள் மீது நம்பிக்கை வரும்?

தமிழர்களைத் தேடிப்பிடித்து அடித்து வெருட்டி தங்கள் வீரப்பிரதாபங்களைக் காட்டி வருவதன்றி இந்தத் தேசிய நீரோட்டக்காரர்கள் செய்த சாதனை தான் என்ன?

பாராளுமன்றத்தில் குனிந்து வளைந்து கும்பிடு போட்டு கூட்டி வெளியே வந்து எங்கள் வீரத்தைப் பார் என்று சரடுவிடும் இவர்கள் உண்மையில் தமிழ் மக்களின் தன்மான உணர்வில் அக்கறை இருந்தால் அவசரகாலச் சட்டத்தை எதிர்த்து வாக்களிக்கட்டும் பார்ப்போம்.

தங்கள் இருப்பைக் காப்பாற்றிக்கொள்வதற்காகப் போராடும் இவர்கள் தமிழர்களை மடையர்கள் என்று நினைத்துக் கொண்டல்லவா தமிழ்மக்களுக்காகப் போராடுபவர்கள் போல் "பாவ்லா" காட்டுகிறார்கள். கூட்டணியினதும் ஏனைய கட்சிகளுடையதும் பாவ்லாவை நார்நாராகக் கிழிக்கும் தினமுரசுக்கு ஈ.பி.டிபியின் இந்தபாவ்லாக்கள் எப்படியோ தெரியாமல் போய் விடுகிறது. நாரதருடைய எக்ஸ்-ரே கண்ணுக்கு அவை ஒருபோதும் அகப்படுவதேயில்லை. அறிக்கைக் கட்சிகள் என்று தமிழ்க்கட்சிகளைத் திட்டும் அதன் ஆசிரியர் நடராஜா அற்புதராஜாவே ஈ.பி.டி.பியின் உபதலைவராக அறிக்கை விட்டுப் பிழைத்ததும் பிழைப்பதும் ஒன்றும் மக்கள் அறியாததல்லவே. ஆக அறிக்கை விட்டு அரசியல் நடாத்தும் உரிமை ஈ.பி.டி.பிக்கு மட்டும் தான் உள்ளதென்கிறாரா தினமுரசு ஆசிரியர்.

இராஜதந்திரம் என்று விளக்கம் கூறிக் கொண்டு ஆட்சிகட்டிலுக்கு வரும் சிங்களக் கட்சிக்களுக்கு இவர்கள் வால்பிடிப்பதாயின் தமிழர்கள் நேரடியாக சிங்களக் கட்சிகளுக்கு வாக்களித்துக் கொண்டு இசைந்து போவது நல்லதல்லவா? இடையில் இந்தத் தரகர்கள் ஏன்?

தேர்தல் நெருங்க நெருங்க எத்தனை நாடகங்களை இவர்கள் மேடையேற்றப் போகிறார்களோ யார் கண்டார்?

தமிழ் மக்கள் எப்போதோ செய்த பாவம் தமிழ்க் கட்சிகள் உருவில் திரண்டு வந்து வதைத்துக் கொண்டிருக்கிறது. இது ஈ.பி.டி.பிக்கு மாத்திரமல்ல எல்லாத் தமிழ்க்கட்சிகளுக்கும் தான்!

- வினோத்

---

## புதிய இடதுசாரி முன்னணி

# உறவும்-முறிவும்!

கடந்த 12ஆம் திகதி, புதிய இடதுசாரி முன்னணியின் முதலாவது "ஆண்டு விழா" அரசாங்க லிகிதர் சேவைகள் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

1953 இல் நடந்த அரிசி விலையுயர்வை எதிர்த்து நடத்தப்பட்ட மாபெரும் ஹர்த்தால் நினைவு நாளும் இது தான். இத்தினத்திலேயே இந்த கூட்டத்தையும் ஒழுங்கு செய்திருந்தனர். அன்று அரசாங்கத்தையே கவிழ்க்கின்ற நிலைக்குச் கொண்டு சென்ற அந்தக் ஹர்த்தால் இன்று நினைவு கூரும் ஒரு பொருளாக மட்டுமே ஆகிவிட்டிருக்கிறது. ரஷ்யப் புரட்சி நினைவு, சீனப் புரட்சி நினைவு, கியுபப் புரட்சி நினைவு, பிரெஞ்சுப் புரட்சி நினைவு, இப்படியாக இடதுசாரி இயக்கங்களிடம் கடந்த கால வெற்றிப் பெருமிதங்களுடன் நிறைவுகொள்ளும் ஒரு வித நினைவு கூரல் கலாசாரம் மட்டும் தான் எஞ்சியிருக்கிறதோ எனும் சந்தேகத்தையே அவை எமக்கு விட்டு வைத்திருக்கின்றன.

இலங்கையின் இடதுசாரி இயக்கங்கள் சின்னாபின்னப்பட்டு, அதன் துடிப்பை இழந்து, அதன் வீச்சை இழந்து வெறும் 50களுக்கு முன்னரான அதன் செயற்பாடுகளை நினைத்து அந்த நினைவுகளோடே காலத்தைக் கழிக்கும் நிலையை வந்தடைந்தது வெறும் தற்செயலான ஒன்றல்ல.

முதலாளித்துவக் கட்சிகள் அடையாத அளவுக்கு இடதுசாரி இயக்கத்துள் இந்தச் சின்னா பின்னம் வந்ததன் பின்னணி என்ன?

இடதுசாரி இயக்கங்கள் முதலாளித்துவக் கட்சிகளுடன் கூட்டு வைத்து அவற்றிற்கிருந்த மக்கள் மதிப்பையும் நம்பிக்கையையும் இழந்ததன் காரணம் தான் என்ன?

அந்தளவுக்கு மக்கள் பிரச்சினைகளிலிருந்து விடுபட்டு விட்டார்களா? அல்லது பிரச்சினைகள் குறைந்து விட்டனவா? அல்லது முதலாளித்துவ கட்டமைப்பு அவர்களது பிரச்சினைகளைத் தீர்த்து தம்பால் நம்பிக்கைகொள்ளச் செய்து விட்டதா?

இவை தட்டிக்கழித்து தாண்டிவிட்டுச் செல்லக்கூடிய பிரச்சினைகள் அல்ல.

உண்மையைச் சொல்வதானால் பிரச்சினைகளின் வடிவங்கள் இன்னும் மாற்றம் கண்டு அளவு ரீதியில் பெருகியுள்ளன. ஆனால் அதற்கேற்றாற்போல இடதுசாரி இயக்கங்களின் தந்திரோபாயங்கள் மாற்றமுறவில்லை. அவை தந்திரோபாய வழிமுறைகள் எனக் கண்ட வழிகள் அனைத்தும் இன்று பெரும்பாலான உலக நாடுகளில் இடதுசாரி இயக்கங்ளின் பின்னடைவுக்கு இட்டுச் சென்றுள்ளன என்பதை இன்று வரலாற்றை மறுமதிப்பீடு செய்யும் புரட்சிகர சக்திகள் பல தெளிவுறுத்தி வருகின்றன.

இந்த மதிப்பீடுகள் இலங்கை இடதுசாரி இயக்கத்துக்கும் பொருந்தும். மதிப்பீடுகள் என்ற பேரில், ஒவ்வொரு முறையும் இடதுசாரி இயக்கத்திலிருந்து பிளவுபெறுகின்ற குழுக்கள் செய்யமுயற்சிக்கின்ற/செய்திருக்கின்ற போக்குகளைக் காணக்கூடியதாக இருக்கிறதென்றாலும் அவை இதுவரை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தக் கூடியளவுக்கு போதுமானதாக இருக்கவில்லை.

இந்தப் பின்னணியில் வைத்துத்தான் சமீபத்தில் புதிய இடதுசாரி முன்னணி பிளவுற்ற நிகழ்ச்சியையும் அது பற்றிய மதிப்பீட்டையும் செய்யும் கடமையும் அவர்களை வந்தடைகிறது.

ஆனால் இவ்வாறான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்ற போதெல்லாம் உடனடியாக மறுத்தும், அவ்வாறான விமர்சனங்களை முன்வைத்தவர் மீதான தனிப்பட்ட தாக்குதல்களை மேற்கொள்வதும், அரசியல் கருத்துக்குப் பதில் கூறாது போலிக்குற்றச்சாட்டுகளைச் சுமத்துவதும், "என்.ஜீ.ஓ", "சீ.ஐ.ஏ", "அமெரிக்கக் கைக்கூலி" என வழமையான வரட்டுத்தனமான குற்றச்சாட்டுக்களை வசதியாகச் சுமத்தி விட்டு தப்பிவிடுவதும் தான் இங்கு நிகழ்கின்றன. அவை பற்றித் தொடர்ந்து விவாதிக்கக் கூட வழிகளைத் தராது ஒட்டுமொத்தமாக முத்திரை குத்தி மூடிவிடுவது இலகுவானது தான். ஆனால் அதன் விபரீதம் சாதாரணமானது அல்ல.

மக்கள் முன் சுயவிமர்சனத்துக்கு கொஞ்சமும் தயாரில்லாத எந்தவொரு கட்சியும் மக்களின் கட்சியாக இருக்கப்போவதில்லை. அது அராஜக, ஜனநாயக விரோத, மக்கள் மீது நம்பிக்கை கொள்ளாத கட்சியாக, மக்களை அணிதிரட்ட முடியாத கட்சியாகவே தொடாந்து இருக்கும் என்பது தான் இடதுசாரி இயக்க வரலாறு இது வரை கற்றுத்தந்த பாடம். ஒரு போதும் புரட்சிக்கு இது உதவப் போவதில்லை. குறைந்தபட்சம் மார்க்சியத்தின் அ.ஆ.இஐக் கூட இவர்கள் கடக்காததையே இது சுட்டும்.



புதிய இடதுசாரி முன்னணி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து பல தடவைகள் சரிநிகரில் அது பற்றிய அவ்வப்போதைய நிலைமைகள் குறித்து கட்டுரைகள் வெளியிடப்பட்டபோது இத்தகைய மோசமான எதிர்கொள்ளலைத் தான் சந்திக்க முடிந்தது.

இறுதியாக புதிய இடதுசாரி முன்னிணிக்குள் விக்கிரமபாகு நடந்துகொண்ட முறை, சபாநாயகர் பதவியில் அவர் காட்டிய ஆர்வம் என்பன பற்றி வெளிக்கொணரப்பட்டிருந்த உண்மைகளை புதிய இடதுசாரி முன்னணியில் அங்கம் வகிக்கும் புதிய ஜனநாயகக் கட்சியின் ஏடான புதிய பூமி பத்திரிகை எதிர்கொண்ட விதமும் அப்படித்தான் அமைந்தது.

ஆனால் அக்கட்சி புதிய இடதுசாரி முன்னணியிலிருந்து வெளியேறிதன் பின்னர் தான் விக்கிரமபாகு சபாநாயகர் பதவியில் காட்டிய ஆர்வத்தை புட்டுபுட்டு வைக்கத் தொடங்கியிருக்கிறது. முன்னணி பிளவுபட அது ஒரு முக்கிய காரணம் என இன்று, பிரசாரம் செய்கிறது. இவ்விமர்சனங்களை முன்வைத்த கட்டுரையாளர்கள் யாரும் ஒரு போதும் புதிய இடதுசாரி முன்னணிக்கு சரிநிகரில் வக்காலத்து வாங்கியதும் கிடையாது. அது சிதைவடைய வேண்டுமென கனவு கண்டதும் கிடையாது.

ஆனால் அது நடந்தது. அதற்கு காரணங்களாக சுழற்சி முறையில் முன்னணியின் செயலாளர் பதவி மாற்றப்படவேண்டுமென ஏற்கெனவே அங்கத்துவ கட்சிகள் கொண்டிருந்த உடன்பாட்டை நவ சமசமாஜக் கட்சி மீறியதாகவும், விக்கிரமபாகு சபாநாயகர் பதவிக்கு ஆசைப்பட்டதை தாங்கள் நிராகரித்ததாகவும், கடந்த மாகாண சபைத் தேர்தலில் விக்கிரமபாகுவுக்கு அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ சுவரொட்டிகளை அச்சடித்து கொடுத்திருந்ததாகவும் பல குற்றச்சாட்டுக்களை தற்போது வெளிவந்துள்ளன. இவை மறுக்கக் கூடியவையல்லத்தான். ஆனால் பிரச்சினை அதுவல்ல.

இன்றைய இந்தப் பிளவை வெறும் இடதுசாரி முன்னணியின் பிளவாகப் பார்ப்பதா, அல்லது இதனை இடதுசாரி இயக்கப் போக்கின் குறியீடாக பார்ப்பதா என்பதே கேள்வி. வெறும் சம்பவம்

- 19

நன்றி - நூலகத்திட்டம்



### மட்டக்களப்பு:

# பலப்பரீட்சையில் புலிகளும் படையினரும்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக கறுப்புச் சீருடை அணிந்த இராணுவத்தினர் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் 1990ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் மட்டக்களப்பில் கப்டன் முனாஸின் செயற்பாடுகள் மக்களைக் கிலி கொள்ளச் செய்தது போலவே தற்போது கிலி கொள்ள வைத்திருக்கிறது.



அப்பாவிப் பொது மக்களைத் துன்புறுத்துவதன் மூலம் புலிகளின் செயற்பாடுகளை நகரில் கட்டுப்படுத்தலாம் என்பதும், இதன் மூலம் இங்கு அரசியல்வாதிகளின் தேவைகளை மக்களுக்கு உணர வைக்கலாம் என்ற பாணியிலேயும் இராணுவத்தினரின் இந்த நடவடிக்கைகள் அமைவதாகப்படுகிறது. இதனை வைத்துக் கொண்டே தான் நினைத்ததை அரசு சாதிக்க முனைகின்றது.

எதிர்வரும் காலங்களில் நடைபெறப் போவதாகக் கூறப்படும் ஜனாதிபதித் தேர்தலையோ, பொதுத் தேர்தலையோ முன்வைத்து கிழக்கு மாகாணத்தில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியை நோக்கி இராணுவ நடவடிக்கையையும் நடத்த வேண்டிய தேவை அரசுக்கு இருந்து வருகின்றது. இவ்வாறான ஒரு இராணுவ நடவடிக்கையின் ஊடாக குறிப்பிட்ட சில இலக்குகளை அரசு அடைய முனைகின்றது.


குறிப்பாகத் தங்களிடம் இராணுவ ரீதியாகப் புலிகளை எதிர் கொள்ளக் கூடிய சக்தி இருக்கின்றது என்பதை தென் பகுதியில் காட்டுவதன் மூலம் தேர்தலை நோக்கிய பிரச்சாரத்திற்கு இராணுவ நடவடிக்கையைப் பயன்படுத்த நினைக்கின்றது. இதேவேளை புலிகளின் தாக்குதல் அதிகரிக்கும் பட்சத்தில் அல்லது புலிகளின் ஊடுருவல் அதிகரிக்கும் பட்சத்தில் அதனைக்கட்டுப்படுத்தும் நோக்கில் இராணுவக் கட்டுப்பாடு அற்ற பகுதியை நோக்கிய படை நகர்வு திடீர் என மேற்கொள்ளப்பட்டாலும், அது ஓரிரு நாட்களில் ஓய்ந்து விடுகின்ற நடவடிக்கையாகவே இருக்கிறது. இதனூடாக மட்டக்களப்பு நகருக்குள் ஊடுருவ முயற்சிக்கும், தமது செயற்பாடுகளை முனைப்புடன் செயற்படுத்த இருக்கும் புலிகளின் முயற்சிக்குத் தாமதத்தை ஏற்படுத்துகின்ற செயற்பாடாகவே இருக்கும். இவ்வாறான நடவடிக்கையை மேற்கொள்கின்றபோது அதன் உண்மைப் பரிமாணத்தை உணர்ந்து கொண்ட புலிகளும் தமது ஆயுத பலத்தையோ, ஆட்பலத்தையோ பிரயோகிக்காமல் தாம் நிலை கொண்ட பிரதேசங்களில் இருந்து பின்வாங்குவதும், நடவடிக்கை முடிந்த கையோடு தமது பழைய நிலைகளுக்கு திரும்புவதும் வழமையான நடப்பாகவே இருந்து வந்தது.

உண்மையில் இதன் அடிப்படையில் நின்று பார்க்கும் போது அரசு வன்னிப் பகுதியில் எந்தளவு கவனம் செலுத்தி முனைப்புடன் செயற்பட்டு வருகின்றதோ அதே அளவு கவனத்தை இங்கும் செலுத்தி வருவது புலனாகும். அதனை முறியடிக்க வேண்டிய தேவை புலிகளுக்கு இருந்து வருகின்றது. அதேவேளை புலிகளின் தளமாகக் கருதப்படும் வன்னிப்பிரதேசம் பாதுகாக்கப்பட்டால் தான் புலிகளின் எந்தவொரு செயற்பாடும், அது அரசியலாக இருந்தாலும் சரி, இராணுவ நடவடிக்கையாக இருந்தாலும் சரி அது வெற்றிகரமானதாக இருக்க முடியும். அதற்காக என்ன விலைகொடுக்கவும் புலிகள் தயாராக இருந்து வருகின்றார்கள்.

இதனைப் பரிந்து கொண்ட இராணுவம் புலிகள் வன்னியில் தமது கவனத்தைக் குவித்திருக்கும் தருணங்களைப் பயன்படுத்தி இலேசான முறையில் கிழக்கைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து விட முடியும் எனக் கருதுகிறது. என்ன தான் இருந்தாலும் புலிகளால் தங்களை எதிர்த்து நிற்கக் கூடிய தளமும் இங்கு இல்லை, பலமும் இல்லையென்ற நிலையிலேயே இராணுவ நடவடிக்கைக்கான சகல ஆயத்தங்களும் செய்யப்பட்டது.

புலிகளின் முன்தள பிரதேசங்களான கொக்கட்டிச்சோலை, இலுப்பையடிச் சேனை, கதிரவெளி போன்ற பிரதேசங்களை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதன் மூலம் புலிகளின் கிழக்கின் பின்தள பிரதேசமான தரவையை (பேறூட்) முற்றாக தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது இலகுவான காரியம் என்றும் கருதியது. புலிகளின் பின் தளத்தை முற்றுகையிடுவதற்கு மகோயா, மின்னேரி, புலுகுணாவ போன்ற பகுதிகளாலும் இராணுவம் ஊடுருவ வேண்டியும் இருந்தது. இந்நிலையிலேயே கரடியனாறு மின்னேரிய பாதைகளில் ஏற்படும் சிக்கலை தீர்ப்பதற்காகவே தேசிய துணைப்படையின் (ராசிக்குழு) உதவியையும் இராணுவத்தினர் நாடியிருந்தனர். இந்த வகையிலேயே இராணுவ நடவடிக்கை தொடர்பான முழுத் திட்டமும் அமைந்திருந்தது. உண்மையில் இராணுவத்தின் இத்திட்டத்துக்கு அமைய இந்நடவடிக்கை அமைந்திருக்குமானால் கிழக்கில் புலிகளுக்கு பாரிய பின்னடைவு ஏற்பட இடமிருந்தது.

இந்நிலைமையிலேயே புலிகள் சாதுரியமாக துடுப்பெடுத்தாடத் தொடங்கினர். இதன் முதற்கட்டமே புலிகளின் தற்கொலைக் குண்டுதாரி மூலம் மே 29ம் திகதி மட்டக்களப்பு திருமலை வீதியில் வைத்து ர்சிக் கொல்லப்பட்டார். இதன் அடுத்த கட்டமாக வாகரை இராணுவ முகாமுக்குள் வைத்து தற்கொலைக் குண்டுதாரியினால் சங்கிலியன் என்று அழைக்கப்படும் மேஜர் கருணாநாயக்க கொல்லப்பட்டார். இவர் 1981 தொடக்கம் 1983 காலப்பகுதி வரையில் வாழைச்சேனையில் இருந்த "றமணி" ஐஸ் வாடியில் கடமை புரிந்தவர். களுத்துறையைச் சேர்ந்த இவர் இங்கிருந்து தென்பகுதிக்கு மீன் ஏற்றுமதி செய்து கொண்டிருந்தவர். இந்தக் காலப்பகுதியில் இவருக்கு கல்லடி முதல் கதிரவெளி வரையான கரையோரப் பகுதிகள் பழக்கப்பட்ட இடமாகவே இருந்தன. 1990ம் ஆண்டு வாழைச்சேனையில் கடமையாற்றிய போது பலர் கொல்லப்பட்டதற்கும், காணாமற் போனதற்கும் சூத்திரதாரியாக இருந்திருக்கின்றார். இந்த காலப்பகுதியில் இவருடன் காயமடைந்த மேஜர் கருணதாசவும் இருந்ததாகக் கூறப்படுகின்றது. 94,95களில் இவர் வாகரையில் கடமையாற்றிய வேளையில் பல பெண்களின் 'கற்பை'ப் பற்றி அறிய துகில் உரிந்ததாகவும் அப்பகுதி மக்கள் கூறுகின்றனர். அது மட்டுமல்லாமல் 96களில் கொம்மாந்துறை பகுதியில் கடமையாற்றிய வேளையில் இவருக்கு ஒரு பிள்ளை இருப்பதும், அந்தப் பிள்ளையும் தாயும் புலிகளுக்கு பயத்தில் தற்போது தலைமறைவாக இருந்து வருவதாகவும் தெரிய வந்திருக்கின்றது.



மீண்டும் 98இல் வாகரையில் இராணுவம் நிலைகொண்டபோது இங்கும் தனது பழைய கைங்கரியங்களைச் செய்யத் தொடங்கியிருக்கின்றார். அது மட்டுமல்லாமல் புலிகளின் பகுதிக்கு செல்வதற்கு படையினர் இயலாது என்றிருந்தபோதும் அண்மையில் புலிகளின் வாகரைக்கு அடுத்தாற்போலுள்ள வம்மிவெட்டுவானுக்கு படையினருடன் சென்று கூட்டம் வைத்து விட்டு வந்திருக்கின்றார். வாகரைப்பகுதியின் முழு காட்டுப் பிரதேசமும் தெரிந்த ஒரே ஒருவர் கருணநாயக்காவே. இராணுவ நடவடிக்கை தொடங்குமானால் புலிகளுக்கு முழு சிக்கலையும் கொடுப்பவராக கருணாநாயக்கவாகவே இருந்தார். வாகரைப் பிரதேசத்தின் இராணுவக் கட்டுப்பாடற்ற அம்பந்தனாவெளி, தட்டுமுனை, வம்மிவெட்டுவான், பால்ச்சேனை, கதிரவெளி பகுதி மக்களுக்கான சமுர்த்தி அட்டைக்கான உணவுப் பொருட்கள் வாகரை முகாமுக்குள் வைத்தே கொடுக்கப்படுகின்றது. இதைப் பயன்படுத்தியே அங்கு ஏற்கெனவே கொண்டு செல்லப்பட்ட குண்டு, முகாம் எல்லைக்குள் வைத்தே தற்கொலை குண்டுதாரிக்கு பொருத்தப்பட்டது. கூட்டுறவுக்கடைக்குச் செல்லும் வழியால் தான் கருணநாயக்கவின் இடத்துக்கும் போக வேண்டும். கூட்டுறவுக் கடைக்குள்ளாலும் குறிப்பிட்ட இடத்தை அடைய முடியும். குண்டுதாரிக்குச் சிரமம் இல்லாதவாறு வழியிலே கருணநாயக்க இருந்து கொண்டதும் இத்தாக்குதலை வெற்றிகரமாக நடத்த முடிந்தது.



இதே போன்றே கடந்த 13ம் திகதி பார்வீதியில் சைட் சாஜர் (Side Charger) தாக்குதலையும் புலிகள் வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளார். தாக்குதல் நடந்த இடத்துக்குக் கிழக்கே 300 மீற்றர் தூரத்தில் பிரதான பொலிஸ் நிலையம், மேற்கே சி.ரி.டி. பொலிஸ் காவல் நிலையம், வடக்கே ரெலிகொம், தெற்கே லொயிட்ஸ் அவனியூ என 200 மீற்றர் தூரங்களில் காவற்சாவடிகள், இவற்றைச் சுற்றி இராணுவக் காவலரண்கள் எனப் பலத்த பாதுகாப்புகளுக்கும் மத்தியில் இருபுலிகள் வந்து பட்டப்பகலில் இத்தாக்குலை நடத்திவிட்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளனர்.

உண்மையில் சம்பவ தினத்துக்கு முதல் நாள் இரவே பாவனையில் ஈடுபடுத்தப்படாமல் இருந்த கடையின் கூரையினால் இறங்கியே குண்டைப் பொருத்தி விட்டு சென்றிருக்கிறார்கள். சம்பவதினம் வாகனத் தொடரணி புறப்படுவதற்கு பத்து நிமிடங்களுக்கு முன்பே குண்டு பொருத்தப்பட்ட இடத்துக்கு சென்ற இருவரும் குண்டை இயக்கத் தயாராக நின்றிருக்கின்றார்கள். வாகனத் தொடரணியில் குறிவைத்த வாகனம் வரும் வரையும் காத்திருந்து வயரை பொருத்தி குண்டை வெடிக்க வைத்துவிட்டு இருவரும் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றிருக்கிறார்கள். போகும் வழியிலேயே கல்லடியில் ராசிக்குழுவைச் சேர்ந்த சுதாவை சுட்டுவிட்டுச் சென்றிருக்கிறார்கள். ஒட்டுமொத்மாகப் பாக்கப் போனால்,

1. இராணுவத்தால் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு கிழக்கிலும் புலிகள் வலுப் பெற்றிருக்கிறார்கள் என்பதும் ,
2. என்ன தான் கட்டுக்கோப்புடன் இராணுவம் இருந்தாலும், ஊடுருவி வந்து செயல்படக்கூடிய வழிமுறைகளை புலிகள் உருவாக்கி வைத்துள்ளார்கள் என்பதும்,
3. படையினரின் நடவடிக்கைகளையும் மீறி மட்டுநகர்ப் பகுதிக்குள் தாங்கள் நினைத்ததைச் செய்யக் கூடியளவு வளங்களை புலிகள் கொண்டிருக்கின்றார்கள் என்பதும் புலனாகிறது.

கொக்கட்டிச்சோலை, இலுப்படிச்சேனை, கதிரவெளி போன்ற புலிகளின் முன்தள பிரதேசங்களைப் போல் மட்டக்களப்பு நகரையும் புலிகள் தங்களது முன்தள பிரதேசமாக தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றார்கள் என்பது தான் உண்மை.

**ஜே.கே.வீ.**

நன்றி - நூலகத்திட்டம்



# யுத்தத்தில் வெல்லப் போவது யார்?

யுத்தம் கொடூரமானது. அழிவுகளை மட்டுமே விட்டுச் செல்வது. வெற்றி பெறுவர்களும் சரி, தோல்வியுறுபவர்களும் சரி யாருமே



முழுமையான வெற்றியின் சந்தோசத்தை அடைய முடியாத படிக்கு அது பாரதூரமான தாக்கங்களை ஏற்படுத்துகிறது.

ஆயினும் யுத்தங்கள் தொடர்கின்றன. அரசியல் பிணக்குகள், பொருளாதாரப் பிணக்குகள் யுத்தங்களாக வெடிக்கையில் யுத்தத்துடன் சம்பந்தப்பட்டவர்கள், அவர்களது சொத்துக்கள் மட்டும் அழிவதில்லை. சம்பந்தப்படாதவர்கள் கூட தமது உயிர்களையும் உடமைகளையும் இழக்கிறார்கள். இடப்பெயர்வுகள், நோய், வறுமை, சுற்றுச்சூழல் சேதம் என்று எல்லாவிதமான சமூகக் கொடுமைகளையும் ஒருசேர அழைத்து மக்கள் மீது திணிக்கின்றது அது. இவையனைத்துக்கும் மேலாக குழந்தைகள் முதல் வயோதிபர் வரை அனைவரும் மனநோயினால் பாதிக்கப்படுகிறார்கள். யுத்தம் காரணமான அச்சம் மட்டுமல்லாமல், அதனால் ஏற்படும் பாதிப்புக் காரணமாக எழும் எதிர்ப்புணர்வு கூட தீவிர வன்முறையை வளர்த்து விடுவதால், முழுச் சமூகமும் நோய்க்கூறான சமூகமாக மாறிச் சீரழிகிறது.

ஆயினும் யுத்தங்கள் தொடர்கின்றன.

அரசியல் ரீதியான பிரச்சினைகளுக்கு அரசியல் ரீதியான தீர்வுகளைக் காண்பது அவசியம் என்று சொல்லிக் கொள்ளாத அரசியல் தலைவர்களே கிடையாது. ஆனால், அவர்கள் பிரச்சினைக்குத் தீர்வாக, பிரச்சினையின் காத்திரத் தன்மையை உணர்ந்து, அதற்கேற்ற வழவகைகள் என்ன என அறிவு பூர்வமாக தமக்குத் தோன்றுபவற்றை முன் வைத்துச் செயற்படுவதற்குப் பதில், பிரச்சினையின் உக்கிரத்தில் குளிர் காய்தலிலேயே அதிக கவனம் செலுத்துகிறார்கள்.

இலங்கை அரசாங்கமும், அதன் சிரேஷ்ட தலைவர்களும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண என்று ஒரு தீர்வுப் பொதியை முன்வைத்தார்கள். பிரச்சினைக்கு தீர்வு என்ன என்று ஆராய்வதைவிட, அதை முன்வைப்பதால் என்னென்ன புதிய பிரச்சினைகள் எழலாம் என்று யோசிப்பதிலேயே அவர்கள் கவனம் பெரிதும் குவிந்திருந்தது. அப்படிக் குவிந்திருந்தது ஒன்றும் தவறான விடயமல்ல. ஆனால் அவ்வாறு எழக் கூடிய பிரச்சினைகளை எப்படிக் கையாள்வது என்ற கேள்விக்கு அவர்கள் வைத்திருந்த பதில் தான் ஆச்சரியத்துக்குரியதாக இருந்தது.

எழக் கூடிய பிரச்சினைகளை எதிர் கொள்ளும் விதத்தில் தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ளும் ஆர்வமோ, அக்கறையோ, நெஞ்சுரமோ அற்றவர்களாக, அவர்கள் அவற்றை எழாமல் தடுப்பதற்குச் சுலபமான வழிகளைத் தேடினர். அரசியல் எதிர்ப்புகள், முரண்பாடான கருத்துகள் வெளிவருவது, தமது சொந்தக் கருத்துக்களின் அடிப்படையிலான செயற்பாட்டிற்கு இடைஞ்சலாக இருக்கும் என்ற ஒரே காரணத்துக்காக அக்கருத்துக்களை தடை செய்தல், அதாவது அக்கருத்துக்களைப் பேசுவோரை அழித்துவிடுதல் என்பது மிகவும் இலேசான ஒரு வழிமுறையாகும். சிந்தனைகள் சிந்தனைத் தளத்தில் எதிர் கொள்ளப் படுவதற்குப் பதில் துப்பாக்கிமுனையில் எதிர் கொள்ளப்படுவது மிகவும் இலகுவானதும் உடனடியாக இலாபம் தரக்கூடியதுமான ஒரு செயல்தான். இந்தச் செயலைத்தான் தனிநபர் பயங்கரவாதம் என்பார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகள் முதல், இப்போது சமாதான நீரோட்டத்திற்கு வந்துள்ள முன்னாள் இயக்கங்கள் வரை எல்லோருமே இந்த வழியில் தான் தமது இயக்கங்களை வளர்த்துவிட முனைந்தார்கள். விளைவு, எல்லா இயக்கங்களையும் அழிவைநோக்கித் தள்ளியது. சந்தர்ப்பமும் சூழ்நிலையும் வாய்ப்பாக உள்ள, ஆயுதபலம் மிக்கவர்கள் மட்டும் எஞ்சினார்கள். மற்றவர்கள் இல்லாமல் போனார்கள்.

விடுதலைப் போராட்டம் இப்பயங்கர வாதத்தத்திற்கு பலியாகிப் போய் விட்டது. விடுதலைக் கோட்பாட்டுடன் இணைந்த ஜனநாயகம், அடிப்படை மனித உரிமைகள், சமாதானம், சுதந்திரம் என்பவை அர்த்தமிழந்த வெற்றுச் சொற்களாகிப் போயின.

எஞ்சியிருப்பதெல்லாம் வெற்றுத் துப்பாக்கிகளும் குண்டுகளும் மட்டும் தான் மக்கள் தமது சுய சிந்தனையை சுதந்திரத்தை கொஞ்சம் கொஞ்சமாகப் பறி கொடுக்க, துப்பாககிகள் சுதந்திரத்தை அனுபவிக்கத் தொடங்கின. இது தமிழ் மக்களின் அரசியல் போராட்ட வரலாற்றில், அந்தப் போராட்டத்தில் குதித்தவர்கள் சாதித்த சாதனை என்றால், அரசியல் ரீதியாகப் பிரச்சினையை தீர்க்கவென இறங்கியவர்கள் இன்னொரு வகையில் அதே இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். பிரச்சினையைத் தீர்க்கும் தீர்வு முயற்சியில் எழக்கூடிய பிரச்சினைகளுக்காக, பிரச்சினை வரக்கூடிய எல்லாவற்றையுமே கைவிடத் தொடங்கினர்கள். தேசியக் கொடியை மாற்றுவது பிரச்சினையாகும். எனவே அதிலே கைவைக்க வேண்டாம். பௌத்தமதம் அரசமதமாக இருப்பதை மாற்றுவது பிரச்சினையாகும் அதைத் தொடவேண்டாம். மாநிலங்களின் அதிகாரம் விரிவான பரவலாக்கத்துக்கு அனுமதிக்கப்படுவது தமிழீழம் பிரிந்து போக அனுமதி வழங்குவதாக அமையலாம். எனவே அதையும் செய்யக் கூடாது என்று எல்லாவற்றையும் கைவிடத் தொடங்கினார்கள். காலம் போனது. பெருமளவு பொருட்செலவு நடந்தது. ஆனால் ஒரு அங்குலம் கூட முன்னேறவில்லை. பிரச்சினை இந்தக் காலத்துள் புதிய புதிய பரிமாணங்களுடன் பருத்து வளர்ந்தது.

ஆக இரண்டு தரப்பும்- தனிநபர் பயங்காரவாதத்தரப்பும் சரி, அரசியல் தீர்வுப் பொதி தயாரிப்போர்களும் சரி செய்தது ஒன்றைத் தான். இலேசான வழியில் நிலமையைச் சமாளிக்க முயன்றது தான். ஒரு நீலன் திருச்செல்வத்தை கொலை செய்கிற ஒருவருடைய செயலுக்கும், தீர்வுப் பொதியை யாருக்கும் பிரச்சினை வராத விதத்தில் எழுதுபவரின் செயலுக்கும் இடையில் உள்ள வேறுபாடு அதிகம் இல்லை.

இரு தரப்பும் பிரச்சினையை அதன் முழுப் பரிமாணத்துடன் அணுகவில்லை.

பதிலாக இலேசான வழிகளை நாட முயலகிறது.

இப்போது தயாரிக்கப்பட்டிருக்கும் தீர்வுப் பொதி பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்படப் போவதாக இருந்த தீர்மானம் திரும்பவும் கைவிடப்பட்டுள்ளது. அந்த வேலையை அடுத்த வருடம் செய்யலாம் என்று அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆக அதுவரைக்கும் இவர்கள் செய்யப் போவது என்ன?

ஐ.தே.கவுடன் பேசி ஒருமைப்பாட்டுக்கு வரப்போகிறார்களாம். கடந்த ஐந்தாண்டுகளாகச் செய்யாத புதிய செயலை இப்போது இனி வரவுள்ள ஓராண்டு காலத்துள் செய்யப போகிறார்களாம்.

ஒரு காரியம் நடக்காது, நடக்க விடமாட்டோம் என்று சொல்வதற்கும், அதைச் செய்கிற செயற்படுத்துகிற காலத்தை இழுத்தடிப்பதற்கும் இடையில் அதிக வேறுபாடு இல்லை. முதலாவது உடனடியான செயற்பாடு. இரண்டாவது கொஞ்சம் காலமெடுக்கிற செயற்பாடு.

தனிநபர் பயங்கரவாதம் நேர்ப்படியானது, அச்சமூட்டுவது, மக்களை மௌனிகளாக்கி பிரச்சினைக்கான தீர்வுக்கான பங்களிப்பில் இருந்து அவர்களை அந்நியப்படுத்துவது.

இழுத்தடிப்பும், வெட்டிக்குறைப்பும் என்று தொடரும் பொதிச் செயற்பாடு மறைமுகமானது, எதிர்காலம் குறித்த அச்சத்தை எப்போதும் நிலவ வைப்பது. மக்களை எத்திப் பிழைப்பது, அவர்கள் சரியாக எதற்கும் ஆதரவு தருவார்கள் என்று நம்ப மறுப்பது. இதன் மூலம் அவர்களை அவர்களது பங்களிப்பில் இருந்து அந்நியப்படுத்துவது.


ஆக இரண்டும் மக்களைப் புறந்தள்ளி பயங்கரவாதத்தின் ஆதிக்கத்தினை அவர்கள் மீது திணிப்பதினையே நோக்கமாகக் கொண்டவை.

இதில் எது சிறப்பானது என்ற ஆய்வில் ஈடுபடுவது அர்த்தமற்றது. இரண்டுமே மக்களின் நலன்களிலிருந்து தூர விலகி நிற்பவை. சரியான வார்த்தைகளில் சொல்வதானால் அவற்றுக்கு நேரெதிரானவை.

ஒடுக்குமுறைக்கு எதிராக போரிடுவது ஒரு ஜனநாயக உரிமை. அந்த ஒடுக்கு முறை ஆயுத முனையில் வரும் போது, எதிர்ப்புப் போராட்டமும் ஆயுதம் ஏந்துவது தவிர்க்க முடியாதது. ஆயுதம் ஏந்திய ஒரே காரணத்திற்காக ஒரு போராட்டம் ஜனநாயகத் தன்மையை இழந்து விட்டதாகக் கொள்ள முடியாது.

ஆனால் ஜனநாயகப் பண்புகளுக்கும் ஆயுதங்களுக்கும் இடையில் என்றும் சுமுகமான உறவு இருந்ததில்லை என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

ஆயுதம் ஏந்திய போராட்டம், மக்களின் நலனுக்காக, அவர்களால் செய்யப்படுவதாக அமைகையில் அது நீதியின் பேரால் நடக்கிற ஒரு ஜனநாயகப் போராட்டமாகிறது.



ஆனால், அவர்களை அந்நியமாக்கி விடுகிற செயற்பாடுகள், அவை ஆயுதம் ஏந்தினாலென்ன ஏந்தாவிட்டால் என்ன ஜனநாயகம் என்ற சொல்லின் அர்த்தத்திலிருந்து விலகி விடுகின்றன.

போராட்டம் என்பது யுத்தம் என்ற குறுகிய சொல்லுக்குள் அடக்கப்பட்டுவிடுவது அல்ல. அது பரந்து விரிந்த அர்த்தங்களைக் கொண்டது. யுத்தமும் அதன் ஒரு பகுதியாகி இருப்பது உண்மையாயினும் அதுவே முழுமையல்ல. இதனால் தான், ஒரு யுத்தத்தினாலான வெற்றி முழுமையான சந்தோசத்தை தரப்போவதில்லை என்று ஆரம்பத்தில் சொன்னோம்.

யுத்த நிறுத்தங்கள் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வரப்போவதில்லை, பிரச்சினைகளை களைந்து விடுவதில்லை.

ஆயினும், அது பிரச்சினையை தீர்க்கும் வழிகளைப் பற்றி சிந்திக்கும் அவகாசத்தைத் தருகின்றது.

"யுத்தத்தின் கொடுமையை புத்திஜீவிகளும் அரசியல்வாதிகளும் முற்றாக உணரவில்லை" என்கிறார் அமைச்சர் பீரிஸ். அவர் சொல்லுவதன் அர்த்தம் அவரையும் அவரது சகாக்களையும் தவிர்ந்த அரசியல்வாதிகளும் புத்திஜீவிகளும் இதைப் புரிந்து கொள்ளவில்லை என்பது தான். ஆனால் புரிந்து கொண்ட அமைச்சரின் அதை முடிவுக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கை என்ன?

யுத்தத்தின் கொடுமையை உணர்ந்தவர் அதை நிறுத்த என்ன முயற்சியை எடுத்திருக்கிறார்? குறைந்த பட்சம் அமைச்சரவை கூட்டத்திலாவது இதை ஒரு பிரேரணையாகக் கொண்டுவர அவர் முனைந்திருக்கிறாரா?

இல்லை.

மற்றவர்களை குறைகூறிக் கொண்டு தமது குறைகளை மறைக்க முயலகின்ற முயற்சி ஒன்றும் புதிய தொழில் நுட்பம் அல்ல. அரசியல் வாதிகட்கு இது கைவந்த பழைய கலை.

யுத்தத்தை தொடர்வதற்கு இதைவிட நல்ல ஒரு கெட்டித்தனமான ஆதரவுப் பேச்சை வேறுயாரும் பேசிவிட முடியாது என்பது தான் உண்மை.

நீலனின் கொலை தொடர்பான பத்திரிகை ஒன்றின் கேள்விக்குப் பதிலளித்த புளொட் தலைவர் சித்தார்த்தன் இப்படிச் சொல்லியிருந்தார்:

"கடும் போக்காளர்களால் கொல்லப்படுக்கின்ற முதலாவது அரசியல்வாதி அல்ல அவர். அரசாங்கம் அரசியல் தீர்வொன்றைக் காண செயற்திறன் மிக்க நடவடிக்கையில் இறங்காவிட்டால் அப்படிக் கொல்லப்படபட் போகிற கடைசி ஆளும் அவரல்ல"

அரசாங்கம் தீர்வு காணும் விடயத்தில் காட்டும் அசிரத்தையே இத்தகைய செயல்களுக்கு காரணம் என்று கூறுகிறார் அவர்.

ஆம். யுத்தம் நடக்கிற நிலைமைக்கு எது காரணம்?

அதை இல்லாமல் ஆக்கவல்ல தீர்வு என்ன?

அது எங்கே இருக்கிறது?

அதற்கான அரசியல்வாதிகளினதும் புத்திஜீவிகளதும் பொறுப்பு என்ன?

ஜீ.எல்.பீரிஸ் சொன்னது போல அவர்கள் அதன் உக்கிரத்தை இன்னமும் உணரவில்லையா?

இவற்றுக்கெல்லாம் என்ன பதில்?


தமிழ்க் கட்சிகளால் இதற்கு ஒரு பதில் சொல்லக் கூடுமானால் யுத்தம் வெறும் இனவெறியர்களுக்கு மட்டுமான மொழியாக மாறி விடும். அதன் பிறகு அதன் வலுவும் அற்றுப் போய்விடும் இது தான் இன்றைய நிலைமை.

நாசமறுப்பான்

நன்றி - நூலகத்திட்டம்



# இராணுவத்திற்கு எல்லாப் பெண்களும் ஒன்றுதான்!



இதுவரை காலமும் தமிழ்ப் பெண்களை மட்டும் இலக்காகக் கொண்டு பாலியல் வல்லுறவுப் போர் நடத்தி வந்த இலங்கை இராணுவம், அண்மைக் காலமாக படையினரின் பூரண கட்டுப்பாட்டின் கீழுள்ள முஸ்லிம் எல்லைக் கிராமங்களில் வாழும் முஸ்லிம் பெண்களின் மீதும் தமது சேட்டைகளை அவிழ்த்துவிட ஆரம்பித்துள்ளது. மன்னார், முல்லைத்தீவு தொடரில் ஓட்டமாவடி - ஹிஜ்ரா நகர் முஸ்லிம் கிராமத்தில் சமாதானப் படைகள் 7.7.99 இல் நிகழ்த்திய காம வேட்டை இவ்வாறான சம்பவங்கள் தொடரும் என்பதைத் தான் எதிர்வு கூறுகிறது.

ஹிஜ்ரா நகர் முன்பு 'நாவலடி' என அழைக்கப்பட்டது. ஓட்டமாவடி பிரதேச சபைக்குட்பட்ட இக்கிராமத்தை, புலிகளின் பிடியிலிருந்து 1990இல் இலங்கை இராணுவம் மீட்டெடுத்தது. போர் நிகழ்ந்த காலப்பகுதியில் ஓட்டமாவடி- காவத்தமுனை போன்ற பிரதேசங்களில் இம்மக்கள் இடம்பெயர்ந்து வாழ்ந்து வந்தனர். 1991ம் ஆண்டு, இராணுவத்தின் உத்தரவாதத்திற்கிணங்க இவர்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்பட்டனர். 90இல் இராணுவ நடவடிக்கையைக் காரணம் காட்டி ஹிஜ்ரா நகர் பள்ளிவாயலையும் இராணுவம் ஆக்கிரமித்து முகாமிட்டுக் கொண்டது. இது தொடர்பாக எந்த பாராளுமன்ற முஸ்லிம் உறுப்பினரும் இதுவரை வாய திறக்கவில்லை என்பது வேதனைக்குரியதாகும்.

இம்மக்கள் குடியமர்த்தப்பட்ட நாள் முதல் இன்று வரை இராணுவத்தினரால் பல்வேறு உள, உடல் இம்சைகளுக்கு ஆளாகி வருகின்றனர். பாதுகாப்பரண் அமைத்தல், மரக்குற்றிகள் தறித்தல், மண்மூட்டை கட்டுதல், முகாமைச் சூழ துப்பரவு செய்தல் என கூலியற்ற இனாம் வேலைகளைச் செய்வதற்கும் இவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டு வருகின்றனர். அரச நிவாரணத்திலும், நாட்கூலியிலும் தங்கி வாழும் இவர்களின் அடிப்படைத் தேவைகள் எதுவுமே இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

ஹிஜ்ரா நகர் முஸ்லிம் கிராமத்தில் 7/7/99 புதன்கிழமை நள்ளிரவு குடிபோதையில் நுழைந்த மூன்று இராணுவத்தினர் ஒரு வீட்டுக்குள் புகுந்து, இரண்டு பிள்ளைகளின் தாயான குடும்பப் பெண்ணை கணவனின் எதிரே பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி, சில சேதங்களையும் விளைவித்துள்ளனர். பாதிக்கப்பட்ட பெண் புஹாரி முஹம்மது பாத்திமா (38) தனது வாக்குமூலத்தில் இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

7.7.99 புதன் இரவு 11 மணியளவில் சிறுநீர் கழிப்பதற்கென வெளியே வந்தேன். கொல்லைப் புறத்தில் நிழல்கள் அசைவதைக் கண்ட நான், எனது கணவரிடம் சொல்லிவிட்டு, பிள்ளைகளுக்கு அருகில் வந்து படுத்துக் கொண்டேன். சற்று நேரத்தில் வெளியே ஏதோ உடைபடும் சத்தம் கேட்டது. கணவர் எழுந்து டோர்ச்சை அடித்தார். அப்போது மூன்று இராணுவத்தினர் "டோர்ச்சை அடிக்காதடா" என்று அதட்டியவாறு உள்ளே நுழைந்து, டோர்ச் லைட்டையும் பறித்து உடைத்தெறிந்தனர். சப்தமிட்டால் கிரனைட் எறிவோம் என்று மிரட்டியதுடன், துப்பாக்கியால் கணவனையும் அடித்து, கட்டிப் போட்டுவிட்டே என்னை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தினர்.

கணவனான நூர்முஹம்மது இது தொடர்பாக காலையில் இராணுவ முகாமுக்கு முறையிடச் சென்றபோது, சென்றியிலிருந்த இராணுவ வீரர் தூசித்து விரட்டவே ஓட்டமாவடி சென்று, அங்கு முக்கிய பிரமுகர்களிடம் தமது குடும்பத்திற்கு நிகழ்ந்த கொடுமையை விளக்கியுள்ளார். அவர்கள் மூலமாக நிலைமை சம்பந்தப்பட்ட இராணுவமுகாம் பொறுப்பாளருக்கு அறிவிக்கப்பட்டது. இரவு காவலிலிருந்த இராணுவ வீரரின் வாக்குமூலத்தின்படி சம்பவம் நிகழ்ந்த இரவு குறிப்பிட்ட நேரம் வெளியே சென்ற மூன்று இராணுவ வீரர்களும் கைது செய்யப்பட்டு, கிரித்தல் இராணுவ விசாரணை முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ்வின் கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டது. அவரின் முயற்சியினால் மட்டக்களப்பு இராணுவ கட்டளை அதிகாரி சம்பவம் நிகழ்ந்த ஸ்தலத்திற்கு விஜயம் செய்து பாதிக்கப்பட்ட பெண்ணிடம் வாக்குமூலம் பெற்றுக்கொண்டு, வைத்திய செலவுக்கென நாலாயிரம் ரூபா பணத்தையும் கொடுத்துவிட்டு, உரியவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதாகக் கூறிவிட்டுச் சென்றிருக்கின்றார்.

இக் கொடூரச் செயலுக்குட்பட்ட பெண், நோயாளியாக இருந்துள்ளார் என்பதுடன், இச்சம்பவங்களின் ஊடாக இராணுவத்தினரின் இன்னொரு முகத்தையும் அம்மக்கள் தரிசித்துள்ளனர். வழக்கமான கண்துடைப்பு விசாரணையும், இடம் மாற்றலுமே இதிலும் தீர்வாகக் காணப்பட்டுள்ளது. போதாக்குறைக்கு 27.7.99 தினகரன் பத்திரிகை, இராணுவத்தினர் ஐயாயிரம் ரூபா நஷ்டஈடாக வழங்கியது எனச் செய்தி பிரசுரித்து இராணுவத்தின் பரோபகாரத்தை வெளிப்படுத்தி இருந்தது. கூடவே அப்பெண் நடத்தை சரியில்லாதவள் என்று வேறு கண்டு பிடிப்புச் செய்திருந்தது. பாதிக்கப்பட்ட பெண் இச்சம்பவத்தை பகிரங்கப்படுத்தியதற்கு காரணம் தனக்கு நீதி கிடைக்க வேண்டும். அத்துடன், இதுபோன்று எந்த கொடுமையும் இந்த கிராமத்தில் இனி நடக்கக் கூடாது என்பதே.

நாலாயிரம் ரூபாவுடன் திருப்திப்பட்டுக் கொள் என்று எடுத்துக் கொள்வதா? அல்லது ஒரு பெண்ணின் "கற்புக்கு" இவ்வளவுபெறுமதியைத் தான் இராணுவம் நிர்ணயித்துள்ளது என எடுத்துக்கொள்வதா எதுவும் புரியவில்லை.

தமது நிர்வாகத்திற்குட்பட்ட பகுதியில் இராணுவத்தினர் புரிந்த அட்டகாசத்தை பெரும்பாலான மக்கள் அறியாமல் இருந்தது ஆச்சரியமாயிருந்தது. அதுவும் பிரதேச நிருபர்கள் கூட, இது பற்றி ஒரு வரியேனும் எழுதியதாகத் தெரியவில்லை. அவ்வளவு அரச விசுவாசம் அவர்களுக்கு. அவர்கள் தான் அப்படியென்றால், பிரதேச சபையோ, பள்ளி நிர்வாகமோ, இதைக் கண்டித்து பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு நீதி வழங்க எவ்வாறான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் எடுத்ததாகத் தெரியவில்லை. இராணுவத்தின் ஆதரவில் கள்ளத்தனமாக வியாபாரம் செய்யும் ஊர் பெரியவர்களுக்கு சமூகத்தைப் பற்றி எப்படிக் கவலை வரும்.

சிங்கள இராணுவம் ருசி கண்டுவிட்டது. இனி பல பாத்திமாக்களின் வாழ்க்கையோடு விளையாடுவதற்கு அதற்கு தயக்கம் இருக்காது. ஏனெனில், நமது அரசியல்வாதிகளுக்கும், மக்களுக்கும் வெட்கமில்லை என்பதுடன் சுரணையுமில்லை என்பதை அந்த இராணுவப் புத்தி உணர்ந்தே இருக்கும்!

மானமுள்ளவர்கள் திரண்டெழுந்தால் மட்டுமே பாதிக்கப்பட்ட அப்பெண்ணுக்கு நீதி கிடைக்கும். இன்றேல் நிலைமை இதைவிட மோசமாகவும் கூடும். சந்திரிகாவின் அமைதிப்படையை நம்பவா முடியும்?

- ஷாமா



## திருமலை-ஜமாலியா:

# தீய்ந்து போன ஒரு பெண்ணின் கதை!

பெண்கள் மீதான சமூக வன்முறை பல தளங்களில் இடம்பெற்றுவருவதை இன்று காணக்கூடியதாகவுள்ளது. யுத்தச்சூழல் சார்ந்த ஒடுக்கு முறைகள், வன்முறைகளையே இன்றைய ஈழத்துப் பெண்கள் அதிகமாக எதிர்கொள்கின்றனர். எனினும், குடும்பக் கட்டமைப்புச்சார்ந்த பல வன்முறைகள், ஒடுக்குதல்கள் மறைமுகமான ஒன்றாகவே சமூகங்களிடையே விரவி இருக்கின்றன.

குடும்பம் சார் வன்முறையானது பெரும்பாலும் தமிழ் பேசும் சமூகத்தைச் சார்ந்து சீதனக் கொடுக்கல் வாங்கல்களாலேயே ஏற்பட்டு வருகிறது. இந்தியாவைப் போன்று தற்கொலைகளிலேயே பெரும்பாலான முடிவுகள் இல்லாது விவாகரத்துக்களில் முடிந்துபோவது ஓரளவு அதிர்ஷ்டவசமானது.

குடும்ப ஒடுக்குதல்களில் அனேகமாய் கணவனுக்கு அடுத்த ஸ்தானத்தில் பெண்களைப் பாடாய்ப்படுத்துபவர்கள் மாமியார்களாகவே இருக்கின்றனர். சிலவேளை மாமியே முழு அடக்குமுறையாளராகவும் இருந்து விடுகின்றார்.

இவ்வாறான ஒரு ஒடுக்குதல் அடக்கு முறையின் விளைவால் அண்மையில் திருமலை ஜமாலியா எனும் இடத்தில் ஒரு பரிதாபகரமான தற்கொலை நிகழ்ந்துள்ளது. மாமி மற்றும் கணவனின் கொடுமை தாளாது மிகவும் கைவிடப்பட்டுப் போன நிலையில் ஜீனத்தும்மா என்கிற 23 வயதுடைய ஐந்து மாதக்குழந்தையொன்றின் தாய் தீவைத்து தற்கொலை செய்து கொண்டிருக்கின்றார்.

திருமலை பஸ் நிலையத்தருகே 'சர்பத் கடை' வைத்திருக்கும் தனது தாய் மாமனையே இவர் திருமணம் முடித்திருந்தார். இவர் தன் தாயின் முழுக்கட்டுப்பாட்டில் இயங்கி அதன்படியே தன் மனைவியை 'இயக்கி' வந்தவர் என்பதை இறந்தவரின் கடிதங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

"என் வாழ்க்கை சேலை போல, அதைப் போட்டு விட்டேன். முள்ளுமேல, எடுக்கவும் முடியல. கிழிக்கவும் முடியல. ரத்தமா வடிக்கிறேன்... கண்ணால.." என தன் குடும்ப வாழ்வைப் பற்றி எழுதியிருக்கும் இவர் ஆறு நாட்கள் உயிருக்குப் போராடிய நிலையில் முற்றாக எரிந்து இறந்துள்ளார்.

எப்போதும் மாமியாரின் வசைச் சொல்லுக்கும், அவதூறுக்கும் ஆளாகி வந்துள்ளார். குழந்தை கூட மகனின் சாயலில் இல்லையென அடிக்கடி குறிப்பிட்ட மாமியார் இவரை சகோதரர்களுடனும், சகோதரியின் கணவனுடனும் இணைத்தும் பேசி வந்துள்ளார். ஏற்கெனவே பல பிரச்சினைகளை சந்தித்து வந்த இவர் ஊர்ப் 'பஞ்சாயத்தின் மூலம் சமாதானப் படுத்தப்பட்டும் கணவனின் விசித்திர நிபந்தனைகளுக்குட்பட்டும் (உ-ம்: சகோதரியுடன் பேசக்கூடாது. தாய் வீடு போகக்கூடாது...) வாழ்ந்து வந்திருக்கிறார்.

இவ்வாறான தொடர் பிரச்சினைகளின் விளைவே அவர் இந்த முடிவுக்கு வரக்காரணமாயிருந்ததென்பதை அவர் எழுதிவைத்த கடிதங்களும் சொல்லுகின்றன. 'ஆண்கள் சுயநலவாதிகள், எங்களுக்கும் மனது, அதில் ஆசைகள் உணர்ச்சிகள், அன்பு என்று எதுவும் இல்லாத மரக்கட்டைகள் நாம் என்ற நினைப்பு அவர்களுக்கு..." என்று ஒரு கடிதத்தில் குறிப்பிட்டுள்ள ஜீனத் வெவ்வேறு பிணக்குகள் மன ஆதங்கங்கள் பற்றியும் எழுதி வைத்துள்ளார்.

தான் தீப்பற்றி எரிவதாகவும் மனைவி சிரித்துக்கொண்டு நிற்பதாகவும் தான் கண்ட கனவை கணவன் பிரஸ்தாபித்த வேளை நீயில்லை. அவள் தான் அப்படி தீப்பற்றி எரிய வேண்டும். அதை நீ பார்த்துச் சிரிக்க வேண்டும் என்று வில்லித்தனமாக மாமி கதைத்துள்ளாார். இந்த நிகழ்வு தான் இந்தப் பெண் தீப்பற்றி எரியும் போதும் நிகழ்ந்துள்ளது. ஒரே வீட்டின் 'ட' வடிவ அறையில் ஒரு பக்கத்தில் நிகழ்ந்த தற்கொலை முயற்சியை மாமா, மாமி, கணவன் போன்றோர் கண்டும் காணாதவர் போலிருந்து அதைத் தடுக்க எந்த முயற்சியும் செய்யாது டி.வி. பார்த்துக்கொண்டிருந்த சம்பவம் இவர்களின் கொடூரத்தை உணர்த்த போதுமானதொன்றாகும். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நாட்களிலும் பார்க்க வராத இவர்கள் இப்போது தலை மறைவாகித் திரிகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுவாக தற்கொலைகளுக்கு வேறு எவரும் தண்டனை பெறுவதில்லை. ஆனால், கொலையைவிடக் குரூரமான தற்கொலைச் சாத்தியங்களை அவர்கள் உருவாக்கியிருப்பார்கள். ஆனால், சட்டம் கொலைக்குச் சாட்சியங்களை, சம்பவங்களைத் தேடும் தற்கொலைகளுக்கு அவை எந்தப் பெரும் பின்னணிகளைக் கொண்டிருந்தாலும் வெறும் "தற்கொலை மரணம்" என்று இலகு தீர்ப்பு வழங்கிவிடும். ஆனாலும் இவ்வாறான குரூர சிந்தனையாளர்கள் தொடர்ந்தும் எந்தத் தண்டனையும் குற்றவுணர்வுமற்று அடுத்த நடவடிக்கைகளில் இறங்கியிருப்பார். இங்கே இவர்களின் ஐந்து மாதக் குழந்தையின் வாழ்வுதான் கேள்விக்குறி. இந்தக் குழந்தைக்கு சட்டபடியான உரிமையை மாமியும், கணவனும் தான் கோருவார்கள்.


ஏற்கெனவே பிள்ளையில் சந்தேகம் கொண்ட இவர்கள் அதைத் தொடர்ந்தும் நல்ல முறையில் நடத்துவார்கள் என்பதற்கு எந்த நம்பிக்கையுமில்லை.

சமூகத்தினுள் மௌனமாக நிகழும் இவ்வாறான நிகழ்வுகள் நாம் படிப்பினையாக ஒரு பாடமாக பார்க்கப்பட வேண்டும். வெறுமனே இதனை சம்பவங்களாகப் பார்த்தால் இவ்வாறானவற்றுக்கும் பின்னாலுள்ள சமூக அவலங்கள், துயரங்கள், துன்பங்களை நாம் மௌனித்து வளர்த்தவர்களாகவே ஆகிவிடுவோம்.

- எம்.கே.எம்.எஸ்

நன்றி - நூலகத்திட்டம்





# வட கிழக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு ஓர் அறிமுகம்

- எம்.ஐ.எம்.முஜீப்

"எனது இனிய உடன்பிறப்புக்களே! சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் விதை காத்தான்குடியிலே-தான் இடப்பட்டது" இந்த வார்த்தைகள் இந்தக் கட்சியின் தலைவர் அஷ்ரஃப் அவர்களால் காத்தான்குடிக்கு அவர் மேற்கொள்ளும் விஜயங்களின் போதும், இன்னும் பிற இடங்களிலும் கூறப்படுபவை.

உண்மை தான். முஸ்லிம் காங்கிரசின் விதை விழுந்த மண் காத்தான்குடி தான்!

இப்போது வட- கிழக்கு முஸ்லிம்களின் உரிமைகளுக்கான அமைப்பின் (North - East Muslims Rights Organisation) விதை விழுந்திருப்பதும் இந்த மண்ணிலே தான்!

வட-கிழக்கிலே வாழுகின்ற எல்லா முஸ்லிம்களுக்கும் பொதுவான தீர்வாக முஸ்லிம் மாகாணம் என்ற கோஷத்தை முன்வைத்துப் புறப்பட்ட முஸ்லிம் காங்கிரஸ் தற்போது தனது கொள்கைகளையும், இலக்குகளையும் மறந்து வெறுமனே ஒரு பிரதேசவாத அரசியலை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் இந்த வேளையிலே அது தனது தற்போதைய நிலைப்பாடாகத் தென் - கிழக்கு அலகு ஒன்றை மாத்திரமே கோரி நிற்பதை யாவரும் அறிவோம்.

தென் - கிழக்கு அலகு என்பது முஸ்லிம்களுக்கான அரசியல் தீர்வாக ஒரு போதுமே அமையாது. இக்கோரிக்கை முற்றிலும் தவறானதும், வட- கிழக்கிலே வாழுகின்ற முஸ்லிம்களின் தொடர்ச்சியான இருப்புக்கும், பாதுகாப்புக்கும் பங்கம் விளைவிக்கக் கூடியதுமாகும். எனவே, உடனடியாக முஸ்லிம் காங்கிரசின் இந்தக் கோரிக்கையினை வாபஸ் பெற வேண்டும் என்பதைத் தனது பிரதான இலக்காகக் கொண்டே இந்த அமைப்புத் தோற்றம் பெற்றுள்ளது.

இதற்கு முன்னரும் "தென் - கிழக்கு அலகு" எனும் முஸ்லிம் காங்கிரசின் நிலைப்பாட்டுக்கு எதிராக வட - கிழக்கிலே ஆங்காங்கே ஒரு சில எதிர்ப்பலைகள் காணப்பட்ட போதிலும், நிறுவன மயப்பட்ட அமைப்பிலே காத்தான்குடி சமூக மதிப்பீட்டுக்கான நிறுவனமே இது தொடர்பில் கடந்த ஒன்றரை வருடங்களாகப் பேசி வந்தது. இந்த நிறுவனத்தின் தலைவர், பொறியியலாளர் எம். எம். அப்துல் றஹ்மான் அவர்கள் கடந்த வருடம் பெப்ரவரி மாதம் "முஸ்லிம் மாகாணத்தில் இருந்து தென் - கிழக்கு வரை" என்ற நூலொன்றையும் வெளியிட்டிருந்தார். இந்தப் புத்தகம் முஸ்லிம் காங்கிரசின் சுயநலப் போக்கையும், தென் - கிழக்குத் தொடர்பான அபாயங்களையும் பல தளங்களில் நின்று விமர்சித்தது. இதுவே தென் - கிழக்குத் தொடர்பான முஸ்லிம் காங்கிரஸின் பிரகடனமாகக் கொள்ளப்படும் "தென் - கிழக்கு மூன்று இனங்களுக்குமான முன்மாதிரிப் பூமி" எனும் நூலுக்குப் பதிலாகவும் அமைந்தது. இது போன்றே சமூக மதிப்பீட்டுக்கான நிறுவனம் இது தொடர்பில் பல கருத்தரங்குகளையும், வெளியீடுகளையும் செய்து வந்தது. அத்தோடு முஸ்லிம் காங்கிரஸின் தலைவர், அமைச்சர் அஷ்ரஃப், பொதுச் செயலாளர் றவூப் ஹக்கீம், மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்றப் பிரதிநிதி பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா ஆகியோரோடு சந்திப்புக்களையும் மேற்கொண்டது. இந்தச் சந்திப்புக்களின் போதெல்லாம் அவர்கள் தென் - கிழக்கு அலகின் குறைபாடுகளையும், அவ்வாறானதொரு தீர்வு அமைந்தால் இதற்கு வெளியே வாழுகின்ற முஸ்லிம்கள் சந்திக்க நேரும் துயரங்களையும் ஒத்துக் கொண்டனர். எனவே எல்லோருக்கும் பொதுவான மாற்றுத் தீர்வையே முஸ்லிம் காங்கிரஸ் கோரும் என்றும் வாக்குறுதி அளித்தனர். இருந்த போதும், துரதிருஷ்டம் முன்னுக்குப் பின் முரணாகவே அவர்களது செயற்பாடுகள் அமைந்தன. அஷ்ரஃப் தென்கிழக்கே தனது கட்சியின் நிலைப்பாடு என நாடு முழுவதும் பேசத் தொடங்கினார்...! ஹிஸ்புல்லா பாராளுமன்றத்திலே மட்டக்களப்பு முஸ்லிம்கள் தென் - கிழக்கு அலகுக்கு முற்றிலும் ஆதரவளிக்கின்றார்கள், என்று ஒரு பச்சைப்பொய்யைச் சொன்னார்...! றவூப் ஹக்கீம் இது தொடர்பில் மிகப் பொதுவாக எந்தத் தெளிவுமற்றவராகப் பேசாமல் இருக்கிறார் போலும்...! இவ்வாறான ஒரு அரசியல் சுத்துமாத்துகளுக்கு மத்தியிலே தான் சமூக மதிப்பீட்டுக்கான நிறுவனம் (ISA) வட - கிழக்கு முஸ்லிம்களுக்கான நியாயமான ஒரு அரசியல் தீர்வு கிடைக்க வேண்டும். இதற்கான போராட்டங்களை வட கிழக்கிலே எல்லாப் பகுதிகளிலும் முன்னெடுக்க வேண்டும். இதற்கான பாரிய இயக்கமொன்று கட்டியெழுப்பப்பட வேண்டும் என்ற உத்வேகத்தோடு இயங்கிக் கொண்டிருந்த வேளையில் தான். கடந்த 01.08.1999 அன்று காத்தான்குடி மெத்தைப் பள்ளிவாயலிலே பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம், சமூக மதிப்பீட்டுக்கான நிறுவனம் இன்னும் பல அமைப்புக்களின் உறுப்பினர்களைக் கொண்ட கூட்டாகக் காத்தான்குடியிலே வட - கிழக்கு முஸ்லிம்களின் உரிமைகளுக்கான அமைப்பு உத்தியோகபூர்வமாகப் பிரகடனம் செய்யப்பட்டது. இதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கிலே மட்டு மாவட்ட முஸ்லிம் கிராமங்களின் புத்திஜீவிகளும், இன்னும் இது தொடர்பில் தீவிர அக்கறை கொண்டவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து இந்த அமைப்பின் தலைமைக் காரியாலயத்தில் பத்திரிகையாளர் மாநாடொன்றும் நடைபெற்றது. இதன் செய்தி பத்திரிகைகளிலும் வானொலிச் சேவைகளிலும் வெளியானது.

இவ்வமைப்பின் செயற்திட்டங்களாகத் தற்போது சில விடயங்கள் நடைமுறைக்கு வருகின்றன. வட - கிழக்கு முஸ்லிம்களின் உரிமைளுக்கான அமைப்பு எனும் தனது நாமத்தை அர்த்தமுள்ளதாக்கவும், தனது இலக்கை வெற்றி கொண்டதாக மாற்றியமைக்கவும் இந்த அமைப்புத் தன்னை வட- கிழக்கிலே உள்ள சகல முஸ்லிம் பிரதேசங்களிலும் விஸ்தரித்துக் கொள்ளும்.

தற்போது மட்டு. மாவட்டத்திலே இதன் செயற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. திருமலை, மன்னார், அம்பாறை, யாழ்ப்பாணம் (அகதிகள்) என்ற பரப்புகளுக்கும் இதன் சேதி எத்திவைக்கப்பட்டுள்ளது. அந்தப் பரப்புகளிலும் இதன் வேலைத் திட்டங்கள் மிக விரைவிலே கொண்டு செல்லப்படும்.

இதற்கான மிகப் பிரதான நடவடிக்கையாக, பிரச்சார இயக்கமொன்றை நடாத்துவதோடு வட- கிழக்கிலே வாழுகின்ற சகல முஸ்லிம்களிடம் இருந்தும், ஒரு லட்சம் கையெழுத்துகளைப் பெற்றுக் கொள்வது என்ற இலக்கோடு இந்த அமைப்புச் செல்கிறது.

இந்தக் கையெழுத்து வேட்டையினூடாக எல்லாப் பிரதேசங்களுக்கும் இந்த அமைப்பு அறிமுகப்படுத்தப்படுவதோடு அங்குள்ள மக்களும் இதன் பங்காளர்களாக மாறுகின்றனர். இதன் மூலம் அமைப்பின் நடவடிக்கைகளை மிக இலகுவாக முன்கொண்டு செல்ல முடியும். இந்த நடவடிக்கை தற்போது முதற்கட்டமாக மட்டு. மாவட்டத்திலே ஆரம்பமாகியுள்ளது.

மேலும் இந்த அமைப்புத் தனது இலக்குகளையும், அரசியல் நிலைப்பாடுகளையும் மிகத்தெளிவாக விளக்கி அரசாங்கத்திற்கும், எதிர்க் கட்சிகளுக்கும், வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும், முக்கியமாகப் புலிகளுக்கும் சேதிகளை அனுப்பியுள்ளது. அத்தோடு இத்தரப்பினர் அனைவரையும் வெகு-விரைவில் நேரில் சந்தித்துப் பேசுவதற்கும் அமைப்பு ஆயத்தமாகியுள்ளது.

எவ்வித அரசியல், சுயநல நோக்கங்களையும் கருதாது செயற்பட விளையும் இந்த அமைப்புக் குறிப்பாக முஸ்லிம் காங்கிரசையும், அதன் அடையாளத்தையும் ஒரு போதும் சிதைக்க முற்படாது என்பதும் மிகத் தெளிவாக நோக்கப்பட வேண்டிய ஒரு கொள்கையாகும்.

முஸ்லிம்களின் அரசியல், சுய நிர்ணய உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதில் முஸ்லிம் காங்கிரசும், ஏனைய அரசியல் கட்சிகளும் விடுகின்ற தவறுகளை இனங்கண்டு அதற்கெதிராகப் போராடுவதும், முஸ்லிம்களுக்கான தனித்துவத்தைக் காக்கப் போவதாகக் கூறிக் கொண்ட முஸ்லிம் காங்கிரஸினை மீண்டும் அதனது இலக்குகளை நினைவூட்டி, அதன் யதார்த்த நிலைக்குத் திருப்பிவிடுவதுமே இந்த அமைப்பின் இலட்சியங்களாகக் கருதப்படுகின்றன.

முஸ்லிம்களுக்கான அரசியல் மாற்று சக்திகளுக்கான அரசியல் பரப்புப் போதாமையால் முஸ்லிம் காங்கிரஸ் மிக உடனடியாகத் தனது தவறுகளை உணர்ந்து முஸ்லிம்களுக்கான மிகச் சரியான, நியாயமான குரலாக மாற வேண்டும் என்பதில் மிக ஆவலாக உள்ள இந்த அமைப்பு, அதன் தலைவர்கள் முஸ்லிம் காங்கிரசின் சரியான இலக்குகளைப் பின்னடையச் செய்கின்ற, மேலும் அதன் கோட்பாடுகளை மழுங்கச் செய்கின்ற நிலைப்பாட்டைத் தொடர்ந்தும் கடைப்பிடிக்கும் போது, அவர்கள் தொடர்பில் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இந்த அமைப்புத் தயங்காது.

ஏனெனில், முஸ்லிம் காங்கிரஸ் என்பது எந்தவொரு தனி மனிதனதும் சுயநலச் சொத்தல்ல. அது முஸ்லிம்களின் ரத்தத்திலும், என்புகளிலும் கட்டி வளர்க்கப்பட்டது என்பதையும் அதன் தலைவர்கள் மறந்து விடக் கூடாது.

இந்தத் தளங்களின் பின்புலத்தில் கட்டியமைக்கப்படும் இந்த அமைப்பு, தனது இலக்கு நோக்கிய பயணத்தில் மிகச் சுதந்திரமாக, எந்த அரசியல் உந்து சக்திகளுக்கும் உட்படாது தனது கருத்துக்களை முன்னெடுத்துச் செல்லும். அதேவேளை தனது நேர்மைத் தன்மை, நடுநிலை என்பவற்றில் எப்போதும் மிகக் கவனமாகச் செயற்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வட- கிழக்கு முஸ்லிம்களின் நீதியான அரசியல், வாழ்விட உரிமைகளைக் கோரி நிற்கும் இந்த அமைப்பில் எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவராயினும், பங்கெடுக்கலாம். அது தனது சமூகத்தின் நியாயமான குரலுக்கு வலு சேர்க்கும். ஆனால், அவர்கள் ஒரு போதும் தனது கட்சி நலன்களை இதனூடாக நிறைவேற்ற எத்தனித்தால் அம்முயற்சி ஒரு போதும் பலனளிக்காது என்பதும் உறுதி! இதற்கான ஏற்பாடுகள் அமைப்பில் இருக்கின்றன!

இப்போதைக்கு இவ்வாறான பொது இயல்புகளோடு தனது யாத்திரையைத் தொடர்ந்திருக்கும் இந்த அமைப்புத் தனது இலக்குகளை எய்துவதற்காகச் சகல தளங்களிலும் மிகத் துரிதமாகச் செயற்படும்.

"இதனுடைய வளர்ச்சியும், வெற்றியும் வட- கிழக்கில் வாழுகின்ற எல்லா முஸ்லிம்களின் கரங்களிலும் தங்கியுள்ளன. ஆகையால் அனைவரும் இந்த அமைப்பின் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் மிகச் சரியாகப் புரிந்துகொண்டு உங்களையும், நடு நிலையாய்ச் சிந்திக்கின்ற-முஸ்லிம்களின் நியாயமான உரிமைகளைப் பெற்றுக் கொள்வதில் தீவிரங் காட்டுகின்ற ஒரு பங்காளராக மாற்றிக் கொள்ள வேண்டும்" என்பது தான் வட-கிழக்கு முஸ்லிம்களின் உரிமைகளுக்கான அமைப்பு இந்தப் பிரதேச முஸ்லிம்களிடம் விடுக்கும் வேண்டுகோளாகும்.

இந்தப் புரிதல்களோடு அமைப்பின் பயணம் தொடருமாயின் அதன் வெற்றிமிகு அடைவு அவ்வளவு துாரத்தில் அமையாது என்பது இதன் உருவாக்க உறுப்பினர்களின் எண்ணம். எனவே வட- கிழக்கு முழுவதும் பரந்து வாழும் முஸ்லிம்களும் இதற்கு வெளியே வாழும் முஸ்லிம்களும் இந்த அமைப்பின் வெற்றிக்காக உழைக்க வேண்டியதோடு, நாட்டின் சகல புத்திஜீவிகளும், அரசியல் ஞானிகளும் தீர்வை வேண்டி நிற்கும் இந்த மக்களுக்குச் சரியான நியாயங் கிடைக்க, நல்லதொரு கொள்கை வடிவமைக்கப்பட, தங்களால் முடிந்த வழிகளிலும், ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டுமென்பதும் இவ்வமைப்பின் எதிர்பார்ப்பாகும்.

நல்லதொரு தருணத்தில் விழித்துக் கொண்ட முஸ்லிம்களின் உணர்வுகளை மூலதனமாகக் கொண்டு தனது முதற் பயணத்தைத் தொடரும் வட- கிழக்கு முஸ்லிம்களுக்கான உரிமைகளின் அமைப்பு (NEMRO) அதன் ஆரம்பக் கட்டங்களில் சந்திக்கும் பேராதரவும், உத்வேகமும் நன்மை தரும் என நம்புகின்றது. எனவே உரிமைகளுக்காகக் காத்து நிற்கு[illegible] வட-கிழக்கு முஸ்லிம் மக்கள் [illegible]னோடு கைகோர்த்துக் கொள்ள [illegible]வளவு காலம் போகாது!

அவர்களது கனவுகள் பலிக்கவும் நாட்களாகாது!

அமைப்பின் வளர்ச்சி தொடர்பான அவதானிப்புகள் தொடரும்...

# தூக்கைத் தூக்கிலிடு!

துரைசிங்கம்

பொதுவில் சட்டம் என்பது சமூக நல்வாழ்விற்காக அதனை-யொட்டிக் காலப் போக்கின் தேவைக்-கேற்பச் செய்யப்படும் விதிகள் ஆகும். பொது அல்லது தனி உரிமைகளையும் கடமைகளையும் கட்டுப்பாடுகளையும் வகுத்து அதன்படி செயற்படுத்துவது அதன் கருத்தும் நோக்கமும் எனலாம். ஆக, மனித சமுதாய விருத்திக்கும் வளர்ச்சிக்கும் ஏற்ப சட்டம் மாற்றமும் வளர்ச்சியும் கண்டு வருகிறது. மனித-னைப் போல் சட்டமும் நாளுக்கு நாள் வளர்ச்சி பெற்று வந்திருக்கிறது. அவ்வளர்ச்சியில் பல புதிய நன்மைகள் கருத்து வேறுபாடுகள் நெருக்கடிகள், நுண்ணிய ஆய்வுகள் எனப் பொதிந்து கிடக்கின்றன.

ஆக, எந்தவொரு நாட்டிலும் குற்றவாளிகள் எனக் கருதப்பட்டால் அவர்களுக்கு தண்டனை கொடுக்கும் நடைமுறை உண்டு. இதனால் தண்ட-னைச் சட்டங்கள் இருக்கும். ஆகவே நடைமுறையிலுள்ள குற்றவியல் சட்டத்தின்படி தண்டிக்கப்படத்தக்க ஒரு குற்றத்தைச் செய்துள்ளதாகத் தீர்ப்-பளிக்கப்பட்டுள்ள குற்றவாளியின் உடலை அல்லது உடைமையை பாதிக்கும் வகையில் அரசு விதிக்கும் ஒறுத்தலே தண்டனை என்பதாகும்.

சமுதாயம் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும் அமைதியை நிலை நாட்ட தான் வகுத்துள்ள விதிகளை மீறுவதற்கு அச்சமுதாயம் அளிக்கும் பதிலடி தான் தண்டனை என்பர். இந்தத் தண்ட-னையை விதிக்கும் பொழுது ஒரு-வகைத் துன்பத்தை உண்டாக்குவது உள்நோக்கமாக இருக்கிறது. இந்தத் துன்பம் சவுக்கடி போன்ற உடல் வேதனை விளைவிப்பதாக இருக்கலாம் அல்லது வினைத்தண்டனை போன்று மனவேதனையை உண்டாக்குவதாக இருக்கலாம். குற்றத்தின் தன்மை-யினையும் குற்றவாளியின் தனிப் பண்பியல்பினையும் பொறுத்துத் தண்டனையின் வகையும் அளவும் அமையும்.

குற்றவியல் சட்டத்தின் தலையாய நோக்கம் குற்றம் புரிந்தவருக்குத் தண்டனை அளிப்பதாகும். ஆனால் குற்றத்துக்கும் தண்டனைக்குமான தொடர்பு என்பது அவ்வளவு எளி-தன்று. அது ஒரு நேர்கோட்டிலான தொடர்பு ஆகாது. குற்றத்துக்கு தண்டனை என்பது தேவை தான். ஆனால் எத்தகைய தண்டனை வழங்-குவது என்பது குறித்தான சிந்தனைகள் பல மட்டங்களில் எழுந்துள்ளன.

இந்தியாவில் மரண தண்டனை பற்றிய கருத்தோட்டம் அண்மைக் காலத்தில் வேகமாக வளர்ச்சியடைந்து வந்துள்ளது. மரணதண்டனைக்கு மரண தண்டனை விதிப்பதற்காக மாநாடுகள் பரவலாக இடம் பெறுகின்றன.

அண்மையில் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்-பட்டவர்களுக்கு மரணதண்டனை விதித்தமையால் மரணதண்டனைக்கு எதிரான போக்குகள் வலுப் பெற்று வருகின்றன. இந்தப் பின்னணியில் இந்தியாவின் மரணதண்டனைச் சட்டம் தோன்றிய வரலாற்றையும் அதற்கு எதிரான போக்கையும் புரிந்து கொள்ள முற்படுவோம்.

இந்தியாவின் ஆகப்பெரிய குற்ற-வியல் சட்டமான இந்தியன் பீனல்கோடு எனப்படும் இந்தியத் தண்டனைச் சட்டம் 1860ல் உருவாக்கப்பட்டது.

சிப்பாய் கலகம் என ஆங்கிலே-யரால் அழைக்கப்படும் முதலாவது இந்திய சுதந்திரப் போராட்டம் முடிந்த சூழ்நிலையில் இச்சட்டத்தினை அன்றைய ஆங்கிலேய அரசு உருவாக்-கிற்று. இச்சட்டப் பொறுப்பினை அன்று ஏற்றிருந்த மெக்காலே என்பவர் தான் இந்தச் சட்டத்தினை வரைந்தார். (இவர் தான் இந்தியக் கல்வித் திட்டத்தினை-யும் உருவாக்கியவர்.)

ஆக 'இந்தியா' விடுதலை பெறு-வதற்கு 87 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு ஆங்கிலேயரால் உருவாக்கப்பட்ட இந்தியத் தண்டனைச் சட்டம் தான் விடுதலைப் பொன் விழா கொண்டாடப் பெற்ற பின்னரும் இந்தியாவை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது.

'இந்தியா' விடுதலை பெற்று தமக்-கென ஒரு புதிய அரசியல் சட்டத்தினை வகுத்துக் கொண்ட பிறகும் இந்த அரசியல் சட்டத்தின் உன்னதமான சிறப்புகளுக்கெதிரான இந்தியத் தண்டனைச் சட்டத்தினை அப்படியே வைத்துக் கொண்டிருப்பது எந்த வகையில் நியாயம் என்பது புதிரா-கவே இருந்து வருகிறது. இது குறித்த கேள்விகள் பல மட்டங்களிலும் எழுந்துள்ளன.

இந்திய தண்டனைச் சட்டம் எனும் பொருத்தமற்ற இன்றுள்ள நடைமுறைச் சட்டத்தினை அறவே நிராகரித்து விட்டு தமது தனித் தன்மையைக் காப்பாற்றிக் கொள்ளும் நவீன தண்ட-னைச் சட்டம் ஒன்றினை ஏன் உரு-வாக்கிக் கொள்ள முடியவில்லை என்ற கேள்வியை பலரும் எழுப்பத்




தொடங்கியுள்ளனர். இங்கே 'இந்தியத் தேசியம்' என்பது குறித்த வலுவான சந்தேகத்தை பல்வேறு சிந்தனைச் செயற்பாட்டாளர்கள் எழுப்பி வருகின்றனர்.

மெக்காலே உருவாக்கிய இந்தியத் தண்டனைச் சட்டத்தின்படி ஏழு வகையான குற்றங்களுக்கு மரண தண்டனை அளிக்க விதப்புரை செய்யப்பட்டுள்ளது. அவை

1. இந்திய அரசுக்கு எதிராகப் போர் தொடுத்தல் (121)
2. இராணுவத்தினர் கலகம் செய்தல் (132)
3. ஒரு நிரபராதியைத் தூக்கி-லிடுவதற்காகப் போலி ஆவணம் தயாரித்தல் (194)
4. கொலை செய்தல் (302)
5. குழந்தை மனநோயாளி, மது அருந்தியோர் ஆகியோரைத் தற்கொலை செய்து கொள்ளத் தூண்டுதல் (305)
6. ஆயுள் தண்டனைக் கைதியாக இருக்கும் போதே கொலை செய்ய முயற்சித்தல் (307)
7. கொள்ளையடிக்கும் போது கொலை செய்தல் (376)

மேற்குறித்த வகைக் குற்றங்-களுக்கும் மரண தண்டனை தான் என்ற நிலை 1955 வரை நீடித்தது. பின்னர் இச்சட்டத்தில் ஒரு மாற்றம் (தி.ச 29/55) கொண்டு வரப்பட்டது. அதன்படி மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை ஆகிய இரண்டில் எந்த ஒன்றையும் அளிக்கலாம். அதற்குச் சரியான காரணங்கள் கூறப்படல் வேண்டும். ஆக இந்தச் சட்டத்தில் ஏற்பட்ட முதல் மாற்றம் இது என்றே கூறலாம். ஆனாலும் ஆயுள் தண்ட-னையை விட மரண தண்டனை அதிகம் அளிக்கப்பட்டு வந்தது.

1973இல் புதிய குற்றவியல் நடை-முறைச் சட்டம் எனும் பெயரில் அறிவிக்கப்பட்ட சட்டம் கூட 'ஏழு குற்றங்களுக்கும் இரண்டில் ஏதாவது ஒரு தண்டனை தரலாம். ஆனால் மரண தண்டனை தான் என்ற கட்டாய-மில்லை. அதிலும் முதலில் ஆயுள் தண்டனை இல்லையென்றால் மாற்றாக மரண தண்டனை அதாவது ஆயுள் தண்டனை என்பது பொதுவிதி, மரண தண்டனை என்பது விதிவிலக்கு. அதற்குச் சிறப்புக் காரணங்கள் கூறப்படல் வேண்டும். இது ஒரு குறிப்பிடத்தக்க மாற்றம் என்பதில் சந்தேகமில்லை. மேலும் இந்தப் புதிய சட்டத்தின்படி அமர்வு நீதிமன்றத்தில் கொலைக்குற்றம் சாட்டப்பட்டவருக்கு விசாரணை முடிந்து தண்டனை அறிவிக்கப்படுவதற்கு முன்பாக அந்தக் குற்றவாளியிடம் தண்டனை பற்றிக் கேட்கப்படல் வேண்டும். அந்த நேரத்தில் அவர் தனது சொந்த குடும்ப சமூக பொருளாதாரப் பின்னணி பற்றி நம்பகமான வகையில் எதுவும் கூறினால் அதனைப் பொறுத்துத் தண்டனையின் தன்மை அமைய வேண்டும் என்று சட்டம் கூறுகிறது. (கு.வி.மு.ச 253 (2) ) ஆனால் இது நடைமுறையில் வெறும் சடங்காகவே இருந்து வருகிறது. எந்த நீதிபதியும் இந்தப் பிரிவு பற்றிக் கவலைப்படுவதே இல்லை. எவ்வாறாயினும் இந்தப் பிரிவின்படி மரண தண்டனைக்குப் பதிலாக ஆயுள் தண்டனை அளிக்-கப்படும் வாய்ப்பு கொள்கையளவிலே னும் உண்டு என்பது வரவேற்கத்-தக்கதே. இந்தியாவின் வரலாற்றில் மரணதண்டனையையும் ஆயுள் தண்டனைச் சட்டத்தையும் விளங்கிக் கொள்ளும் பொழுது மெக்கலே தூக்குத் தண்டனையையே கட்டாய-மாக்கியிருந்தார். இன்று 'இந்திய' விடுதலைக்கு பின்னர் இந்த நிலை மாறி தூக்குக்குப் பதில் ஆயுள் தண்டனையும் தரப்படலாம். தூக்கு என்பது கட்டாயம் இல்லை. ஆயுளும் தூக்கும் சமமாகப் பயன்படுத்-தப்படலாம் என்ற நிலை உருவாகி-யுள்ளதை புரிந்து கொள்ள முடிகிறது.

இந்தியாவின் நிலைமைப்படி இன்றுள்ள நிலையில் எந்தக் குற்றத்திற்கும் தூக்குத் தண்டனை கட்டாயம் என்று இல்லை. ஆனாலும் தூக்குத் தண்டனை அளிக்கப்பட்ட-வர்களுக்கும் குடியரசுத் தலைவரோ அல்லது ஆளுநரோ தலையிட்டு அதனை ஆயுள் தண்டனையாக மாற்றியமைக்க முடியும். அதற்கு இவர்களுக்கு அதிகாரம் உண்டு. பொதுவில் இன்று அரிதிலும் அரிதான வழக்குகளில் மட்டுமே தூக்கு என்ற வகையில் தான் சட்டம் இருந்து வரு-கிறது. தூக்கை தூக்கிலிட இந்தியாவில் பல்வேறு காலங்களில் அதற்கு எதிரான போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இன்று சர்வதேச ரீதியில் 57 நாடுகள் மரண தண்டனையை முற்றாக ஒழித்து விட்டன. 15 நாடுகளில் போர்க் குற்றங்கள் போன்ற ஒரு சில விதி-விலக்குகளுக்காக மட்டுமே மரண தண்டனை விதிக்கப்படுகிறது. இன்றும் 26 நாடுகளின் சட்டப்புத்தகங்களில் மரண தண்டனை இருந்தாலும் கூட நடைமுறையில் மரண தண்டனை விதிப்பதில்லை என்று ஒருமனதாக ஏற்றுக் கொண்டுள்ளன. தங்களது தண்டனை முறைகளிலிருந்து மரண தண்டனையை நீக்கி விட வேண்டும் என்று தனது உறுப்பு நாடுகளுக்கு ஐ.நா.சபை சர்வதேச மனித உரிமைப் பிரகடனத்தின் பொன்விழா கொண்-டாட்டத்தின் பொழுது வேண்டுகோள் விடுத்தது.

53 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஐ.நா மனித உரிமைக்கான ஆணை-யத்தில் கொண்டு வரப்பட்ட மரண தண்டனையை நிறுத்தி வைக்கக் கோரும் தீர்மானத்திற்கு ஆதரவாக பெரும்பாலான நாடுகள் வாக்களித்து அதை நிறைவேற்றியுள்ளன. இவ் வாக்கெடுப்பில் வாக்களிக்காமல் இருந்த ஒரு . ப நாடுகளுள் இந்தியா-வும் ஒன்று. சர்வதேச ரீதியில் பல்வேறு நாடுகள் தூக்குத் தண்டனையை நீக்கிவிட உலகு தழுவிய மாற்றங்கள் ஒரு புறம் நடந்தேறுகின்றன. மறுபுறம் 'இந்தியா'விலும் மரண தண்டனைக்கு எதிரான முயற்சிகள் சட்டபூர்வமாக நடைபெற்றுள்ளன.

ஆங்கிலேய ஆட்சிக் காலத்திலேயே 1931ல் நாடாளுமன்றத்தில் கயாபி-ரசாத்சிங் என்பவர் மரணதண்ட-னையை எதிர்த்துச் சட்டத் திருத்தம் கொண்டு வந்தார். ஆனால் அன்றைய அரசு எதிர்த்தமையால் அது நிறை-வேறாமல் போயிற்று.

'இந்தியா' விடுதலை பெற்ற பின்-னரும் நாடாளுமன்றத்தில் முகுந்தலால் அகர்வால் என்பவர் கொண்டு வந்த திருத்தமும் ஏற்றுக் கொள்ளப்பட-வில்லை. மீண்டும் 1958ல் பிரிதிவிராஜ் கபூர் என்பவரால் மாநிலங்களவையில் கொண்டுவரப்பட்ட திருத்தமும் நீண்ட விவாதத்தின் பின்பு நிராகரிக்-கப்பட்டது. அதன் பிறகு 1962ல் ரகுநாத்சிங் என்பவர் மக்களவையில் கொண்டு வந்த திருத்தமும் நிர்மா-ணமும் நீண்ட விவாதத்திற்குப் பிறகு தோற்றுப் போயிற்று. ஆனால் அப்போது இந்தச்சிக்கலை சட்ட ஆணையத்தின் பொறுப்பில் விடுவதற்கு அரசு இசை-வினை அளித்தது. அதன் விளைவாகத் தான் 1973ல் நல்ல மாற்றம் ஏற்பட்டது. அதாவது ஆயுள் தண்டனை முதலிடம் பெற்றது.

ஆக, தொடர்ந்து மனிதநேயமிக்க நீதிபதிகள் கிருஷ்ணய்யர், பகவதி, சின்னப்பரெட்டி போன்றவர்கள் தூக்குத் தண்டனை செல்லாது என்ற பொருளில் அளித்த தீர்ப்புக்கள் ஒரு தீர்மான-கரமான பங்கினை வகிக்கத் தொடங்-கின. இதனால் பக்சன் சிங் வழக்கில் (ஏ.ஐ.ஆர். 1980 எஸ். சி) உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் ஆயுள் தண்டனை தான் பொதுவிதி. அரி-திலும்அரிதான வழக்குகளில் மட்டுமே தூக்குத் தண்டனை என்ற உறுதியான மாற்றம் ஏற்பட்டது.

இன்றுள்ள இந்தியாவின் நிலையில் அரிதிலும் அரிதான வழக்குகளில் மட்டுமே தூக்கு என்ற வகையில் தான் சட்டம் இருந்து வருகிறது. ராஜீவ் காந்தியின் கொலையை விசாரித்து வரும் விபிஐ 26 தமிழர்களை குற்ற-வாளிகளாக நிறுத்தி இருந்தது. இவர்களுக்கு "தடா" சிறப்பு நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்திருந்தது. பின்னர் அந்த 26 பேரில் 22 பேரை தூக்குத் தண்டனையிலிருந்து

⇨19

# ஆண்மேலாதிக்கத்துக்கு துணை போகும் நீதிமன்றங்கள்

- நீ ஒரு பெண். உன்னால் தனித்து வாழ முடியாது. நீ சார்ந்து வாழ வேண்டியவள். தந்தையும் கணவனும் தான் உன் பாதுகாவலர்கள்.
- நீ ஒரு பெண். உன்னால் சுய தீர்மானங்கள் எடுக்க முடியாது. நீ பாதுகாக்கப்பட வேண்டியவள். உன் கற்புக்கு களங்கம் ஏற்பட்டு விடும். தனித்தோ, இரவிலோ நீ எங்கும் செல்லக் கூடாது. இவற்றை மீறினால் நீ நடத்தைக் கெட்டவள் என இந்தச் சமூகம் உன்னைத் தூற்றும்.
- நீ ஒரு பெண். நீ கீழ்ப்படிந்து அடக்க ஒடுக்கமாக இருக்க வேண்டியவள். கணவனுக்கு நீ கீழ்ப்படிய வேண்டும். உனக்கு சுயவிருப்பு வெறுப்புகள், தூரநோக்குகள், எதிர்காலத் திட்டங்கள் எதுவும் இருக்க முடியாது.



கிட்டத்தட்ட திருமண வயதுக்கு வந்தவள் என இந்தச் சமூகம் கணிக்கும் வயதில் உள்ள பெண். ஒருவர், தன் தாயும் உற்றார் உறவினர்களும் மேற் சொன்னவற்றை மீளமீள ஒப்புவித்து தன்னை திருமணத்துக்கு வற்புறுத்துவதாகவும், தான் ஒரு இலட்சியப் பாதையை வகுத்துக் கொண்டு செயற்படுவதாகவும், திருமணம் இதற்கு எவ்வளவு பெரிய தடையாக இருக்கப் போகின்றது என தான் அறிவதாகவும் தனது விசனத்தை எம்முடன் பகிர்ந்து கொண்டார்.

பெண் விடுதலை, பெண்ணிலைவாதம் தொடர்பாக ஆழ்ந்த விபர பரப்பும், அறிவும் கொண்ட ஒரு பெண், குறிப்பிட்ட அப்பெண்ணுக்கு சில ஆலோசனைகளைக் கூறினார்.

அத்தோடு அன்று எம்மத்தியில் இத்தலைப்பு பெரும் விவாதத்திற்குள்ளாகியது.

இன்றைய சமூகத்தில் இளம் தலைமுறைப் பெண்கள் திருமணம், குடும்பம் பற்றி வித்தியாசமான வேறுபாடான புரிதல் கொண்டவர்களாகவே காணப்படுகின்றனர்.

- ஆண்களுக்கு சம்பளமின்றி வேலை செய்யவும், பாலியல் உறவு வைத்துக் கொள்ளவும், தன் வாரிசுகளை உருவாக்கவும் தான் பெண்களுக்கு திருமணம் முடித்து வைக்கப்படுகின்றது. இது அவர்களுக்கு சார்பானது. வீணே ஒரு ஆணுக்காக என் திறமைகளைக் கிடப்பில் போட்டு விட்டு, என் விருப்பு வெறுப்புகளை தியாகம் செய்ய நான் தயாராயில்லை.
- ஆணாதிக்கப் போக்கற்ற ஆண்கள் -அதிலும் நம் சமூகத்தில் மிகக் குறைவு .ஒவ்வொரு வெற்றி பெற்ற ஆணுக்கு பின் ஒரு பெண் இருக்கிறாள் என்பது எல்லாம் வெற்று வாதங்கள். மாறாக ஒரு பெண்ணின் திறமைகள் உயர்வுகள் எல்லாம் அவ்விடத்தில் ஈவிரக்கமின்றி உறிஞ்சப்படுகின்றன, அவ்வளவே. எல்லாப் பெண்களும் அவ்வாறு வாழ்ந்து விடுவார்கள் என்று சொல்வதற்கில்லை.
- என் திறமைகளுக்கு மதிப்புக் கொடுக்கும் என் விருப்பு வெறுப்பின் பேரில் முழுச் சுதந்திரத்தை அங்கீகரிக்கும், குறிப்பாக பெண் என மதிக்கும் ஆணையே நானும் மதிப்பேன்.
- பெண்களின் திறமைகளை தனித்துவத்தை காலில் போட்டு நசுக்கும் இந்த குடும்ப அமைப்பை ஈவிரக்கமின்றி கலைத்துப்போட வேண்டும்.

இவை தனிப்பட்ட சில அபிப்பிராயங்கள்.

திருமணம் என்ற கலாசார பந்தத்தை மீறினால் என்ன்? அதன் விளைவுகள் எப்படியிருக்கும் என்ற கேள்விகளை இத்தனிப்பட்ட அபிப்பிராயங்கள் சீர்துாக்கிப் பார்க்கின்றன.

ஆயினும் திருமணம், குடும்பம் என்ற வட்டத்திற்குள் தம்மை சிறை வைக்காதவர்களை இந்தச் சமூகம் எப்படி ஏற்றுக் கொள்கின்றது? சமூகத்தில் வாழ்க்கையில் உயர்ந்த இடத்தைப் பெற்ற பெண்கள் திருமணம் என்ற குறுகிய வட்டத்திற்குள் தம்மை வரையறுத்துக் கொள்ளாததன் காரணம் என்ன? போன்ற கேள்விகளும் இந்த அடிப்படையில் தோன்றாமல் இல்லை. திருமணம் செய்யாத பெண்களை இந்த சமூகம் மதிக்கும் விதம் தான் பெண்கள் குடும்ப அமைப்பினை வலிந்து ஏற்றுக்கொள்ள பெரும் காரணமாக உள்ளதெனலாம்.

பொதுவாகவே சமூகத்தில் பற்பல துறைகளில் வீற்றிருக்கும் பெண்கள்

ரட்ணா

குடும்ப அமைப்பிலிருந்து வெளியேறியவர்களாகவோ அல்லது அந்த கட்டமைப்பை தவிர்த்தவர்களாகவோ உள்ளனர். அதேபோல் குடும்ப அமைப்புக்குள் தம்மை உட்படுத்திக்கொண்ட பெண்கள் தமது திறமைகளுக்கும் ஆர்வத்திற்கும் ஆப்பு வைக்கின்றனர். அல்லது அவ்வாறு செய்யுமாறு வற்புறுத்தப்படுகின்றனர். இந்த வகையில் கொஞ்சம் மூளைச்சலவை செய்யப்பட்ட பெண்கள் (அனேகமாக எல்லா பெண்களும் மூளைச்சலவை செய்யப்பட்டவர்கள் தான்) இவ்விடயங்களை யோசிக்கவே செய்வர் எனலாம்.

" எனக்குத் தெரிந்தவரை குடும்ப அமைப்பில் பெண்களுக்கு என்ன பூரண சுதந்திரம் கிடைத்துவிடப்போகின்றது? எவ்வளவு முற்போக்கான மனிதரானாலும் அவர் தன் மனைவியை சேவகம் செய்யவே பணிக்கின்றார். இது மனைவி என்றால் அப்படித்தான் இருக்க வேண்டும், நீ அதற்காகத் தானே திருமணம் முடித்தாய் என்றல்லவா உறுதிப்படுத்துகின்றது?" என்கிறார் விவாகரத்துப் பெற்ற பெண் ஒருவர்.

குறிப்பாக இன்றைய சமூகத்தில் பெண்கள் இரட்டைச் சுமையினால் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். பொருளாதார உழைப்பும், வீட்டு உழைப்பும் இவ்விடயத்தில் பெரும் பங்காற்றுகின்றன. இந்த இரட்டைச் சுமை எவ்வளவு பளுமிக்கது என்பதற்கு சிறந்த ஆதாரமாக நம் பெண்கள் அமைப்புகளில் தொழில் செய்யும் பெண்களை மனம் கொள்ளலாம். இந்தப் பெண்கள் அமைப்புகளினால் வெளியிடப்படும் சஞ்சிகைகள் குறித்த நேரத்திற்கு வாசகர்கள் (?) கைகளுக்கு எட்டாததற்கு பெரும் காரணம் இந்த இரட்டை உழைப்புத் தான்.. அதனை தமது ஆசிரியர் தலையங்கங்களிலேயே அவர்கள் ஒப்புவித்துள்ளார்கள்.

வீட்டு வேலைகள் இந்த வகையில் ஆணாதிக்கத்திற்கே துணை போகின்றன. இந்நிலையில் ஒரு மாற்றத்தை நோக்கிச் செல்லும் பெண்களுக்கு சமநீதியை உரிமையை மறுக்கும் குடும்ப அமைப்பு ஒரு எதிர்மறையான விளைவையே தர வல்லது.

"பெண்களது உழைப்பால் யார் நன்மை அடைகின்றார்கள். நிச்சயமாக முதலாளித்துவவாதிகள். அத்துடன் வீட்டில் அவர்களது தனிப்பட்ட சேவையைப் பெறும் கணவர்களும், தந்தையரும் கூட. ஆண்கள் ஆடம்பரப் பொருள் நுகர்வு , ஓய்வுநேரம், தாம் பெறும் சேவைகள் ஆகியவற்றில் பெண்களை விட உயர்ந்த வாழ்க்கைத் தரம் உடையவர்களாயுள்ளனர். பெண்கள் தொடர்ந்தும் ஒடுக்கப்படுவதில் ஆண்களுக்கு உலகாயத நலன்கள் உள்ளன" என்கிறார் பெண்ணிலைவாதியான ஹெய்டி ஹார்ட்மன்.

இது ஒரு புறமிருக்க, குடும்ப அமைப்பை நிராகரிக்கும் பெண்களுக்கு சமூகத்தில் இருக்கும் வரவேற்பையும் சுட்டிக் காட்டுதல் வேண்டும். குறிப்பாக விவாகரத்து பெற்ற பெண்களை இந்தச் சமூகம் விலக்கி வைத்துள்ளது. பெண்கள் என்று சொல்வதற்கு இவர்கள் அருகதையற்றவர்கள் என்ற போக்கே காணப்படுகின்றது. மாறாக இவர்களின் ஆற்றல்களை, இந்த சமூகம் துளி கூட மதிப்பிடுவது கிடையாது.

சமீபத்தில் விவாகரத்து வழக்கொன்றின் போது சமூகத்தில் உயர் அந்தஸ்து கொண்ட ஒரு ஆண் தனது மனைவி எழுதிய பெண்ணிலைவாதம் சம்பந்தமான கட்டுரைகளை நீதிமன்றத்தில் சமர்ப்பித்து அவள் ஒரு பெண்ணிலைவாதி, அவள் குடும்ப அமைப்புக்கு ஒத்து வர மாட்டாள் என்று குற்றம் சுமத்தியிருந்தார். இறுதியில் அவருக்கு விவாகரத்து கிடைக்கப் பெற்றது.

இந்நிலையில் பெண்கள் குடும்ப அமைப்புப் பற்றி விசனங்களை வெளியிடுவது ஆச்சரியத்திற்குரியதல்ல.

இறுதியாக ஹெய்டி ஹார்ட்மன் கூறிய சில விடயங்களை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானது.

"---- மூலவளங்களுக்கான பெண்களது நுழைவுரிமையையும் அவர்களது பாலியலையும் கட்டுப்படுத்துவதன் மூலம் பெண்களது உழைப்புச் சக்தியை, ஆண்களுக்குப் பல தனிப்பட்டதும் பால் ரீதியானதுமான சேவைகளைப் பெறவும், பிள்ளைகளை வளர்க்கவும் பயன்படுத்த முடிகின்றது. ஆண்களுக்குப். பெண்கள் அளிக்கும் சேவையானது மகிழ்ச்சியற்ற பல வேலைகளை ஆண்கள் செய்வதிலிருந்து (குளியலறை கழுவுதல்) விடுவிக்கிறது. இது குடும்பத்திற்குள்ளும் குடும்பத்திற்கு வெளியேயும் நடப்பதாகும். உதாரணமாக குடும்பத்திற்கு வெளியே ஆண் அதிகாரிகள் தமது பெண் செயலாளர்களைப் பல தனிப்பட்ட வேலைகள் செய்யவும், தேநீர் தயாரிக்கவும் பயன்படுத்துவதாகும். பிள்ளைகளை வளர்ப்பதும் ஆணாதிக்க முறைமையை நிலை நிறுத்துவதற்கு உதவுகிறது."

=



## பிரதி செய்யப்பட்ட வெள்ளைத் திமிர்

1

காட்டுமிராண்டித்தனமாகவும் நயவஞ்சகமாகவும்
தோற்கடிக்கப்பட்டனர் எம் மூதாதையர்
தலைமுறை தலைமுறையாகப் புதுப்புது வழிகளில்
சூறையாடியபடியே ஆயினும்
கனவான்களாகவும் கோமகன்களாகவும்
எங்களில் தங்களைத் திணித்துக் கொண்டனர்
எம் சுயத்தை உருவி வீசி
தம் சேவகச் சடங்களாய்
பதனிட்டுப் போயினர் வெள்ளைத் திமிரர்.

புதியவர் வந்தனர் கறுப்புத் தோலில்
பிரதி செய்யப்பட்ட வெள்ளைத் திமிராக...
செய்மதி விடுவதும் ஏவுகணை சுடுவதும்
அவர் செய்வார்
வாரீர் எம் புதல்வீர் புதிய கூலியராய்....

உல்லாசப் பயணம் வரும்
வெள்ளைத் திமிரருக்கு பரிசாரகர் ஆகலாம்:
நோயுற்று வீழுகையில் பரிகரிக்கும் தாதியரும் ஆகலாம்
வாரீர் எம் புதல்வர் ஏற்றுமதி ஆகலாம்
என்று கூவிப் புதியவர் வந்தனர்.

கலையாத கேசமும் குலையாத செல்வமும்
அதிகாரத்துவத்துடன் ஓர் கபடுவாராத நட்பும் பூண்ட
பிரதிசெய்யப்பட்ட வெள்ளைத் திமிரராக
புதியவர் வந்தனர் கறுப்புத் தோலில்.

11

அண்டம் திடுக்கிட
ஆதிசேடன் தலை நடங்க
தண்டத்தடைக் கையெடுத்துத் தாம் தோம் திமியென
வந்தாரையா மீண்டும் வந்தாரையா!

ஒற்றை ஓர் நொடியில்
சுட்டும் விரலின் நுனியில்
உலகை மாற்றவென
பொதிப்புத்தி தலை கொண்டார்
வந்தாரையா மீண்டும் வந்தாரையா!

திட்டமும் காவி வந்தார்
கொட்டமும் அடித்தார்
இறைக்கின்றார் பணம் உலக வங்கியார் - என
உறுமியும் நின்றார்
ஏருங்கள் இல்லையென்றால் தூரவிலகுங்கள்
திட்டம், போட்டது போட்டது தான்
நடந்தேயாகும் என்றார்
அறைந்தார் மேசையில்
ஆங்கில வார்த்தைகளை ஊத்தையில்
தோய்த்து எறிந்தார்,
ஏதும் கேட்டால்
தூக்குவேன் என்றார், துலைப்பேன் என்றார்
கோட்டில் நிறுத்திக் கோதாரி பண்ணிடுவேன் - என்று
கொடுக்கை வரிந்து கட்டிக் கொம்பி நின்றார்.

கொடுக்கை வரிந்து கட்டிக் கொம்பி நின்றார் - இவர்
எந்தக் கிரகவாசி கிளி!
நாவாள் வீசி நடுவில் இருந்தவர் - அவர்
பிரதி செய்யப்பட்ட வெள்ளைத் திமிரர்!

சி. ஜெய்சங்கர்

# முஸ்லிம்களைக் குறிவைக்கும் பேரினவாதம்!


## வீரவிதான, பயங்கரவாத எதிர்ப்பு இயக்கம் குறித்து மேலும் சில குறிப்புக்கள்

- இறக்காமம் றவூப்.

"நீங்கள் சண்டையிட விரும்பினால் நாங்களும் சண்டையிடத் தயார். போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்"

1977ம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ஜுனியர் ரிச்சட் ஜயவர்த்தன, பாராளுமன்றத்தில் உரத்துச் சொன்ன போர்ப் பிரகடனம் இது. ஜனநாயகத்தையும், இன ஒற்றுமையையும் பாதுகாக்கும் யாப்புகளை யாக்க வேண்டிய ஒரு நாடாளுமன்றத்தில் அரச கட்டில் அமர்ந்து கொண்ட பொறுப்புள்ள ஒரு தலைமையினால் கூறப்பட்ட வார்த்தைகள் இது. "History repeats itself" என்னும் கால் மாக்ஸின் ஒரு வாக்கியத் தத்துவத்துக்கு வரலாறு இன்னும் வியாக்கியானங்கள் கூறிக் கொண்டிருக்க நேர்ந்துள்ளமை பல்லினச் சமூகங்கள் வாழும் இலங்கையைப் பொறுத்தவரை துரதிர்ஷ்டவசமானதே.

1915ம் ஆண்டைய சிங்கள - முஸ்லிம் கலவரம் முதல் அண்மைய சௌமிய பவன் கலவரம் வரையில் கடந்த ஒன்றரைத் தசாப்த காலத்தில் இந்த நாட்டில் மேற்கிளம்பிய எல்லா இனவாத முரண்பாடுகளுக்கும் பின்னணியில் இந்த நாட்டின் பேரினவாதம் இருந்து வந்துள்ளமையை வரலாறு தெரிந்த எவரும் நிராகரிக்க முடியாது. நமது நாட்டின் இரு பெரும்பான்மைக் கட்சிகளும் இதில் நிகருக்கு நிகரான




வரலாற்றுப் பங்கையும் வகித்து வந்துள்ளன. 1970ல் ஆட்சிபீடமேறிய ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினதும், லங்கா சம சமாஜக் கட்சியினதும், இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியினதும் கூட்டாட்சியில் கொண்டு வரப்பட்ட பேரினவாத அரசியல் யாப்பே இன்று எரிந்து கொண்டிருக்கும் இனவாதத் தீக்கு எண்ணெய் பாய்ச்சிற்று என்ற அப்பழுக்கற்ற வரலாற்று யதார்த்தத்திலிருந்து இலங்கை அரசாங்கங்களே சிறுபான்மைச் சமூகங்களை இன வன்முறைகளுக்கூடாக ஒடுக்கி வந்துள்ளன என்பதும், பேரினவாதத்தை ஜனரஞ்சகமாக நிறுவனமயப்படுத்தி வந்துள்ளன என்பதும் தெளிவான விடயங்கள்.

இந்த வரலாற்றுப் பகைப் புலத்தில் நின்றே சிங்கள வீரவிதான இயக்கம், ஹெல உறும போன்ற இனவாத இயக்கங்களையும், அவற்றின் செயற்பாடுகள், ஆர்ப்பாட்டங்கள், வேண்டுகோள்களையும் நாம் ஆராய வேண்டியுள்ளது. ஏனெனில், முன்னைய இனவாதக் குழுக்களுக்குக் குறுகிய அரசியல் லாப நோக்கு மாத்திரமே இயக்க சக்தியாக இருந்து வந்துள்ளது. ஆனால், வீரவிதானவோ ஒரு பெரும் இனக்கலவரத்தை, போரை உண்டு பண்ணக்கூடிய அளவுக்குப் பேரினவாதக் கருத்தாக்கத்தில் உறுதியாய் நிற்கின்றது.

பௌத்த பிக்குமார்கள், கல்விமான்கள், வர்த்தகர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என எல்லாத் தரப்பிலுள்ளவர்களும் இதற்கு ஆதரவாய் பின்னணி உதவியாளர்களாய் இணைந்துள்ளதானது, பேரினவாதத்தின் சக்தி முன்னெப்போதும் இல்லாதவாறு முனைப்புப் பெற்றுள்ளமையைத் தெளிவாகச் சுட்டுகின்றது மட்டுமல்ல, இதன் செயல் தீவிரத்தை நோக்கும் போது அசுர வேகத்தில் வளர்ந்து முழு நாட்டையும் விஞ்சிவிடும் அளவுக்கு அதன் பிரச்சார உத்திகள், பரப்புரைகள் மிக நுணுக்கமாக மேற்கொள்ளப்படுகின்றன. ஜே.வி.பியினர் இந்த நாட்டுச் சிங்கள மக்களின் எல்லா மட்டத்தினரையும் அவர்களது கொள்கைப் பிரச்சாரத்தினால் காவுகொண்டதை விட, வீரவிதான மக்களை மூளைச் சலவை செய்வதில் குறைந்த காலத்திலேயே பாரிய வெற்றியை எய்தும் என்பது திண்ணம்.

ஏனெனில், மக்களை ஒன்று திரட்டுவதற்கான கருவியாக இனத்துவேஷத்தை இது கையாள்கிறது. இன்று கொழும்பு மற்றும் றுஹுணு பல்கலைக்கழகங்களின் சிங்கள மாணவர்கள் சிலரை தேர்ந்தெடுத்து அவர்களுக்கென வீரவிதானவினால் வகுக்கப்பட்ட இனவாதத்தை உள்ளங்களில் புகுத்திப் பேரின - வெகுஜனப் பலத்தைத் திரட்டும் வகையிலான பாடத்திட்டம் போதிக்கப்படும் நிலைக்கு இந்த நாடு சமாதானத்திலிருந்து தூரமாகிக் கொண்டிருக்கும் நிலை நேர்ந்துள்ளது. பலருக்கு இது வெறும் 'செய்தியாக' இருக்கலாம். ஆனால், பிரக்ஞைபூர்வமானவர்களுக்கு இது பேரதிர்ச்சியையே கொடுத்து விடும்.

இலங்கையின் பூர்வீகக் குடிகள் சிங்களவர்கள் மாத்திரம் என்பதும், இந்த நாட்டிலுள்ள பெரும்பாலான நகரங்கள் பௌத்தர்களுக்கே சொந்தமாக இருந்துள்ளன. இன்று அவை சிறுபான்மையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன என்பதையும் வரலாற்று ரீதியாக விளக்குவதும், இப்பாடத் திட்டத்தில் முக்கிய பகுதியாகக் கற்பிக்கப்படுகின்றது. இந்த வகையிலேயே கொழும்பில் இன்று தமிழர்கள் மிகையாகக் குடியேறியுள்ளார்கள் எனவும், கண்டியில் முஸ்லிம்கள், சிங்களவர்களின் பூர்வீகப் பிரதேசங்களில் குடியேறி நாட்டின் பொருளாதாரத்தைத் தங்களது கைக்குள் சுருட்டி வைத்துள்ளார்கள் எனவும் வீரவிதான இயக்கத்தினர் பிரச்சாரம் செய்து வருகின்றனர். இன உணர்வை ஊட்டும் வகையில் அது நடாத்தும் ஆர்ப்பாட்டங்கள், பிக்குமார்களின் பௌத்த மத வெறி உரைகள், நாளாந்தம் வெளியிடும் துண்டுப் பிரசுரங்கள் இன்று சில தனியார் தொலைக் காட்சிச் சேவைகள் (எடுத்துக் காட்டாக ஐ.டி.என்.) என வீரவிதானவின் இனவாதப் பிரச்சார சாதனங்கள் விரிந்துச் செல்கின்றன. போதாக் குறைக்குச் சர்வதேச ரீதியாக உள்ள சிங்களப் புத்திஜீவிகளின் தொடர்புகளைப் பேண உத்தியோகபூர்வ 'வெப்'தளத்தையும் அது நிறுவியுள்ளது. இலங்கையின் பாதுகாப்பு நிதியத்துக்கு நன்கொடைகளை அனுப்பிக் கொண்டிருக்கும். வெளிநாடுகளிலுள்ள இலங்கைச் சிங்களவர்கள் இப்போது தங்களது உதவிக் கரங்களை வீரவிதானவை நோக்கி நீட்டுவதாகவும் சில சிங்களப் பத்திரிகைகள் எழுதியுள்ளன. இவற்றிலிருந்து நாம் தெளிவாக விளங்கிக் கொள்ளும் உண்மை மிகத் துல்லியமானது.



நமது நாட்டின் நீண்ட கால வரலாற்று வளைவு, சுழிவுகளிலும் வர்த்தகப் பெருக்கிலும், முளைத்துக் கிளைத்த எத்தனையோ இனவாத இயக்கங்கள், ஆட்சிகள் சுயலாபம் தேடும் குறுகிய முயற்சியில் இறங்கி, ஈற்றில் மண்ணைக் கவ்விக் கொண்டு மாண்டுபோயின. எப். ஆர், ஜயசூரிய, ஆர். ஜி. சேனநாயக்க, கே.எம்.பி. இராஜரத்ன போன்றோரின் தலைமையில் இயங்கிய "ஜாதிக்க விமுக்தி பெரமுன", "சிங்கள மகஜனக் கட்சி", "சிங்கள பாஷா பெரமுன" என்பன இதற்கு நல்ல சான்றுகள். ஆனால், வீரவிதான இவற்றிலிருந்து மிகவும் வேறுபட்டது. பாடத் திட்டத்தினூடாக, புத்திஜீவிகளையும், கல்விமான்களையும், பௌத்த பிக்குகளையும் ஒன்றிணைத்து, முன்னெடுத்துச் செல்லப்படும் அதனது இனவாதப் போக்குகள் சிங்களச் சமூகத்தின் பெருவாரியான மக்கள் மத்தியில் தாக்கம் செலுத்தவல்லது மட்டுமல்ல எதிர்காலத்தில் ஒரு பெரும் மக்கள் போராட்டத்துக்கான அடித்தளத்தையே அது இப்போது இட்டுக் கொண்டிருக்கிறது எனலாம். இதன் விலாவாரியான வளர்ச்சிக் கட்டத்தில் விடுதலைப் புலிகள் பலவீனமடைவார்களாயின், சிறுபான்மை மக்களை நோக்கிய தாக்குதல்களை அப்பட்டமாக அது முன்னெடுக்கும். அப்போது "நீங்கள் யுத்தம் செய்யத் தயார் என்றால் நாங்களும் தயார்" என்பது இந்த நாட்டின் தேசிய கீதமாகக் கூட மாறலாம்.

தென்னிலங்கையிலுள்ள தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்கும் எதிரான பிரச்சாரத்தோடு ஆரம்பித்த வீரவிதானவும், ஹெல உறுமயும் இன்று நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் விரவி வருகின்றது. குறிப்பாக மலையகம், வட - மேல் மாகாணம், அம்பாறை ஆகியவற்றில் அதன் பிரச்சார உத்திகள் கூர்மைப் படுத்தப்பட்டுள்ளன. வீரவிதான கொழும்பில் வாழும் தமிழர்களுக்கோ, மலையக தோட்டத் தொழிலாளர்களுக்கோ மட்டும் எதிரானது அல்ல. மாறாக, இந்நாட்டிலுள்ள முஸ்லிம்களையும் குறிவைத்துத் தாக்கும் தருணத்தை அது எதிர்பார்த்து நிற்கிறது. அது வெளியிடும் பெரும்பாலான துண்டுப் பிரசுரங்களில் அண்மையில் நடாத்திய பொதுக் கூட்டங்களில், ஆர்ப்பாட்டங்களில் அது முழங்கும் சுலோகங்களில் இந்த உண்மையைத் தெளிவாக நாம் காணலாம். அண்மையில் கண்டி குயின்ஸ் ஹொட்டேலில் நிகழ்ந்த அதனது கூட்டத்தில் உரையாற்றிய அதன் பேச்சாளர் சம்பிக்க றணவக்க, "இந்த நாட்டின் பொருளாதாரம் முழுவதும் முஸ்லிம்களின் கையிலேயே உள்ளது. சிங்கள இளைஞர்களில் பெரும் வீதத்தினர் வேலையில்லாப் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளனர். எனவே பொருளாதாரத்தில் நமது சமூகம் முன்னேற வேண்டுமாயின், முஸ்லிம்களிடமுள்ள பொருளாதாரத்தை நமது கைகளுக்கு மாற்றும் வழிகள் குறித்துச் சிந்திக்க வேண்டும்" எனக் கூறியுள்ளார். கடந்த மாதம் அக்குறணை எட்டாம் கட்டம் எனும் இடத்தில் முஸ்லிம் ஒருவருக்குச் சொந்தமான காணியில் சில சிங்களவர்கள் இரவோடு இரவாக ஒரு கடையைக் கட்டியுள்ளார்கள். காலையில் அது உடைக்கப்பட்ட போது அடுத்த நாள் பொலிஸ் பாதுகாப்புடன் கடையைச் சிங்களவர்கள் கட்டியதாகவும், பின்னர் அது பிரச்சினையாக உருவெடுத்துள்ளதாகவும் தெரிய வருகின்றது. இதே போன்று தான் மார்ச் மாதம் அம்பாந்தோட்டையிலுள்ள லுணுகம்வெஹெர எட்டாம் கொலனி முஸ்லிம்களது நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பேரினவாதிகளால் சூறையாடப்பட்டன. 1981ல் தென்மாகாண இடவசதியற்ற முஸ்லிம்களுக்காக உருவாக்கப்பட்ட கொல்னி மாத்திரமே அங்கு உருவாக்கப்பட்ட 21 கொலனிகளுள் ஒரேயொரு முஸ்லிம் கொலனி ஆகும். இதனையும் வேரோடு பிடுங்கியெறிய சிங்கள-ய இனவாதிகள் கண்ட ஒரேயொரு உத்தி "காணிச் சுவீகரிப்பு". கடந்த வருடம் ஒக்டோபரில் அம்பாறை நகர்ப் பள்ளிவாயலின் சுற்று மதிலைக் கனரக இயந்திரங்களால் இரவோடு இரவாக இடித்துத் தள்ளிய சிங்கள இனவாதிகள் பேருவளை, அக்குறணை, கொழும்பு ஆகிய பிரதேச முஸ்லிம்களைத் தொடர்ந்து குறிபார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

பரஸ்பர இனக் குரோதத்தையும், சந்தேகப் பார்வையையும் வளர்ப்பது அல்ல இந்தச் சம்பவங்களை இங்கு குறித்துக் காட்டுவதற்கான நோக்கம். மாறாக, முஸ்லிம்கள் தொடர்ந்தும் உறங்கிக் கொண்டிருக்கக் கூடாது. விழிப்புப் பெற வேண்டும், தங்களை நோக்கி நகர்த்தப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு பேரனர்த்தம், தாக்குதல் குறித்துத் தூரதிருஷ்டியோடும், முன்னோக்கிப் பார்வையுடனும் செயலாற்ற வேண்டும் என்பதுவே. இதுவே எமது உண்மையான அவா. நாம் விடுக்கும் நியாயமான வேண்டுகோள். 1915ல் கண்டியில், சிங்கள இனவாதிகளால், முஸ்லிம்களுக்கு எதிராகத் திட்டமிட்டு நடாத்தப்பட்ட இனக் கலவரம், 1976ல் புத்தளப் பள்ளி வாயலில் வைத்து ஏழு முஸ்லிம்கள் சுட்டு வீழ்த்தப்பட்டமை அதனைத் தொடர்ந்த இனப் பூசல்கள் மற்றும் பேருவளை, சிங்கள, முஸ்லிம் கலவரம், திக்குவெல்லைச் சம்பவம், தீகவாபி, பொன்னன் வெளி, ஆலிம்சேனை விவகாரம், பன்னல அலபடகம தீ வைப்பு, கடையடைப்பு, கலகெதர இனமோதல் என்று இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கும் இத்தகு இன வன்முறைகள், முரண்பாடுகள் எதிர்காலத்தில் தலை தூக்காமல் இருக்க வேண்டும் என்பதே நமது ஆதங்கம்.

ஒன்றை மாத்திரம் நாம் மனதில் நிறுத்த வேண்டும். அதாவது இந்த இனவாத வரலாற்றுக் காயங்களை ஏற்படுத்தியதில் பெரும்பங்கு வகித்து வருவது எல்லாச் சிங்கள மக்களோ, பௌத்த குருமார்களோ அல்லாவிடினும் சிங்களப் பேரினவாதத்துக்குத் தூபமிட்டு, அதனை அரசியல்மயப்படுத்திப் பெரும் வெகுஜனச் சக்தியாகக் கட்டியெழுப்புவதில் இன்று கச்சையைக் கட்டிக் கொண்டு களம் இறங்கியிருப்பவர்கள் பௌத்த பிக்குகளாவர். உண்மையில், இன்றைய வீரவிதானவும், பயங்கரவாத எதிர்ப்பு இயக்கமும், சிங்கள ஆணைக்குழுவின் வழித்தோன்றல்களே. இன்று இலங்கையிலுள்ள இனவாத இயக்கங்கள் அனைத்துக்கும், பௌத்த மத அமைப்புகளுக்குமிடையே நெருங்கிய தொடர்பு உள்ளது. இதுவே இப்பிரச்சினையை இன்னும் விஸ்தாரப்படுத்திச் சிக்கலாக்குகின்றது. எமது நாட்டின் இனவாதத்தோடு, பௌத்த கருத்தாக்கம் பின்புலமாக இருந்து வரும் காலமெல்லாம் இனவாத அலைகள் ஒரு போதும் ஓயப் போவதில்லை. சமாதானம் எட்டாக் கனியாகிவிடும். மடிகே பஞ்சாசீஹ தேரரும், மாதுலுவாவே சோபித்த தேரரும் தான் தலைவர்களாக இருக்கும் போது எப்படி இங்கு இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வு பிறக்க முடியும்? அமைதி நிலவ முடியும்?

மிக அண்மையில் வீரவிதான வெளியிட்டுள்ள அனைத்துத் துண்டுப் பிரசுரங்களிலும் முஸ்லிம்கள் பற்றிய வெறுப்பைக், குரோதத்தைச் சிங்கள மக்கள் மத்தியில் தூண்டும் வகையிலான வாசகங்களும், கருத்துக்களுமே இடம் பெற்றுள்ளன. எடுத்துக் காட்டாகக் கடந்த மாதம் கண்டியில் பிரசுரிக்கப்பட்ட ஒரு துண்டுப் பிரசுரத்தில் கட்சி, அரசியல் பேதங்களை மறந்து அனைத்துப் பௌத்தர்களும் ஒரே பௌத்த தலைமையின் கீழ் ஒன்று சேர வேண்டும். இல்லையேல், இந்த நாடு எதிர்காலத்தில் ஒரு முஸ்லிம் நாடாக மாறிவிடும். உங்களது பிள்ளைகள் இன்னும் 25 வருடங்களில் அல்லாஹ்விடம் உதவி தேடுபவர்களாக மாறிவிடுவார்கள் எனவும், 1948 கணக்கெடுப்பின்படி இலங்கைப் பௌத்தர்களின் வீதம் 80ஆக இருந்தது. ஆனால், 1993ம் ஆண்டு 52வீதமாக குறைந்துள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தகு இனவாத நச்சுக் கருத்துக்களை விதைக்கும் துண்டுப்பிரசுரங்களை வெளியிடும் பௌத்த மற்றும் இனவாத அமைப்புக்கள் இன்று முஸ்லிம்களே இலங்கையில் அதிகரித்து வருவதாகவும், பௌத்தர்களுக்கு அது ஒரு சவால் எனவும் வலியுறுத்தி வருகின்றன. அது மட்டுமல்ல பொருளாதாரத்தில் இன்று முஸ்லிம்களே எல்லா வளங்களையும் கொண்டிருப்பதாகவும், சிங்களப்

▶

நன்றி - நூலகத்திட்டம்



பெண்கள் பல முஸ்லிம் செல்வந்தர்களின் வீடுகளில் பணிப் பெண்களாக இருப்பது சிங்களச் சமூகத்துக்கே அவமானம் எனவும் இன உணர்வுகளைத் தூண்டும் வகையில் பல்கலைக்கழகச் சிங்கள மாணவர்களுக்குப் புள்ளி விபரங்களோடு போதித்து வருகின்றன. ஆனால், உண்மை இதற்கு நேர் முரணானது. இன்றைய இலங்கையின் பல்லினச் சமூகங்களிடையே தமது அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாத, பொருளாதார நெருக்கடிகளுக்கும், வறுமைக்கும் முகங்கொடுப்பவர்களுள் முஸ்லிம் சமூகத்தின் வீதம் அதிகரித்து வருகின்றது. வட - கிழக்கு, வடமேல், ஊவா, சப்ரகமுவ, வட - மத்திய முஸ்லிம்களது வாழ்வியல் போக்குகளை அவதானித்தால், இந்த உண்மையைப் புரிந்து கொள்ளலாம். எனினும், துரதிருஷ்டவசமாக "ஆடம்பர உணர்வு" ஓரளவு மிகையாக உள்ள எமது சமூகத்தில் பலர் வங்கிக் கடன் பெற்றே கட்டி முடித்துள்ள சில ஒற்றை மாடி வீடுகளும், வாடகைக் கொள்வனவு முறையில் வாங்கி வைத்திருக்கும் வாகனங்களுமே இத்தகு இனவாதத்தைத் தூண்டும் இயக்கங்களுக்கு ஒரு பெரும் பொருளாதாரச் செழிப்பாகத் தெரிகிறது. அதனைச் சகித்துக் கொள்ள முடியாமல் குரோதத்தையும், விரோதத்தையும் வளர்க்கப் பிரச்சார உத்திகளிடம் தஞ்சம் புகுந்துள்ளன.

இத்தகு இனவாதத் தீயை மூட்டி, அதில் குளிர் காய்ந்து சிறுபான்மையினரை அராஜகத்தாலும், அடக்குமுறையாலும் ஒடுக்கிவிட முனையும் இந்த இயக்கத்தைக் கொழும்பு நகரில், அது காட்டிய இனவெறிக் கூத்துக்களைத் தொடர்ந்து தடை செய்யுமாறு பல சிறுபான்மைக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் ஜனாதிபதிக்குக் கோரிக்கை விடுத்திருந்தன. எனினும், தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி வீரவிதானவைத் தடை செய்யப் போவதாகச் சூளுரைத்த ஜனாதிபதி பின்னர் மௌனமாகிவிட்டதன் மர்மம் புரியாமலில்லை. இற்றைவரை வீரவிதான குறித்து ஐ.தே.கவும் தனது நிலைப்பாட்டை வெளியிடாமைக்கும் காரணமும் இல்லாமலில்லை. வீரவிதானவைத் தடை செய்வது சிங்களவர்களுக்கு இழைக்கும் துரோகமாகவும், அநியாயமாகவும் கருதும் சில பத்திரிகைகள் தேசிய பயங்கரவாத எதிர்ப்பு இயக்கம் (NMAT) என்பன ஜனநாயகப் பாதையில் சிங்களச் சமூகத்துக்கு இழைக்கப்பட்ட அநியாயங்களுக்கு எதிராகக் குரல் எழுப்புவதாக எழுதிக் குவிக்கின்றன.

பல அரசாங்கப் பொறுப்பு வாய்ந்த அமைச்சர்கள் இதற்குப் பின்னாதரவு கொடுக்கிறார்கள். இலங்கையில் தேசிய பௌத்த மத உயர் பீடத்து பிக்குகள் தலைவராக இருக்கிறார்கள். இத்தகைய நிலையில் சிறுபான்மையானது கோரிக்கைக்குப் பதிலளிப்பதா அல்லது பெரும்பான்மையினது எதிர்ப்பைச் சம்பாதிப்பதா என்னும் திரிசங்கு நிலைக்கு ஜனாதிபதி தள்ளப்பட்டுள்ளார். அடுத்த தேர்தலில் தனது ஆசனத்தைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமாயின் ஜனாதிபதி வீரவிதானவைத் தடைசெய்ய முடியாத நிலையே தோன்றியுள்ளது.

இதுதான் ஜனாதிபதியைத் திக்குமுக்காட வைத்துள்ள முக்கிய காரணி. ஐ.தே.கவோ, வீரவிதானவின் பின்னியக்க சக்தியாகத் தொழிற்படுகின்றது. ஏனெனில், ஆணைக் குழுவின் அடுத்த கட்ட வளர்ச்சியே சிங்கள வீரவிதான இயக்கம். ஆனால், சிங்கள ஆணைக்குழுவின் சகல நடவடிக்கைகளிலும் ஐ.தே.க. பிரமுகர்கள் சிலர் வெளிப்படையாகவே பங்கு பற்றினர். அதேபோன்று மத்திய மாகாணத்தில் ஐ.தே.க. ஆட்சியமைக்க, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மறுத்த

⇨17

**அரசாங்கத்தின் புதிய அரசியலமைப்பு திருத்தத்தினால் நாடு துண்டாக்கப்படுவது உறுதியாகும்**




**நீங்கள் அதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா?**


(பயங்கரவாத எதிர்ப்பு இயக்கத்தினரால் வெளியிடப்பட்ட மேலுள்ள துண்டுப்பிரசுரத்தில் சிங்கள மொழியில் இருந்த குறிப்புகள் கட்டுரையாளரால் தமிழாக்கப்பட்டுள்ளன.)

### கார்கிலுக்குப் பின்... ... ... ... ... ...

# அயோக்கியர்களின் கடைசிப் புகலிடம்: தேசபக்தி?

அயோக்கியர்களின் கடைசிப் புகலிடம் அரசியல் என்றொரு ஆங்கிலப் பழமொழியை அறிவோம். அதனைச் சற்றே மாற்றி 'அயோக்கியர்களின் கடைசிப் புகலிடம் தேசபக்தி' என்று சொல்லுமளவிற்கு இங்கே நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. சமீபத்தில் பத்திரிகையொன்றில் வாசித்த ஒரு செய்தி: ராஜஸ்தானில் ஒரு விசாரணைக் கைதி. இளம் பெண் ஒருவரைக் கொடூரமாக எரித்துக் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டவர். தான் ராணுவத்தில் பீரங்கி சுடும் பயிற்சி பெற்றவர் என்றும், தன்னை விடுதலை செய்தால் கார்கிலுக்குப் போய் 'எதிரி'களைக் கொன்று விட்டு வீர மரணம் அடைவதாகவும் நீதிமன்றத்தில் சொல்லியுள்ளார். தேசபக்தியில் குற்றவாளிக்குச் சளைத்தவரா நீதிபதி? அவ்வாறே ஆணையிட்டார். எனினும் ராணுவம் அவரை சேர்த்துக் கொள்ளவில்லை. அவர் ஒரு சாதாரண வண்டி ஓட்டுநர் தானே ஒழிய பீரங்கி சுடுபவர் அல்ல என்பதும் அதற்கொரு காரணம். எனவே அவர் தொடர்ந்து சிறையில் வாடுகிறார் என்பது செய்தி.

பெங்களூரில் "கார்கில் பார் அன்ட் ரெஸ்டாரன்ட்" என் மதுக்கடை ஒன்று தொடங்கியுள்ளதாக இன்னொரு செய்தி.




பத்திரிகைகள் தேசபக்தியில் எல்லோரையும் விஞ்சின. இராணுவம் இந்திய வீரர்களின் உயிர்களுக்கு பழிதீர்த்ததாக வேண்டுமென்று எழுதியது 'பிசினஸ் ஸ்டான்டர்ட்' இதழ். "பாகிஸ்தானின் உள் நாட்டுப் பிரச்சினைகள் தீர்ந்து அமைதி நிலவினால் அது இந்தியாவுக்கு நல்லதல்ல. உடனே அதனை ஆயுதப் போட்டிக்கு இழுக்க வேண்டும். பாகிஸ்தானின் அரசியலிலும், சமூகத்திலும் ஏற்கனவே தோன்றியுள்ள விரிசல்களை சாதகமாக்கிக் கொள்ள தயங்கக் கூடாது" என அறிவுரை பகன்றார் புகழ் பெற்ற பத்திரிகையாளர் அருண்சோரி. 'தினமணி' இதனைத் தமிழில் பெயர்த்து வெளியிட்டது.

'நாட்டு நலனுக்காக' நெருக்கடி நிலை தேவை என்றால் நெருக்கடி நிலைப் பிரகடனத்தை ஆதரிப்போம் என முன்னாள் சோசலிஸ்ட் ஜார்ஜ் பெர்ணான்டஸின் சமதா கட்சி தீர்மானம் இயற்றியது. இராணுவத் தளபதி ஜெனரல் வி.பி. மாலிக்கிலிருந்து, சாதாரண பாரதீய ஜனதா கட்சி பிரச்சாரகர் வரை "கட்டுப்பாட்டுக் கோட்டை" (LOC) தாண்ட வேண்டும் என்றே பிரச்சாரத்தை அவிழ்த்து விட்டனர். பாரதீய ஜனதாவின் மேல் மத்திய தரவர்க்க ஆதரவாளர்களான 'இன்ரநெட் கும்பல்' இந்தப் பிரச்சாரத்தை எடுத்துக் கொண்டது. ஒஸ்மா பின்லேடனின் மறைவிடத்தை தாக்குவதற்கு அமெரிக்காவிற்கு உதவும் முகமாக அமெரிக்க ராணுவ தளங்களை இந்தியாவில் அமைத்துக் கொள்ள அனுமதியளிக்க வேண்டும் எனக் கோரிக்கை எழுப்புகிற அளவிற்கு இது சென்றது.

வளைகுடா யுத்தத்தை அமெரிக்க அரசு கையாண்டதற்கும், கார்கில் யுத்தத்தை இந்திய அரசு கையாண்டதற்கும் சிற்சில வேறுபாடுகள் உண்டு. ஈராக் மீதான அமெரிக்கத் தாக்குதலை போர் என்று சொல்வதைக் காட்டிலும் படுகொலை (Massacre) என்று சொல்வதே பொருத்தம். எனவே அமெரிக்க அரசு அந்தப் படுகொலையை, எதிரிகள் அதாவது எதிரிகளாகக் கட்டமைக்கப்பட்ட மக்கள் அழிவதை அது வாண வேடிக்கை ஆக்கியது, காட்சிப்படுத்தியது. ஆனால் கார்கில் யுத்தம் சற்று வேறுவிதமானது. மனித வசிப்பு சாத்தியமில்லாத (No man's land) உலகின் மிகக் கடினமான சறுக்கு மலைகள் மற்றும் பனிப் பாறைகள் மீது நடந்த யுத்தம் இது. 'எதிரி'களைக் கொல்வது இங்கே அத்தனை எளிதாக இல்லை. எழுநூறு பேர் என்று சொல்லப்பட்ட, 'ஊடுருவல் காரர்களைக் கொல்ல முப்பத்தைந்தாயிரம் இராணுவ வீரர்கள் வலிமையான பீரங்கிப் படைகள், விமானப் படைப் பாதுகாப்புகள் எல்லாம் குவிக்கப்பட்ட போதும் ஏற்கெனவே ஊடுருவ 'பங்கர்'கள் அமைத்துத் தயாரிப்புகளோடிருந்த 'எதிரி' களைக் கையாள்வது இந்திய இராணுவத்திற்குப் பெரும் பிரச்சினையாக இருந்தது. ஒரு கணக்குப்படி ஒரு 'எதிரி'யைக் கொல்வதற்கு கிட்டத்தட்ட 20 சிப்பாய்கள் வரை ராணுவம் பலி கொடுக்க வேண்டியிருந்தது.

'எதிரி ' யின் வருகையை மட்டுமல்ல பலத்தைக் கணக்கிடுவதிலும் இந்திய ராணுவத்திற்கு கடைசி வரை சிக்கலிலிருந்தது. "போர் மாதிரியான சூழல்"



நிலவுகிறது என்பதை வாஜ்பாயி கண்டறிந்து அதை நாட்டுக்குச் சொல்வதற்கு (மே 25) முன்பேயே இந்திய ராணுவத்தினர் ஐம்பது பேர் செத்துப் போனார்கள்.

அ.மார்க்ஸ்

இரண்டு நாட்களுக்குள் ஊடுருவல்காரர்கள் வெளியேற்றப்படுவார்கள் என முதலில் அறிவிக்கப்பட்டது. டிராஸ் பகுதியிலிருந்து ஊடுருவல் காரர்கள் வெளியேற்றப்பட்டு விட்டனர் என வாஜ்பாயி அறிவிக்கக் கூட (மே 29) செய்தார். எனினும் பின்னர் 3 மாதம் வரை போர் நீடிக்கலாம் என்றார்கள்.

பல பகுதிகள் வென்று கைப்பற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பல நாட்களுக்குப் பின்னரும் கூட, அவை முழுமையாக வசமாகவில்லை என்பதைச் செய்திகளை உன்னிப்பாக கவனிப்போருக்கு எளிதாகப் புரிந்து கொள்ள முடிந்தது. தோலோலிங் இல் லெப். கர்னல் விஸ்வநாதனின் உடலும், பதாவிக் இல் மேஜர் சரவணனின் உடலும், முஷ்கோ பள்ளதாக்கில் மேஜர் ராஜேஷ் அதிகாரியின் உடலும் இந்தப் பகுதிகள் கைப்பற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பின்பு பல நாட்கள் வரை இந்திய ராணுவத்தால் கைப்பற்றப்படாமலேயே கிடந்தன. அதாவது கைப்பற்ற இயலாதபடிக்குக் கிடந்தன.

இதனால் வளைகுடாப் போர் காட்சிப்படுத்தப்பட்ட அளவிற்கு கார்கில் போரை காட்சிப்படுத்தப்பட இயலாமற் போனது எனினும், இந் நிலையை இந்திய அரசு தந்திரமாகவே கையாண்டது. 'எதிரி' மரணத்தை காட்சிப்படுத்தப்படுவது என்பதை விட 'நம்மவரின்' மரணத்தையே காட்சிப்படுத்திக் கொடுப்பது என்கிற உத்தி இங்கே கையாளப்பட்டது.

வரலாறு காணாத புதுமையான இம்முறை முதன் முதலாக இறந்துபோன வீரர்களின் உடல்கள் அவரவர்களின் சொந்த ஊருக்குள் கொண்டு வரப்பட்டன. முன்னரே அறிவிக்கப்பட்டு, கூட்டம் திரட்டப்பட்டு, பள்ளிப் பிள்ளைகளெல்லாம் கொண்டு குவிக்கப்பட்டு இறந்த உடல்கள் பார்வைக்கு வைக்கப்பட்டன. ஊர்வலங்கள், இராணுவ மரியாதைகள், அமைச்சரின் வருகைகள், மூவண்ணக் கொடிகள், தேசிய கீதங்கள், பீரங்கி முழக்கங்கள் என இந்த ஊர்கள் ஒவ்வொன்றும் கார்கிலின் நீட்சிகளாக மாற்றப்பட்டன. இந்த ஒவ்வொரு நிகழ்வும் மிக விரிவாக தொலைக்காட்சிப் பெட்டிகளின் மூலமாக ஒவ்வொரு இல்லங்களிற்கும் கொண்டு வரப்பட்டன. ஒவ்வொரு ஊரிலும் சாலைகள் அல்லது பூங்காக்களுக்கு இறந்த வீரர்களின் பெயர்கள் சூட்டப்பட்டன. மத்திய, மாநில அரசுகள், அரசியல் கட்சிகள்... எனப் போட்டி போட்டுக் கொண்டு இறந்த வீரர்களின் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கின. இதன் மூலம் அவர்கள் தொலைக்காட்சிகளில் இடம் பெறவும், தங்களது தேசபக்தியை நிறுவிக் கொள்ளவும் முடிந்தது. மொத்தத்தில் கார்கிலில் மாண்ட வீரர்களின் உடல்களும் மரணங்களும் குறிகள் (Signs) என்கிற நிலைக்கு மாற்றப்பட்டு சமூக வெளியில் மிதக்க விடப்பட்டன.

இந்தியன் எக்ஸ்பிரஸ், அவுட்லுக் முதலான இதழ்கள் திரட்டிய கார்கில் நிதிக்கு ஏராளமாக பணம் குவிந்தது. தொழிற்சங்கத் தலைவர்கள், தங்கள் உறுப்பினர்களின் ஒரு நாள் ஊதியத்தை முதலமைச்சரிடம் அளித்து புகைப்படம் எடுத்துக் கொண்டனர். 'சன்' தொலைக் காட்சி கார்கிலுக்காக நடிகர்களை வைத்து நிகழ்ச்சிகள் நடத்தின.

உலகக் கோப்பை திருவிழா முடிந்த கையோடு தொலைக்காட்சிகளுக்கு கார்கில் திருவிழா கிடைத்தது. கார்கிலுக்கும் உலகக் கோப்பைக்குமிடையில் ஒரே ஒரு வித்தியாசம் தான். பன்னாட்டு கம்பனிகள் எதுவும் கார்கிலை 'ஸ்பான்சர்' பண்ணவில்லை என்பது தான் அது. பதிலாக அந்த இடத்தைப் பாரதீய ஜனதா தலைமையிலான இந்திய அரசு கைப்பற்றிக் கொண்டது. கிரிக்கெட்டில் சதம் அடிப்பதற்கு ஒப்பாக கார்கில் மரணம் மாற்றப்பட்டது. சதம் அடித்தவர்களுக்கும் மரணமடைந்தவர்களுக்கும் பல்வேறு பரிசுகள் கிடைத்தன. "அசாருதீன் கப்டனாகத் தொடரலாமா இல்லையா" என்பது போல "கட்டுப்பாட்டுக் கோட்டைத் தாண்டலாமா இல்லையா" என விவாதங்கள் நடத்தப்பட்டன. ஓய்வு பெற்ற விளையாட்டு வீரர்களைப் போல ஓய்வுபெற்ற ராணுவ அதிகாரிகளும் அழைக்கப்பட்டு கருத்துக்கள் சொல்ல வைக்கப்பட்டனர்.

இந்தக் கலவரங்களினூடாக நடந்த சில நிகழ்ச்சிகள் இங்கே குறிப்பிடத்தக்கவை.

(வரும்)

நன்றி - நூலகத்திட்டம்



# 'ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் அரசியல் நாவல்கள் பற்றி ஒரு இடதுசாரியின் கண்ணோட்டம்'

*- சிவலிங்கம் -*

1982ம் ஆண்டு இலங்கையில் பிரசுரிக்கப்பட்ட "ஒரு கோடை விடுமுறை", 1998ல் பிரசுரிக்கப்பட்ட "அரைகுறை அடிமைகள்" ஆகிய இவ்விரு இலக்கிய நூல்களைப் பற்றிய சிறிய விமர்சனப் பார்வையே இதுவாகும்.

"ஒரு கோடை விடுமுறை" ஓர் நாவல். மற்றையது சிறுகதைகளின் தொகுப்பாகும். இந்தத்தொகுப்பில் உள்ள பெரும்பாலான கதைகள் 1993-94ம் ஆண்டுகளில் வெளி வந்தவையாகும்.

இவ்விரு படைப்புகளிலும் அதிகளவில் தொக்கிக் காணப்படும் சம்பவம், இலங்கை மண்ணில் நிலவும் அரசியல் போராட்டங்களும் அதன் விளைவுகளுமாகும். இந்த அரசியல் போராட்டத்தின் விளைபொருட்களைப் பகைப்புல்மாகக் கொண்டு எழுதப்பட்டுள்ள நாவலிலும், சிறுகதைகளிலும் வெளிக் காட்டப்பட்டுள்ள,

-பாத்திரங்களின் தன்மை

-பாத்திரங்களும் அவற்றின் இலட்சியங்களும்

-பேசப்படும் அரசியல்

என்பன பற்றிய பார்வையே எனது கருத்துக்களின் மையங்களாகும்.

கதை பற்றிய விமர்சனப் பார்வையைத் தொடங்கும் முன் எனது பார்வை எதனை அடிகோளாகக் கொண்டு தொடங்குகிறது? எவ்வாறான சமூகப் பார்வையை அடிநாதமாகக் கொண்டுள்ளது? என்பன பற்றிச் சில வார்த்தைகள்.

ஒரு சமுதாயம், ஓர் முன்னோக்கிய முற்போக்கான சமுதாயமாக வளர்தல் அவசியம். ஓர் போராட்டத்திற்குள் சிக்கியுள்ள சமுதாயத்தில் பல்வேறு சக்திகள் செயற்படுவது தவிர்க்க முடியாதது ஆகும். இந்தச் சக்திகள் அவ்வப்போது போராட்டத்தினை முன்னோக்கி அல்லது பின்னோக்கி இழுத்தல் கூடும். ஏனெனில், சமூகம் பல்வேறு சமூகப் பிரிவுகளைக் கொண்டது. அவற்றின் ஆவல், போராட்டத்தின் இறுதி நிலை பற்றிய பார்வை என்பன வெவ்வேறாக அமையும். போராட்டம் முன்னோக்கிய பார்வை உள்ளதாக அமைய வேண்டுமெனில் அதனை முன்னெடுக்கும் சக்திகள் பலப்படுத்தப்பட வேண்டும். இல்லையேல் போராட்டம் பின்னோக்கிச் செல்வது தவிர்க்க முடியாததாகி விடும். எனவே இந்தக் கதைகள் இந்தப் போராட்டத்திற்கு எவ்வாறான பங்களிப்பினை வழங்குகிறது என அறிதல் அவசியமாகும்.

கலை என்பது சமுதாய உணர்வு நிலையின் மிகப் பெரிய வடிவங்களில் ஒன்றைப் பிரதிபலிக்கின்றது. ஓர் படைப்பாளி ஒரு படைப்பை உருவாக்குவதற்கு அனுபவத்தின் அருமை, பெருமைகளுடன் திண்ணியமாகவும், நேரடியாகவும் தன்னைப் பழக்கப்படுத்தித் தனது புலன் அறியும் புறநிலைப் பொருட்களின், நிகழ்ச்சிகளின் இயல்புகளினூடாக ஊடுருவிச் சென்று அவைகளின் சாராம்சத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். அப்போது தான் அந்தப் படைப்பு முழுமை பெறுகிறது. இந்த வகையில் இந்தக் கதைகள் சமுதாய விருப்பு வெறுப்புக்களைப் பிரதிபலித்துள்ளனவா என அறிதல் அவசியமாகும்.

ஒரு கதை அல்லது நவீனம் எழுதுவது என்பது உண்மையில் பாட்டாளி வர்க்கத்தின் பொதுலட்சியத்திற்கு அப்பால் சுயேட்சையாக ஒரு தனி நபரின் வேலைப்பாடாக இருக்க முடியாது என லெனின் கூறுகிறார். அவ்வாறாயின் இந்தக் கதைகள் பொது லட்சியம் ஒன்றை உயர்த்திப் பிடிக்கின்றனவா அல்லது ஒரு தனி மனிதனின் விருப்பு வெறுப்புகளைப் பிரதிபலிக்கின்றனவா?

கலைஞன்/ கலைஞை தனது பாத்திரப் படைப்புகள் மூலம் சில குறிப்பிட்ட சமுதாய உண்மை நிலைப் பொருட்களை எவ்வாறு கையாள வேண்டும்? எதை மக்கள் முன் மாதிரியாகக் கொள்ள வேண்டும்? எதை மக்கள் எதிர்க்க வேண்டும்? குறிப்பிட்ட சூழ்நிலைகளில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்? என மக்களுக்குக் கல்வி புகட்டுகிறான்/ள்.

ஒரு எழுத்தாளனின்/எழுத்தாளினியின் பணி எவ்வாறு அமைய வேண்டும் என்பதைக் கோடிட்டுக் காட்டவே ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மைகள் சிலவற்றை விபரித்தேன்.

ஓர் படைப்பாளியின் படைப்பு என்பது அந்தப் படைப்பாளியின் உள்ளுணர்வுகளின் வெளிப்பாடாகும். தான் காணும் சமுதாயம், தான் நம்பும் இலட்சியக் கோட்பாடுகளுடன் ஒத்துப் போகாதபோது, தனது இலட்சிய சிருஷ்டிப்பினை உரைகல்லாகக் கொண்டு இந்தச் சமுதாயத்தின் போக்கினை உரைத்துப் பார்க்கிறான்/ள். படைப்பாளியின் உரைகல்லே அதன் ஆயுளைத் தீர்மானிக்கும் காரணியாகிறது.

இனிக் கதைகளுக்கு வருவோம். முதலில் "ஒரு கோடை விடுமுறை"யில் நடமாடுகின்ற பாத்திரங்களைப் பார்ப்போம். இந்தக் கதையில் பரமநாதன் வருகிறார். இவர் இந்தக் கதையின் பிரதான பாத்திரம். இவர் ஓர் முரண்பட்ட இலட்சியங்களின் மொத்த உருவமாகக் காணப்படுகின்றார். அவர் அரசியலில் அவ்வளவு அக்கறை இல்லாதவர் எனக் கூறப்பட்டிருப்பினும், சோசலிஸ்டாகக் காட்டப்படும் சத்தியம், தமிழ் இன விடுதலை விரும்பியாகக் காட்டப்படும் சபேசன் ஆகியோரை விட அதிகளவு அரசியலைப் பேசுகிறார். ஓர் மத்திய தர வர்க்கத்தின் குண இயல்புகளைக் குறிக்கும் இப் பாத்திரம் பல்வேறு முரண்பாடுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளதாகக் காட்டப்படுகிறது.

தகப்பனுக்குப் பிடிக்காத வெள்ளைக்காரப் பெண்ணைத் திருமணம் செய்யும் இவர், தன் சகோதரி பானுமதி சாதி மாறிக் காதலித்தமையைக் கண்டு யாருடனும் பகிர்ந்து கொள்ளாமல் தன்னுள்ளேயே அடக்கி, அதனைப் பானுமதியுடன் மட்டும் பேசத் தலைப்படும் போக்கு, தமிழர் அரசியற் பிரச்சினை பற்றி அதிகம் பேசும் அவர், அதில் அதிக ஆர்வமுள்ள சபேசனைத் தன் சகோதரியின் காதலனென்பதால் இங்கிலாந்துக்குக் கூப்பிட்டு, அவனை அந்த நீரோட்டத்திலிருந்தும் எடுத்துவிட எண்ணும் போக்கு, தமிழ்த் தலைவர்களை, இடதுசாரித் தலைவர்களை விமர்சிக்கும் போக்கு, வெள்ளைக்காரப் பெண் மரியனைத் திருமணம் செய்த போது ஏற்பட்ட மனநிலையும், அவள் விலகிப் போகத் தீர்மானித்த போது அவள் பற்றிய மனநிலையும் எதிர் எதிராகவே இருந்தன.

கோடை விடுமுறையில் தந்தையைப் பார்க்க இலங்கை செல்ல முயற்சித்தபோது மரியன் பற்றி, தன் மகள் மீரா பற்றி எண்ணிய எண்ணங்கள் அவர்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளைத், தனது முன்னாள் காதலி கார்த்திகாவைப் பார்த்ததும் மெதுமெதுவாகக் கைவிடுவது, தனது செயல்களுக்காகப் போலி நியாயங்களைச் சிருஷ்டிப்பது இவை யாவுமே குழப்பம் மிக்க மத்தியதர வர்க்கத்தின் இயல்புகளாகும்.

சோசலிசவாதியாகக் காட்டப்படும் சத்தியன் ஓர் குழப்பமான சோசலிசவாதியாகவே காணப்படுகிறான். அரசாங்க யந்திரத்தை எதிர்க்கும் எந்தக் கருவியும் நசுக்கப்படும் (ப.180) எனச் சத்தியன் கூறுவதும், இலங்கையில் தொழிலாளர்கள், விவசாயிகள், தமிழர்கள் எல்லாம் ஒன்றுபட்டுப் போராடவேண்டும். இந்த அரசியலமைப்பைத் தூக்கி எறிய வேண்டும் எனக் கூறுவதும் சோசலிசக் கொள்கைவாதியின் கோட்பாடுகளாகத் தெரியவில்லை. தொழிலாளர்கள், விவசாயிகள் பின்னர் தமிழர்கள் எனக் குறிப்பிடுவது குழப்பமானதாகவே தெரிகிறது.

"....ஒரு காலம் வரும், சாதாரண மக்களுடன், அரசாங்கத்தைப் பாதுகாத்த படையே சேரும். அந்தக் காலத்தை விரைவில் வரப் பண்ணுவது தான் எங்கள் வேலையாக இருக்க வேணும்....." (ப.93)


எனக் கூறுவதன் மூலம் சோசலிசவாதி சமூக மாற்றத்திற்காக ஆயுதப்படைக்காகக் காத்திருப்பதும், இலங்கை அரசை ஏகாதிபத்திய அரசு என அழைப்பதும் அப்பாத்திரத்தை ஓர் கொள்கைப் பற்றுள்ள அல்லது கொள்கை விளக்கமுள்ள பாத்திரமாகக்



காண இயலவில்லை. சபேசன் பற்றிய அவரது அபிப்பிராயம் குழப்பமானதாகவே காணப்படுகிறது.

கார்த்திகாவின் சகோதரன், பரமநாதனின் சகோதரி, பானுமதியின் காதலன் சபேசன் ஓர் தமிழ்ப் போராளியாகக் காட்டப்படுகிறான். தமிழர் நிலையைப் பற்றி அதிகளவு பேசும் அந்தப் பாத்திரம் வெறுமனே உணர்ச்சிகளின் பிறப்பிடமாகக் காண்பிக்கப்படுகிறதே தவிர, இறுக்கமான கொள்கைப் பிடிப்புள்ள பாத்திரமாக அமையவில்லை.

வடிக்கப்பட்டுள்ள பெண் பாத்திரங்கள் வழமையான சமூகப் பாரம்பரியங்களோடு ஒன்றிப் போனவைகளாகவே தென்படுகின்றன. பானுமதி இடையிடையே அரசியல் பேசத் தலைப்பட்டாலும், தன் கணவனை நியாயப்படுத்த எடுத்த முயற்சிகளாகவே அவை வெளிப்படுகின்றன.



இனிப் பாத்திரங்களையும் அதன் இலட்சிய நோக்கங்களையும் சுருக்கமாகப் பார்ப்போம். இவை பற்றி நான் ஏற்கெனவே குறிப்பிட்டிருப்பினும், அரசியற் பிரச்சினைகளை மையமாக வைத்து உருவாக்கப்பட்ட சபேசன், சத்தியன் பாத்திரங்கள் தாம் நம்பிய இலட்சியங்களைக் காப்பாற்ற முடியாதவர்களாகவே காண்பிக்கப்படுகிறார்கள். தமிழர் விடுதலை உணர்வின் பிரக்ஞைபூர்வமான தோற்றமாக சபேசன் வர்ணிக்கப்பட்டாலும், தன் காதலியின் வேண்டுகோளுக்காக லண்டன் வருவதும், அவன் அங்கு இருந்தால் கொலை செய்து விடுவார்கள் என நியாயம் கற்பிப்பதும் பொருத்தமான காரணங்களாகத் தெரியவில்லை.

சாதாரண சிங்கள மக்களுடன் இணைந்து தமிழர் விடுதலைக்காகப் போராட வேண்டும் எனக் கூறும் சத்தியன், அடிக்கடி வர்க்க விடுதலை, இன விடுதலை என்பவற்றிற்குள் குழம்புவதாகவே தெரிகிறது.

பரமநாதன் ஓர் இலட்சியமற்ற பாத்திரமாக இருப்பினும், அவர் சார்ந்துள்ள வர்க்கத்தின் போக்கினை அவரின் செயற்பாடுகளின் மூலமாகக் காட்ட விழைந்திருப்பது நல்ல அணுகுமுறையே.

இனிக் கதையில் பேசப்படும் அரசியலுக்கு வருவோம். 1977 இல் இடம்பெற்ற இனக் கலவரங்களின் பின்னணியில் விளைந்த இந்த நாவல் தமிழர் தலைமை, இடதுசாரித் தலைமை என்பவற்றை விமர்சிக்கும் போக்காகவே காணப்படுகிறது. இந்த விமர்சனங்கள் எவ்வளவு தான் சரியானவை, நியாயமானவைகளாக இருப்பினும், இந்தக் குற்றச்சாட்டுக்கள் அணுகப்பட்ட விதம் தவறானதாகவே காணப்படுகின்றது. நான் ஏற்கெனவே குறிப்பிட்டது போல விவசாயிகள், தொழிலாளர்கள், தமிழர்கள் எனக் குறிப்பிடப்படும் போது, எந்தத் தமிழர்கள் என்ற கேள்வி நியாயமாக எழுப்பப்பட வேண்டும். தமிழர் போராட்டத்திலை, வர்க்க விடுதலையுடன் இணைக்க முற்படுவதன் தவறான அணுகு முறையின் விளைவுதான் இது. இந்தக் குழப்பம் தவிர்க்கப்பட வேண்டும். நேர்மையான அரசியலை அது பேச வேண்டும்.

இதுவரை 1980களில் நடந்த சங்கதிகளைப் பின்னணியாகக் கொண்ட கதைப் பற்றிப் பார்த்தோம். இனக்கலவரம் நடந்ததே தவிர போராட்டம் நடைபெறவில்லை. அதாவது தமிழர் எதிர்த்துப் போராடவில்லை.

இனித் தமிழர் எதிர்த்துப் போராடியதன் விளைவுகளைப் பார்ப்போம். 90களில் எழுதப்பட்ட 'அரைகுறை அடிமைகள்' நூல் தமிழரின் எதிர்ப்பினையும் போராட்டத்தின் விளைவுகளையும் மையமாகக் கொண்டுள்ளது. 80களில் இராணுவத்தின் அராஜகம் கருவாக இருந்தது. 90களில் விடுதலைப் போராளிகளின் அராஜகம் கருவாக உள்ளது. துப்பாக்கி தூக்கிகள் என வர்ணிக்கப்படும் இவர்கள் ஓர் கொள்கையின் பிரதிநிதிகளாக அல்லது எதிர்ப்பியக்கத்தின் அரசியலாளர்களாகக் காணப்படவில்லை. பதிலாகச் சமூக முன்னேற்றத்தினைப் பின்னோக்கித் தள்ளும் சக்திகளாகவே காணப்படுகின்றனர்.

ஒரு "சரித்திரம் சரிகிறது" என்ற கதையில் வரும் மூதாட்டியின் முடிவு ஓர் இனத்தின் பாரம்பரிய விழுமியங்கள் எவ்வாறு சாகடிக்கப்படுகின்றன என்பதற்குச் சாட்சியம் பகர்கிறது. "அ..ஆ..இ..." என்ற கதையில் வரும் ஆசிரியர், விடுதலை வீரர்கள் என அழைப்போரால் எவ்வாறு இம்சைப்படுத்தப்பட்டார் என உரைக்கிறது. பழைய தலைமுறை ஒன்று, சமுதாயக் கட்டுமானத்தின் அத்திவாரமாக அமையும் பழைய சந்ததிகள், மாற்றத்தைத் தேடும் புதிய சந்ததிகள் என்பவற்றிற்கிடையேயுள்ள அணுகுமுறை மாற்றத்தை இந்தக் கதை தெளிவாகக் காண்பிக்கிறது.

இந்த இரு நூல்களிலும் வெளியிடப்பட்டுள்ள கதைகள் அந்தக் கால கட்டத்தின் நிகழ்வுகளை விபரித்திருப்பினும் ஓர் மாற்றத்தைத் தேடும் அல்லது இந்தக் கொடுமைகளிலிருந்தும் விடுபடுவதற்கான இலட்சியப் பாத்திரங்களை இவை கொண்டிருக்கவில்லை என்பதும், குறிப்பாக "ஒரு கோடை விடுமுறையில்" நடமாடிய பாத்திரங்கள் யாவும் தோல்வியைத்

⇨19

நன்றி - நூலகத்திட்டம்



# தீயில் பூத்த மலர்கள்

## 83 ஜூலை பற்றிய நினைவுகள்

ஜூலை ஓகஸ்ட் மாதங்கள் இலங்கையின் வரலாற்றில் இரத்தத்தால் எழுதப்பட்ட மாதங்களாகும்.

மனிதப் படுகொலைகளினதும், கலவரங்களினதும் மாதங்களாக இவை நினைவு கூரப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

1983 ஜூலையில் தமிழ் மக்களுக்கெதிரான சிங்கள இனத்தைச் சேர்ந்த சில வெறியர்களால் கலவரம் தூண்டப்பட்டது. படுகொலைகள், சொத்தழிப்புக்கள், அகதிகளாய் விரட்டல் என இம்மாதத்தில் நிறையவே சம்பவங்கள் நடந்தேறின. சிறை வைக்கப்பட்டிருந்த சில இயக்கத் தலைவர்கள் உட்பட பலர் மிகக் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டனர். மொத்தத்தில் அன்றைய தினங்கள் நாடெங்கிலும் தமிழர்களுக்கெதிரான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தன.



சத்தியப்பிரியா



சந்திரிகா



சந்திரரட்ண



சந்திரசேன



சந்திரசேன

1990 ஒகஸ்டில் காத்தான்குடிப் பள்ளிவாயல்களில் முஸ்லிம் மக்களை மிருகத்தனமாகச் சுட்டுக் கொன்று 'விடுதலை' தேடினார்கள் தமிழ் மக்களுக்காகப் போராடும் புலிகள்.

இவையெல்லாம் நடந்து ஆண்டுகள் பலவாகி விட்டன. ஜூலைக் கலவரம் நிகழ்ந்து 13 வருடங்களாகிவிட்டன. பள்ளிவாயல் படுகொலைகள் நடந்து ஒன்பது வருடங்களாகிவிட்டன. இருந்தும் எல்லாவற்றையும் மக்கள் இன்றுபோல் நினைத்து கொண்டிருக்கிறார்கள்.

இந்தக் கலவரங்களின் பின்னால், இந்தக் குரூரங்கள் பின்னால் மனிதாபிமானத்தோடு இயங்கிய மக்களை மக்களென்ற வகையில் நேசித்த சில மானுடப் பிறவிகள் ஒவ்வொரு சமூகத்தினருள்ளேயும் இருந்து தான் வந்திருக்கிறார்கள் என்பதை பதினாறு வருடங்களின் பின் இன்று தான் சிலர் கண்டுள்ளார்கள்.

யட்டியாந்தோட்டைப் பிரதேசத்தில் மலைப் பிரதேசங்களில் தேயிலைக் கொழுந்துகளுக்கே வாழ்வை அர்ப்பணித்து அடிமட்ட வாழ்வு வாழும் தோட்ட மக்கள் பலரை இனவெறியர்கள் அழித்தொழிக்க வந்த வேளை அவர்களைக் காப்பாற்றிய பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சிலரை அப்பிரதேசத்தவர்கள் நினைவு கூர்ந்து கௌரவித்த நிகழ்வொன்றைக் காண தலைநகர ஊடகவியலாளர்கள் சிலருக்கு சந்தர்ப்பம் ஒன்று கிட்டியது. இச்சந்தர்ப்பத்தை கொழும்பின் சில அரச சார்பற்ற நிறுவனங்களும், தனிப்பட்ட சிலரும் ஏற்படுத்திக் கொடுத்திருந்தனர்.

இதற்கான அயராத உழைப்பினை 'யுக்திய' ஆசிரியர் குழுவைச் சேர்ந்த தொடாவத்த செலுத்தியுள்ளார்.

யட்டியாந்தோட்டை நகரிலிருந்து சுமார் 13 கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கிறது பூணுலோயா டிவிஷன். தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் எட்டடிக் காம்பராக்களிலான பல லைன்களைக் கொண்ட சின்னச் சின்னதாய் பல ஊர்கள். மனிதர்களுக்குத் தேவையான அடிப்படைத் தேவைகள் அனைத்திலும் நிறையவே பிரச்சினைகளை எதிர்கொண்டு வாழ்கிறார்கள் அம்மக்கள்.

மலல்பொல என்பது சிறு ஊர். ஹல்கொல்வத்த என்பது அதன் அருகிலுள்ள ஒரு குடியிருப்பு. இங்கு சுமார் பத்து லைன்களில் அறுபது குடும்பங்கள் அளவில் வாழ்கின்றன. இனக்கலப்புத் திருமணங்கள் இங்கு சகஜம். தமிழ் மக்கள் சிங்களமும், சிங்கள மக்கள் தமிழும் தாராளமாகவே கதைக்கிறார்கள். மொழியை வைத்து இவர்களை அடையாளம் காணவே முடியாது. இங்கு சிங்களப் பாடசாலையொன்றும், தமிழ்ப்பாடசாலையொன்றும் இருக்கின்றது. பரஸ்பரம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மொழியில் படிக்கிறார்கள். "சிங்களப் பாடசாலை மாணவர்கள் இம்முறை க.பொத (சா/த)வில் தமிழ்ப் பாடமும் எடுக்கிறார்கள்" என்று பெருமையாகச் சொல்கிறார் இப்பாடசாலையில் தமிழ் கற்பிக்கும் குமாரி சந்திரிக்கா எனும் இளம் யுவ்தி. "நாங்கள் எல்லோரும் ஒன்று போல் ஒற்றுமையாய் வாழ்வதே எம் விருப்பம்" என்று தன் விருப்பத்தை வெளியிடும் இவரின் பெற்றோர்கள் கலப்புத் திருமணம் செய்தவர்கள்.

இவ்வாறு ஒற்றுமையாகவே வாழ விரும்பும் இவர்களில் பெரியவர்கள் 83 கலவரத்தின் நினைவுகளை மீட்டுகிறார்கள்.

'"நாடெல்லாம் கலவரம். தமிழ் மக்களுக்கெதிராய் வன்முறைகள் வெடித்துக் கிளம்பியிருக்கின்றன. எங்களுக்கோ அச்சம். எங்களைச் சூழவுள்ள பிரதேசத்தில் நிறையவே சிங்கள மக்கள் இருக்கிறார்கள். அவர்களும் இனவெறி தூண்டப்பெற்றிருக்கிறார்கள். எப்போது வருவார்களோ என்ற அச்சம். எல்லாவற்றையும் தயார்படுத்தி காடுகளுக்குள் ஓடித் திரிந்தோம்..." என்கிறார்கள் சிலர்.

"கலவரம் பரவிய போது என்னிடம் வந்து அம்மக்கள் தங்களைக் காப்பாற்றுமாறு வேண்டினார்கள். நாம் ஒரு சில இளைஞர்கள் ஒன்று கூடி ஹல்கொல்லவத்தைக்கு எதுவும் நடககாது பார்க்க வேண்டுமென்று முடிவெடுத்துச் செயற்பட்டோம். 20 பேர் அளவிலான குழுவொன்று இம்மக்களைத் தாக்க வந்தது. வந்தவர்கள் இங்குள்ள கோயில் சிலையொன்றினை உடைத்தனர். நாட்டியிருந்த திரிசூலத்தைப் பிடுங்கி எடுத்து அதையும் ஆயுதமாய்க் கொண்டலைந்தார்கள். இவ்வேளை நாங்கள் ஐந்தாறு பேரளவில் அவ்விடம் வந்தோம். எங்களையும் அவர்கள் போல் தமிழர்களைத் தாக்க வந்தவர்கள் என நினைத்து அழைத்தார்கள். நாங்கள் அருகே போனபோது தான் நாங்கள் எதிர்க்க வந்தவர்கள் என்பதை அறிந்து எங்களுடன் சண்டையிட்டார்கள். நாங்களும் விடவில்லை. சண்டையிட்டு இழுபறிப்பட்டோம். இதில் எங்களோடு இருந்த சந்தரத்னவுக்கு 'தெலிபீய'வால் வெட்டிக் காயம் ஏற்படுத்தினார்கள்..." என்று இம்மக்களை மனிதாபிமானத்துடன் காப்பாற்றியவர்கள் கூறுகிறார்கள்.

லீலசேன, சந்ரரத்ன, நிமல் குமாரசிறி, சந்திரசேன போன்றவர்கள் இம்மக்களைக் காப்பாற்றியவர்களில் முக்கியமானவர்கள். அன்றைய நிகழ்வில் இவர்களுக்கு அம்மக்கள் பாராட்டுப் பத்திரங்களையும், நினைவுச் சின்னங்களையும் வழங்கினார்கள். இது அவர்களுக்குப் பெரிய நிகழ்வு, மன நிறைவான சம்பவம். இன்னும் நாடெங்கும் புரிந்துணர்வற்ற நிலைமை இருந்து வருகையில் இது ஒரு முன்னேற்றமான மறுபக்க நிகழ்வு தான்.

வீரவிதான நகரம் நகரமாய், கிராமம் கிராமமாய் இனவெறியை விதைத்து வருகையில், இவ்வாறான மனநிலையாளர்கள் அதை எதிர்த்துச் செயற்படக்கூடிய நிலை தோன்றலாம். மக்களிடம் விழிப்புணர்வைத் தோற்றுவிப்பதே வீரவிதான போன்ற இனவாத

⇨17

# கந்தசாமி: ஒரு நினைவுக் குறிப்பு !



கந்தையா கந்தசாமி யாழ்ப்பாணம், மாவிட்டபுரத்தில் 1930ஆம் ஆண்டு பிறந்தார். கொழும்பில் இலங்கைப் பல்கலைக் கழகக் கணிதப் பட்டதாரியானார். பின் நியாயவாதியாய்ச் சித்தியெய்தி வணிக, கம்பனிச் சட்டத்துறைகளில் வல்லவராய் இடம் பெறுந்தறுவாயில் தம் வாழ்க்கைத் திசையை மாற்றினார். எழுபதுகளின் பிற்பகுதியில் இலங்கையைச் சின்னாபின்னமாக்கிய இனக் கலவரங்களினால் அகதிகளாகியோரின் துயர் துடைப்பதிலும், அவர் தம் வாழ்வைப் புனரமைப்பதிலும் நிவாரணப் பணிகளை ஒழுங்கு செய்வதுடன், மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் தம் வாழ்க்கையை அர்ப்பணித்தார். இத்தகு பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொழுது, 1988ஆம் ஆண்டு ஜூன் 19ம் நாள் ஈரோஸ் இயக்கத்தினரால் கடத்தப்பட்டார், கொல்லப்பட்டார் என்றுஞ் சொல்லலாம். அவர் மறைவின் பதினோராவது ஆண்டு நிறைவை நினைவுகூர இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.

### கொலையானது கொலை செய்பவரையே பற்றிக் கொள்ளும் தொற்று நோய்

-மார்ட்டின் உனால்ஸ்

கந்தசாமி ஒரு அரிய நண்பர். மனித உரிமைகள் இயக்கத் தீவிர உழைப்பாளி என்ற வகையில் சர்வதேச மன்னிப்புச்சபை மூலம் அவரின் பரிச்சயம் ஏற்பட்டது. ஏனைய நாடுகளில் இடம் பெற்ற சித்திரவதைகள், கொலைகளுக்கெதிராகப் போராடுவதில் நேரிய நெறியும், சீரிய சிந்தனைத் திறனும், தியாக உணர்வும் கொண்டு தீவிரமாகத் தொழிற்பட்டவர். ஆனால், முதன்மையாக முக்கியமாகத் தாம் ஓர் இலங்கைத் தமிழர் என்பதை அவர் ஒருபோதும் மறந்ததில்லை. இலங்கையில் நடைபெறும் சம்பவங்களையிட்டு ஆழ்ந்த வேதனை கொண்டிருந்தார்.

அவரது மறைவும் கொலை செய்யப்புட்டதாகச் சொல்லப்பட்ட செய்தியும் தேசியமென்றும், சோஷலிசம் என்றும், சமயம் என்றும், சமாதானம் என்றும் சொல்லப்படும் பல வகையான ஏதுக்களின் பெயரால் செய்யப்படும் கொடுமைகளுக்கு அத்தாட்சியாக விளங்குகின்றன.

கந்தா இலண்டனுக்கு வந்தபோது ஒரு சிறந்த நோக்குடனேயே வந்தார். அதாவது இலங்கை பற்றிய தகவல் நிலையம் ஒன்றைத் தாபிக்க வேண்டும் என்பதே அந்த நோக்கம். இதனை அவர் வரன்முறையாக நடைமுறைப்படுத்தினார். தமிழர் உரிமைகள் போராட்டம் பற்றிய சகல அம்சங்களும் கூர்மையாக நோக்கிச் சேகரிக்கப்பட்டன, வெளியிடப்பட்டன. அவரது அமைதியான போக்கும், வசீகரப் பேச்சும் அவர் தம் நண்பர்கள் சகபாடிகள் உட்பட்ட அனைத்து மக்களிடத்தும் அவர் காட்டிய இன்ன பிற அம்சங்கள், அவர் மேற்கொண்ட பாரிய வேலைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குக் குந்தகமாக விளங்கியவற்றைக் கடந்து முன்னேற அவருக்குத் துணை நின்றன.

அவர் இலண்டனிலிருந்த காலத்து சுகக் குறைவு அவருக்குத் தொல்லை கொடுத்தது. ஆயினும், அவர் தம் நோக்கங்களை முன்வைத்துச் செயலாற்றுகையில் அவரின் சுகவீனத்தாலும் அவர் தம் செயல்வேகத்தை மட்டுப்படுத்த முடியவில்லை.

நாட்டுக்கு மீண்டும் செல்லும் காலம் வந்துவிட்டது என அவர் முடிவு செய்த போது அவ்வாறு செய்வதால் ஏற்படக் கூடிய இடையூறுகள் பற்றி எடுத்துச் சொல்லி எச்சரிக்கை மூலம் அவரது ஆர்வத்தைத் தணிக்க முயன்றோம். ஆனால், அவரது மன உறுதியும் துணிவும் எங்கள் உள்ளத்தில் நிலவிய சந்தேகங்களைப் பொருட்டாக மதிக்கவில்லை. அவரது நேர்மை, சால்பு, உயரிய நோக்கம், குறிக்கோள் உறுதி ஆகியவற்றை நன்கு உணர்ந்து கொண்டோம். கந்தசாமி பணிவுடையவர், படாடோபமற்றவர், இரக்க சிந்தை படைத்தவர். அவர் தாம் பராக்கிரமன் என்றோ, தியாகி என்றோ தம்மை ஒரு போதும் கருதியதில்லை. ஆனால், அவர் இத்தகைய இரு பாத்திரங்களுமுடையவர். அவ்வாறே அவர் நமது நினைவில் நின்று நிலவுவார்.

நடந்ததையெண்ணிப் புலம்புவதை அவர் ஒரு போதும் விரும்பியதில்லை. அவர் 'இழப்பை' எண்ணிக் கவலை கொள்வதும், அவர் கொள்கைக்கு ஏற்புடையதன்று. எந்த நோக்கங்களுக்காகத் தம் வாழ்வைத் தியாகம் செய்தாரோ அவற்றுக்கு நம்மை அர்ப்பணிப்பதையே அவர் உள்ளம் விழையும் இலங்கையில், இலங்கையர் அனைவரும் அமைதியாக வாழும் உரிமை, தமிழர் அனைவருக்கும் அவர்கள் விரும்பிய இடத்தில் வேலை செய்யவும் இயன்ற உரிமையும் அமைதி நிலையும் ஏற்படுத்துதல், பிள்ளைகள் அனைவருக்கும் தாய் மொழியில் எழுதவும், படிக்கவும், வேலை செய்யவும் உரிமையிருத்தலோடு, தாம் வாழும் சூழலில் மதிக்கப் பெறவும், சமமாகக் கணிக்கப் பெறவும் உரிமையிருத்தல் என்பனவே அவர் கொண்டிருந்த நோக்கங்கள். அவர் சமூகத்தில் அவருக்கு ஆதரவு நல்கியவாறே அவர் இல்லாதபோதும் ஆதரவு காட்ட முடியும். கந்தசாமியைக் கொன்றவர்கள் அவரது நோக்கங்களையும் அழிக்க அனுமதித்தல் ஆகாது.


இலங்கை இப்போதும் உள்நாட்டுப் போருக்கூடே வாழ [illegible]. மக்கள் ஈவிரக்கமின்றி எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாத காரண[illegible] பொருட்டு கொல்லப்படுகின்றனர். கொலையானது கொலை செய்தவரையே பற்றிக் கொள்ளும் தொற்றுநோய். இலங்கையின் இளைய சமூகத்தினர் அழிவுச் சூழலில் வளர்ந்து வருகிறார்கள். இந்தச் சூழலிலிருந்து மீட்சி பெறுவது பகிரங்க எதிர்ப்பு, பொது மக்கள் தலைமை என்பவற்றின் மூலமே இயலும்.

போரில் - தோல்வியேயன்றி வெற்றி அமைவதில்லை. கந்தசாமி ஓர் சமாதான சீலன். அவர் அமைதிக்காக ஆன்மீகப்போர் தொடுத்து உயிர்த் தியாகம் செய்தார். அவர் நினைவே எமக்கு உந்துசக்தியாதல் வேண்டும்.

- வி.க.பிள்ளை

நன்றி - நூலகத்திட்டம்





அந்த வார்த்தையை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. கடும் தீ அவனுள் எழுந்து பரவத் தொடங்கியது. ஆத்திரம் தீர அந்த பெரிய விறாந்தையில் சுற்றிச் சுற்றி நடந்தான். அது மீண்டும் மீண்டும் பெரும் அலையாய் மோதியறைந்தது. அவனுக்கு இன்னும் அந்த விறாந்தைக்குள் நிற்க மனம் இடங்கொடுக்க வில்லை. வெளியில் புறப்பட்டு முற்றத்தில் அமர்ந்து கொண்டான். எங்கும் கம்மென்ற கும்மிருட்டு. மின்சாரம் அற்றுப் போய் இன்றோடு நாலு நாள். (இப்படி அறுப்பதும் பின் வருவதும் வழமை தான். ஆனால் இந்த முறை பிந்துவது ஏனோ தெரியல?) ஒரு குருவி கூட ரோட்டில் நடமாடும் அசுமாத்தமும் தெரியவில்லை. ஒரு நாய் கூடக் குரைக்கவில்லை. அவர்கள் இன்று வரவில்லையாக்கும். 'உஷ்' போடும் சில்லூறுகள் தான் எங்கே போயிற்றோ?

கரண்ட் இருந்திருந்தால் வேலியோரத்தில் இருக்கும் "லைற்போஸ்ரில்" கரணமடித்து விழும் விட்டில் பூச்சிகளின் "மெஜிக்" விளையாட்டுக்களைப் பார்த்தாவது அவன் மனத்தைத் தேத்தியிருப்பான். அல்லது "ஆக்".... "ஆக்" எனும் ஆந்தையின் சங்கீத இசையில் தன்னை மறந்து லயித்திருப்பான். சில வேளை கல்லெடுத்து எறிந்து துரத்தியிருப்பான். இல்ல 'உஷ்' போடும் சில்லூறுகளுடன் தானும் தாளம் கொட்டி மகிழ்ந்திருப்பான். இல்ல தாவித் தாவி கடிபட்டுக் கடிபட்டு, கம்பி வேலிக்குள் சிக்கி, காமத்துடிப்பின் வேகத்தில் ஒட்டி இழுபட்டுத் திரியும் நாய்களின் "ரெயில்" ஊர்வலத்தில் வயிறு குலுங்கச் சிரித்து ஓராயிரம் கவலைகளைக் கரைத்திருக்கலாம். இன்று தான் ஒன்றுமில்லையே...

வானம் மட்டும் மல்லாந்து ஐந்தாறு வெள்ளியைப் பூத்திருந்தது. மிச்ச நட்சத்திரங்கள் தான் எங்கேயோ? அவனைப் போல் மனசு சரியில்லையாக்கும். வானம் மட்டும் மின்னல் கோடுகளைக் கீறி அச்சுறுத்தியது. ஆனால் அவன் அசையவில்லை.

"இவனை ஒத்த புள்ளையள் வேலை செய்ய...

இவன் மட்டும் ஊதாரியாய் ஊரைச் சுத்தித் திரிகிறானே"

மீண்டும் செவிப்பறையினுள் ஏழு கடலலையாய் ஆத்திரம் பொங்கியெழுந்தது. நற நறவெனப் பற்களைக் கடித்தான். ஆத்திரத்தில் பக்கத்தில் இருந்த "ஸ்டூல்" மீது ஓங்கிக் குத்தினான். இதைவிட அவனால் என்ன செய்ய முடியும்? வானத்தைத் தகர்க்க முடியுமா? நட்சத்திரங்களை எரித்து சாம்பலாக்க முடியுமா? இல்லை கல்லெடுத்து எறிந்து நிலாவை நொறுக்க முடியுமா?

ஓம்! அவனுக்கு வேலையில்லைத் தான். ஆனால், அவன் ஒன்றும் மொக்கனோ, மூடனோ இல்லை. எத்தனை சோதனை தான் எழுதியிருக்கான். பெரும்பாலும் அணுப் பொட்டில் சனியன் அடித்திருக்கு இந்தா, அந்தா வேலையென ஊருக்குள்ள கதை அடிபட்டிருக்கு. கிடைத்த வேலையை பிடிக்காததால் விட்டுத்து வந்திருக்கான். பிடித்த வேலையை யார் யாரோ எல்லாம் பறித்தெடுத்திருக்கிறார்கள். இப்படியிருக்கக்குள்ள அவனை ஊதாரி... வேலையில்லாதவன்...

அவனும் மனுஷன் தான். கவலை கக்கிசமில்லாமலில்லை. விதானை வேலையும், "ரீச்சிங்" வேலையும் கிடைக்காதது கொஞ்சம் கவலை தான். அதற்காக அவண்ட இவண்ட காலையோ கையையோ பிடித்தோ அல்லது கள்ளச் "செட்டிபிக்கேற்" (வேலை அனுபவம், அம்மா, அப்பா, சகோதரங்கள் செத்ததாக மரணப் பதிவு) எடுத்தோ மாறாக, மப்படித்தோ, பேயனாகவோ திரியலயவன்... படித்தான். பாஸ் பண்ணினான். நல்ல மாக்ஸ் எடுத்தான். வேலை கிடைக்கவில்லை. அதற்காகக் கவலைப்பட்டதோ இரண்டோ மூன்று நாள் தான் அம்மா மட்டும் அழுது பதறியதாக அவனுக்கு ஞாபகம்.

பின் இந்த நாசமறுப்பொன்றும் வேணாம் என்று தான் "கெம்பஸ்"க்குப் போனான். மூன்று வருஷம் நிம்மதியாகப் படித்தான். யாருக்குத் தான் பயந்தான்? அவனுக்குள் தான் எத்தனை ஆளுமைகள். வற்றிப் போன இலக்கியத்துக்குக்காகத் தான் எவ்வளவோ கதைத்தான். எவ்வளவோ நிகழ்வுகளை முன்னின்று நடத்தினான். எத்தனை விரிவுரையாளர்களின் அறிவுரைகளையும் வழிகாட்டலையும் பெற்றான். மிக்க சந்தோஷத்துடன் தான் பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறினான். ஆனால் அவன் இப்படிக் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை. கனவிலும் கூட அவன்... இதுதான் விதியா? சதியா?

அவனோட ஒத்த "தரன்", "வினு", "தாட்ஷா" எல்லோரும் வேலை செய்யும் போது அவன் மட்டும் பட்டத்தோடு, சீ... நினைக்கவே வெட்கமாயிருக்கு. தரனை நினைக்கும் போது.... ஐந்தாம் வகுப்பிலே மூன்றாம் வகுப்புப் புத்தகமே வாசிக்கத் தெரியாதவன். கணக்கெண்டால் வேப்பங்காய்ச் சூனியம். வகுப்பில் கடைசிப் பிள்ளை. கருணை இரக்கத்தில் வகுப்பேற்றப்படுவான். இப்ப அவன் கிளார்க். இது எப்படிச் சாத்தியமானது? தாட்சா காகம் கிழித்த எழுத்து. முதல் தடவை "ஓ எல்லில் ஒல் எஃப்" இப்ப அவளும் ரீச்சர். பிள்ளைகள் எப்படி? கடவுள் அவர்களுக்கு மட்டும் நல்லாக் கொடுத்திருக்கிறார். இவனுக்கு மட்டும் ஏனிந்தச் சறுக்கல்? இல்லை அவனது கவலையீனமா?

அவனுடைய கவலையீனந்தான். தொண்ணூறில் நடந்த "கிளார்க்" சோதனை எடுக்காமல் விட்டுட்டு ஆண்டவனிடம் குற்றம் சாட்டுவதும், பாரம் போடுவதும் எத்தகை தகும்? வெறும் எண்பத்தி மூன்று மார்க்ஸ். (இருநூறுக்கு) அவன் என்ன எடுத்திருக்க மாட்டானா? அதுவும் 'சிம்பிளான' கேள்விகள்.

" யாரோ சொன்னானுகளாம். பாதுகாப்பு நிதிக்கு நூறு ரூபா கேட்கானுகள் மச்சான். என்ன மண்ணாங்கட்டிக்கு நாம பாதுகாப்பு நிதிக்கு குடுக்கணும்"

அந்த விசரனுகளின்ர கதையைக் கேட்காட்டி அவன் இன்னேரம் ஒரு எழுதுவினைஞன். காலையாட்டி, காலையாட்டி மின்விசிறிக்கு கீழே இருந்து இன்னேரம் எத்தனை கதைகளை கவிதைகளை எழுதித் தள்ளியிருக்கலாம். இப்ப அவனுக்கு இந்த மூட்டேயில்ல அவன் எழுதிய கதைகளும், கவிதைகளும் எங்க போயிற்றோ? கவிதையும், கதையும் அவனுக்குள் செத்துப் போயிற்றா?

பல்கலைக்கழக வாழ்வில் பதறிப் பதறிப் படித்த மகா படிப்புக் காலங்களில் எத்தனை கவிதை, கதைகள் தான் சுரக்கும். அப்போதெல்லாம் எழுத முடியாமல் "எக்ஸாம்" பயமுறுத்தும். முடியட்டும் என்று பொத்திப் பொத்தி வைத்த கவிதைகளும், கதைகளும் இப்போ எங்கே? எங்கு தான் மறைந்து போயிற்றோ? கவிஞர் ஆத்மா அதிகாலை நீல இருளில் சொல்லுவது போல் அந்த மகா கவிதைகள் அவனுக்குள் சுரப்பதில்லை. செத்துப் போயிற்று. இனி அவனுக்குள் வந்து மாளாது.

திடீரென கொண்டல் காற்று எழுந்து குளு குளுப்பை ஏற்படுத்தி மறைந்து போனது. கொஞ்சம் துயர் கரைந்திருந்தது. மௌனித்துப் போன தெருவில் சிறிது ஆரவாரம். பக்கத்து வீட்டுக் கொய்யாவில் வௌவால் "சளார்".. "சளாரென" விழுந்து கீச்சுக்.. கீச்சுப் போட்டது. சில நாட்களில் இந்தச் சத்தத்தைக் கேட்டு அவன் மிரண்டு போயிருக்கிறான். ஆமிக்காரனோ? என்று கூட யன்னல் இடுக்கினால் ரோட்டை எட்டிப் பார்த்திருக்கிறான். இன்று தான் அவனுக்கு தனிச்சுதந்திரம். (ஆமிக்காரன் ரோந்து போகாததால்) மனசு மட்டும் போராடுகிறது இன்று.

சோறு வைச்சிக் கன நேரமாகுது...

இலைச்சிப் போயிடும், வந்து தின்னன்.

அல்லயல்ல எல்லாச் சனமும் படுத்துத்து.

இன்னும்...

நான் படுக்கப் போறன் "

அம்மாவை நினைக்கும் போது அவனையறியாமலே களம் வரை துயர் நிறைந்து போகிறது. முறடு குழறுகிறது. கண்கள் பனிக்கின்றது.

"அம்மாவின் கற்பனைகள் கனவுகள் எல்லாம் சுக்கு நூறாய் போகுமா?"

நேற்று பக்கத்து வீட்டுக்காரியின் பசப்பு வார்த்தைக்கும், கோள் மூட்டலுக்கும் விட்டில் பூச்சியாய்ப் போன சோதியின் பேச்சுக்கு சவால் விட்ட அம்மாவின் வார்த்தை செத்துப் போகுமா? இல்லை! எப்படிச் சாகும்? அவனுக்குள் தான் ஆயிரம் ஆயிரம் பலமும் உணர்வுகளும் எழாமலில்லை. என்ன செய்வான் இப்ப?

அம்மாவைப் பார்க்கும் போதெல்லாம் நல்ல தங்காளின் கதை தான் ஞாபக மூட்டும். தங்களுக்காக உருகி... உருகி... உருக்குலைந்து போன தேகமும், பட்டினி கிடந்து ஒட்டிப் போன வயிறும், உரல் பிழிந்து வீங்கிப் புடைத்துக் கிடக்கும் நாடி, நாளங்களும் எல்லாம் வீணாகப் போகுமா? எப்படி வீணாகும்?

"உண்ட பிள்ளைகளை என்னத்திக்கு படிப்பிக்கிறா? பேசாம ரால்குஞ்சி, நண்டுக்குஞ்சி பிடிக்க அனுப்பலாமே" என்ற ஊரவரின் பேச்சுக்கு மயங்கிப் போகாமல் நான் எப்படிப் போனாலும் பரவாயில்லை. எண்ட புள்ளையள் நல்லாயிருக்கணும் என்று கஷ்டப்பட்டு படிப்பிச்ச அம்மாவின் கற்பனைக் கோட்டையில் யார் கல்லால் எறிவது?

அவ நினைச்சிருந்தா சீமாட்டி போல வாழ்ந்திருக்கலாம். பிள்ளைகளை மேசன் வேலைக்கோ, ஆத்துக்கோ, போக்காட்டி காலையாட்டி காசை சுளை சுளையாய் எண்ணி "தானா சீனா" போல இருந்திருக்கலாம். ஆனா, அவ அப்படிச் செய்யவில்லை. தான் வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி பிள்ளைகளைப் படிப்பிச்சா. அது வீணாகப் போகவில்லை. காலந்தான் கொஞ்சம் இழுத்து நிற்கிறது. சரிவராமலா போப்போகுது.

சின்ன வயதில் இருந்தே அம்மாவுக்கு கஸ்ரம் தான். மூத்தம்மாவோட நெல்லுக் குத்துவதும், அவல் இடிப்பதும், கடலை துவைப்பதும், மா இடிப்பதும் இப்படி வாழ்க்கை முழுவதும் கல்லில் நார் உரிச்சி எதிர் நீச்சல் போட்டா. சனியன் பிடித்த கஷ்டம். கல்யாணம் முடிந்தும் கூட குறையவில்லையே! அதுதான் அவனுக்குள்ள ஆதங்கம். அப்பா அடிக்கடி வேலையை விட்டு வருவதும், சேருவதும் இப்படி அம்மாவின் வாழ்க்கையின் அரைவாசி நாசமாய்ப் போயிற்று.

அப்பா சோம்பேறித்தனமானவர். அவர் உஷாராக இருந்திருந்தால் (இப்ப பரவாயில்லை) இன்னேரம் அவனுக்கு இந்த ஊராரின் கேலிப் பேச்சும், ஊதாரிப் பேச்சும் வந்திருக்காது. கவலையைப் பற்றி ஒரு செக்கனும் சிந்தித்திருக்க மாட்டான். எல்லாம் காலம்.

அவனுக்கு இந்த ஆண்டு வியாழன் மாற்றமும் சரியில்லைத் தான். ஏதோ ஒரு யோசனையில் யாரையும் பார்க்காமல், சிரிக்காமல் போனால் அவனுக்கு பெரிய 'லெவல்' புதுனமான "கெம்பஸ்" முடித்தவர். இவர் மட்டும் தானா? இவண்ட "கெப்பரால தான்" இவனுக்கு ஒரு வேலையும் கிடைக்குதில்லை. அவன்ட மனம் சரியில்லை... நேற்று தங்கச்சிட்ட பார்வதியிட அக்கா கூட இப்படிச் சொன்னதாகச் சொன்னாள். அவனுக்கு அப்போதெல்லாம் கண்ணதாசனின் பாடல்தான் அறுந்து... அறுந்து மனதை தேத்தும்.

அவன் அப்படித்தான். யாரும் சிரித்தால் தான் சிரிப்பான். சிரிக்காட்டி எப்படிச் சிரிப்பது. "நாம சிரித்து அவங்க சிரிகாட்டி பல்லுடைபடுவதா?" (சிலர் சிரித்தும் முகத்தை சுழித்திருக்காங்க) இதுக்கு 'லெவல்' தலைக்கனம், மண்ணாங்கட்டி என்று சொல்லுவது எந்தளவுக்கு சாத்தியம்?

ஆனால் இப்ப அவன் இந்த சமூகத்தை பெரிதாக நினைப்பதில்லை. "ஐ டோன்ற் கெயா எபோற் அதேஸ்" (I don't care about others) இது தான் அவனுடைய தாரக மந்திரம். ஊரோ, யாரோ இனி எப்படிக் கதைத்தாலும் அவனுக்கு இனி ஒன்றுமில்லை. ஊதாரியாய்த் திரிந்தாலென்ன? வேலையில்லாமல் திரிந்தாலென்ன? அவனுக்கு இவர்கள் சோறு போடப் போகிறார்களா?

இருந்தும் அவனுக்கு ஒன்றும் தன்மானம் முளைக்காமலில்லை. வீட்டில் தங்கச்சியும் தம்பியும் உழைக்கும்போது அவன் மட்டும் தண்டச்சோறு தின்ன மனம் இடங்கொடுக்கவில்லை.

"நாள்ளக்கு நடா ஐயாட்ட அந்த வேலை விஷயமாகக் கதைக்க வேண்டும்"

எங்கேயோ இருந்து பல்லி "இச்" கொட்டியது. நல்ல சகுனந்தான். பாப்பம்.

நிலவு உச்சிவானிலிருந்து இரண்டோ மூன்று பாகம் கீழ் இறங்கியிருந்தது. நேரம் ரெண்டோ ரெண்டரையாகவோ இருக்கும். ரோட்டில் ஒரு சத்தத்தையும் காணோம். வௌவால் கூட்டம் பறந்தோடி விட்டது. ஒரு பூச்சி கூட மூச்சு விடவில்லை. பயத்தினால் வாயைப் பொத்தி படுத்துறங்கி விட்டது போலும். கோவிலடி வெட்டையில் மாடுகள் முதுகு சொறியும் சத்தம் மாத்திரம் அறுந்து அறுந்து அவனின் காதுக்குள் ஊர்ந்தது.

முற்றத்திலிருந்து எழுந்து விறாந்தைக்குள் நகர்ந்தான். லாம்பு குருடு பத்துகிறது. பக்கத்தில் சோற்றுக் கோப்பை மூடியிருக்கிறது. மண்டபம் குறட்டைச் சத்தம் கிர்... கிர்ரென ஊரை எழுப்ப ஆயத்தமாகி விட்டது.

"என்னத்தத் தின்னிற, இன்னேரம் சோறு இலைத்துப் போயிருக்கும்"

பாயை, புழுதி தட்டி விரித்தான். மல்லாக்காகக் கெழிந்தான். ஊஹூம் எங்க நித்திரை வரப் போகிறது. அவனின் கண்களுக்குள் தான் எத்தனை முகங்கள். "கேன்வேக்கும்", மடமடவென புதிசா சரசரத்துப்போகும் "சாரிகளும்", புதிசா வாங்கி பொலிஷ் பண்ணிய "ஷூவும்" புது "ரவுசரும்" "சேட்டும்" எண்ணை பூசி மேல் வாரிய கேசமும். புரண்டான்... உழத்தினான்... நித்திரை எங்க? ஜன்னல் இடுக்கினால் நிலா எட்டிப் பார்த்தது.

மோட்டு வளையில் எலி ரெண்டு கட்டிப் பிடித்து தழுவி மூத்திரமடித்தது. அவனில் பாய்ந்தோடியது.

சனியன்..

இதற்கு முதலென்றால் பாய்ந்து எழுந்திருப்பான். இன்று ஏனோ தெரியல? சுருண்டு படுத்தான்.

"இவனோட ஒத்த புள்ளையள் வே...லை... செய்..ய.."

நன்றி - நூலகத்திட்டம்



தூய வெண்ணிற ஆடை சுமந்து குளிர்மை திருடவரும் சிறுபறவையாக என் முன்னே வரலான பலவீனமானதும், இரத்தல் நிறைந்ததுமான நமது உறவு இன்னும் அதிர்வுகளை உகுப்பதில் அரேபிய குதிரை ரோமப்பிடில் வயலின் இசை போலத்தான்.

கல்லறை வாசகங்களின் அர்த்தத்துடன் உறவின் முகத்தை மூடாதே. பின் மௌனங்கள், மௌனங்களை பேச வைக்கும் பிரயத்தனம், மௌனங்களாக முடிந்து நமது மன தரிசனத்திற்கான தருணம் தவறி நேசத்தின் வாழ்வும், வாழ்வின் நேசத்தையும் துயரொளிரும் பகல் வெளிச்சத்துடன் புனைந்துரைக்க வேண்டியிருக்கும் என்றிருந்த போதே, நிலாச் சோகம் தரும் இரவின் வரிசையில் நேற்றைய இரவும் சேர்ந்து கொண்டதோ?

அதி அலறல் சப்தத்துடன் அறையை குளிர்த்தி விட பிரஸ்தாபிக்கும் மின்விசிறி, மின்னில்லாமல் இயங்காமல் போனதாம். அந்த வாஸ்தவத்தை வைத்து பிர்னாசையும், நசாக்கையும் மெழுகுவர்த்தியின் மெல்லிய பிரகாசத்தில் படித்துப் பட்டம் பெறுமளவிற்கு அவை திருப்திகர-மானவையல்ல. என் மனசுக்குள் இதமாய்க் கிடக்கும் இன்று காலை 8.45ற்கு நடந்த சம்பவத்தை கதைபாட்டின் அழகில் கூறுவதாய்க் கூறி கடற்கரைக்கழைத்துச் சென்று விட்டேன். பிரியமான ஒளிரும் இரவின் கடற்கரைக் கடையில் சுடச்சுட கடலைக்சுருளை வாங்கி சேட் பையில் வைத்ததும் நெஞ்சுத்தோலும் சுட்டது. தேனீர் கோப்பைகளை விரல்களில் சாமர்த்தியமாய் கொழுவிவிட்டேன். நசாக் கடலைச் சுருளை தாளம் போட்டபடி நெருங்கினான். நேரம் 11 மணி இருக்கும் போதே சாந்த மாமாவின் ஈர ஒளியையும், காற்றையும் தரிசிக்க கடற்கரைக்கு வராமலே அட்டைத்துண்டுகளாலும், உடுத்தாடைகளாலும் வீசியபடி கிராமம் தூங்கிப்போனது.

வழமையை விடவும் பற்றான சுருதியோடு பிர்னாஸை "மச்சினேன்" என்றழைத்தேன். இந்தக் குரலின் தோய்வில் பாடசாலை, மாடிவீட்டு ஜன்னலிலும் தொக்கி நிற்கும் அவள் சேர்ந்திருந்தாள். அவள் பிர்னாசின் தாயின் ஒன்று விட்ட சகோதரியின் இரண்டாம் மகள். நகைச்சுவை என்ற பூச்சின் பெயரால் வளர்த்துக் கொள்ளப்பட்ட பேச்சு காலம் தப்பியும் நிராகரித்து விட முடியாத பிர்னாஸின் புன்னகையின் ஆதரவுடன் - அது எந்த வரம்புகளையும் மீறி விடாமல் வளர்க்கப்பட்டு அதிகார பூர்வமான முறையில் கூட கேட்டேன். அவன் நலிந்த பழம் புன்னகையுடன் நழுவி விட்டான். அதன் பின்னே நான் இதைச் செய்வதென தீர்மானித்தேன். அன்று மிகவும் மெதுவாய்த்தான் எனது பிரனாஸுடனான உரையாடல் துயர் பீடிக்கத் தொடங்கியது.

அவள் குனிந்து இதழ்களை நோக்கி விரல்களை மேலெழுப்பியவாறு செல்லும்போது காதலில் புதைந்துபோன என் முகத்தை கண்களுக்குள் சிறைப்பிடித்த படியா செல்கிறாள்? என் ஹேஷ்யங்களுக்கான தகவல் அதி அரிதாகவும் முன்பின் முரண்பட்டதாகவும் இருக்கின்றது.

சௌந்தர்யங்களுடன் அரிதிலும் அரிதாய் சிந்தப்படும் என் புன்னகைகளும் எத்திசை மாறிப் போனதோ தெரியாது? இனிமையான காதற்பாடல் அனைத்தும் கண் கலங்கச் செய்தன. காதலைப் பற்றி வெறும் உதிரிப்பூக்கள் என்று எண்ணியபின் காதலிக்குரிய நேசத்தைச் சுரந்து விடும் நான் போன்ற ஒருவனை பெறும் பேறு நான் விரும்பும் காதலிக்கு கிடைக்காமல் போவதுதான் என் வாழ்வின் அழியாத்துயர் என்னவோ தெரியாது.

அவள் வருவாளா? என்ற சந்தேகங்களுடன் இருந்த போதெல்லாம் கண்முன்னே குதித்து நிற்பாள் பிரமித்து போக மாட்டேன். பரபரப்பு தலையை கவிட்டுவிடும். அவள் கண்கள் வலது புறமாய்ச் சாய்ந்து என்னைப் பார்த்து விடத்துடிக்கும். அவளிடம் நேரடியாகப் பேசினால் குரல் கனத்து அடைத்து விடுவது மாத்திரமன்றி கண்கள் இருட்டி இடறியும் விழக் கூடும் என்ற போது அவளை நோக்கி எய்யப்பட்ட அம்புகள் அவளின் முகத்தை முறிக்காமல் உறவுக்காரர் ஆவது தான் மிக வெதும்பல். அவளுக்கும் ஒரு நாள் காதல் வரும். அது என்னுடனாக வராமல் போனால் சோகம் தான். இறுதியில் செய்யவேண்டியே ஆயிற்று நானே.

கால்களை வைக்கும் போது தூரிமண் சொளுசொளுப்பு நீரைக் கொப்பளிக்கும் பின் உறிஞ்சிக் கொள்ளும் மாரி காலத்துத் தெருவில் காத்திருந்தேன். சூரியன் கிளம்பி தனது



காலையை விட்டு மிகக் கொடூரமாய் வெப்பத்தை எறியலாயிற்று. இரவு மழை பெய்த பொசிவு நிலம் சில காக்காய் பொன்களைத் தள்ளி சிலுப்பத் துவங்கியது. தெருவில் கால் வைத்தும் வாஸ்தவமான எதிர் கொள்ளலை உண்டு பண்ணக் கூடிய வீட்டுவாசலொன்றை ஏற்பாடு செய்து விட்டு கிலி கலந்த ஆவலுடன் தெருவில் வேவு பார்த்து உலாவலானேன். வீட்டின் வாசலில் நின்ற மாமரம் உதிர்த்திய சருகுக்குள் முன்னரென்றால் சில குருத்து இலையும் வாற்பக்கம் கருகிச் சுருட்டிக் கிடக்கும். அணில் ஊம்பிய மாம்பழத்தின் கொட்டையும், பாதிச் செட்டையும் கடியன்களுக்கிடையில் கிடக்கும். அதுவல்லாமல் கடியனும் இல்லை. அணிலும் இல்லை. உயிர் நடமாட்டம் பல நூற்றாண்டு கண்டிராத வறட்சி மணம்.

கைகளோ எனது பையினுள் அழகிய நான்கு மூலையுள்ளதாய் மடித்த காகிதத்தை தொட்டுப் பார்க்க அஞ்சி ஒஞ்சிற்று.

இதுவரை பேசத் தயங்கும் அவள் சரிந்து போகாத பற்றுள்ள வார்த்தைகளை எதிர்பார்த்து எனது ஒவ்வொரு உரோமக்கண்ணும் சிலிர்த்து மன்றாடின.

அவள் வருகிறாள் பனிக்கிராமத்து ஆற்றுப்படுக்கையில் கரைந்து நிற்கும் வெண்பனியாக. கடிதத்தை கையிலெடுத்தேன். வாசலில் நின்றும் தெருவிற்கு வந்தேன். காற்றெல்லாம் ஏதோ சூனியம், தெருவெல்லாம் நிர்வாணமாய் போனது போன்ற புல்லரிப்பு நிசப்த இசையில் மோக மணியின் சுடர் காதுகளில் பதுங்கியது. அவளின் கைகளோ அமளி துமளிப்பட்டு கடிதத்தை வாங்க உயராமல் என்னைத் தாண்டியபோது அவளின் முகத்தில் அழுத்தமான எதுவுமே இல்லை. இன்னும் இரு தனிமை வாசகங்களா?

மிதமிஞ்சிய ஆற்றாமை புன்னகை ஒன்றுடன் கடிதத்தை கந்தலாக்கி விட்டேன். மனம் பேயின் கொம்பில் கொழுவிப் போயிற்று. வெறுமை வெளியில் ஒற்றை முள்ளாக நின்ற என்னில் மன்மதன் என்ற சாத்தான் வந்து வீழ்ந்திருக்கின்றான். கடைசி நிமிசங்களின்போது "போதும் இது பற்றிய புரிதல் இதனோடு" என்றான்.

அந்த நாள் அஸ்தமனத்தின் விளிம்புப் பொழுது பம்பரம் தளர்ந்த நான் ஊஞ்ச லாடுகின்றேன். ஏதோ மெல்லிய ராகம் சுகந்தம் பரப்புகிறது. என் நண்பன் வழிகாட்டியாக அவளின் பெரியப்பா என் வீட்டே வந்தார். அவரைக் கண்டதும் உச்சியில் அறைந்த ஆணி பாதங்களூடாக பாய்ந்து இதயம் தழுவி ஜடம் சிதிலம் சிதிலங்களாக பெயர்ந்து விழ அரூபமானேன்.

"என் மகள்" என்று ஆரம்பித்தான். "இந்த வயதில் கலியாணம் தேவைப்படுகிறது" என்றபோது உச்சி முதல் உள்ளங்கால் வரை எச்சி உமிழ்ந்தாற் போலிருந்தது. ஏனோ தெரியாது வீட்டில் அனைவரும் மௌனமாகினர். மௌனம் கொடியது அவள் போல்.

அன்றைய நாட்குறிப்பில் இது பதிவானது. "ஊரில் உள்ள மூங்கில் காட்டில் ஒரு கருவேப்பமரம். அதில் ஒரு பூங்குருவி. வண்ணாத்தி பூச்சியொன்று பூங்குருவியை அண்டி அழகூட்டிப் பறந்தது. அருகே நின்ற முருங்கை மரமும் பூங்குருவியை செண்பகம் என்று நினைத்து தன் புள்ளியிலைச் சிறகால் தடவிக் கொண்டது. ஏனோ பூங்குருவி சிணுங்கி இல்லை கர்ஜித்து தனது மஞ்சள் கால் நகத்தால் பிறாண்டி விட்டது.

புரிதல் என்பது மௌனத்தின் மீள்சுரப்பின் மெலிதான சோகமாய் இழையோடியது. மீண்டும் கண்ணும் ஆத்மாவும் ஒன்றையொன்று தழுவி பீறிட்டு அழலாயின.

## முஸ்லிம்களைக் குறி ....

(11ம் பக்கத தொடர்)

பின்னரே வீரவிதான அதன் வெறியாட்டத்துக்கு இ.தொ.காவை இலக்கு வைத்தது. இவையெல்-லாம் ஐ.தே.க. தனது வரலாற்றுத் துரோகத்தை இன்றும் மறை திரைக்குப் பின்னால் நின்று இழைத்துக் கொண்டிருக்கிறது என்பதையே காட்டுகின்றது.

இன்னொரு புறம் திவயின, தி ஐலன்ட், திரிசூலய போன்ற இனவாதப் பத்திரிகைகளின் பட்டியலில் நடுநிலைப் பத்திரிகைகளும் சில சேர்ந்து கொள்ள முனைகின்றன. ஜூலை 18ம் திகதிய சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் வெளியான "Shutting out Sinhalese from democratic path" என்னும் கட்டுரையில் அதன் ஆசிரியர் வீரவிதான, பயங்கரவாத எதிர்ப்பு இயக்கம் என்பன இந்நாட்டில் அநீதி இழைக்கப்பட்ட சிங்களவர்களது உரிமைக் குரலாகவும், ஜனநாயகப் பாதையில் போராடும் சக்தியாகவும் விளங்கும் போது அதனை எவ்வாறு தடை செய்யலாம் எனக் கேள்வி எழுப்பியுள்ளார். NMAT, SVV என்பனவற்றின் மீது பிரயோகிக்கப்படும் தடை, ஜனநாயகத்துக்குப் போடும் தடையாக அமையும் எனவும் புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ என்பவற்றின் மீது பயன்படுத்தப்படாத தடைச் சட்டம் NMAT, SVVன் மீது பிரயோகிக்கப்படுவது எப்படி நியாயமாகும் எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

எனவே இந்த நாட்டின் அரச இயந்திரம் முதல் இனவாத இயக்கம், தொடர்பூடகங்கள் அனைத்துமே சிறுபான்மையினருக்கு எதிராகத் திசை திருப்பப்பட்டுள்ள ஒரு துரதிருஷ்டவசமான காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். வெண்தாமரை இயக்கத்தையும், வெண்புறாப் பாடலையும் ஒலிபரப்புச் செய்து கொண்டு சமாதானத்துக்காக ஆணைக் குழுக்களையும், அமைப்புக்களையும் உருவாக்கிக் கொண்டிருக்கும் அரசாங்கம் தான் மற்றொரு புறம், வரவு செலவுத்திட்டத்தில் யுத்தத்துக்கான செலவை உயர்த்திக் கொண்டிருக்கிறது என்றால், இந்த முரண்நகைக்கு வரலாறு என்ன தீர்ப்புச் சொல்லப் போகிறது என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

ஒன்றை மாத்திரம் உறுதியாகச் சொல்ல முடியும். இன சௌஜன்யம், ஒருமைப்பாடு, ஐக்கியம், சமாதானம் போன்ற வெற்றுச் சொற்களைச் சொல்லிச் சொல்லிக் குமட்டலும், நமைச்சலும் வருமளவுக்குச் சமாதானம் குறித்துப் பேசாத நாவே இந்த நாட்டில் இல்லை. ஆனால், அதே அக்னி நாவுகள் தான் இனவாதம் என்னும் மறை திரைக்குப் பின்னால் பேரினவாதம் பேசிக் கொண்டிருக்கின்றன. இனவாதக்கலவரங்-களுக்குத் துணை போகின்றன. ஆனால், இந்த நாட்டு மூவின மக்களினதும், மனத்தளவில் மாற்றம் ஏற்படாத வரை மாறி மாறி வரும் அரசாங்கங்கள் வரையும் நகல் திட்டங்களும், தீர்வுப் பொதிகளும் சமாதான வரலாற்றின் குப்பைத் தொட்டிகளுக்கே ஈற்றில் போய்ச் சேரும்.

தென் இலங்கையின் நிகழ்கால அரசியல் தலைவர்களும் 50களில் இருந்து கொண்டே பிரச்சினைக்குத் தீர்வு காண முனைகின்றனர். சிறு-பான்மை மக்களைஇன சமத்துவம் கொண்டவர்கள் என்ற நிலைப்பாட்டில் வைத்துத் தீர்வு முயற்சிகளை முன்வைக்காத வரை சமாதானம் வெறும் பகற்கனவாகவே இருக்கும்.

முத்தாய்ப்பாக, முஸ்லிம்களுக்காகக் குரல் கொடுக்கும் கட்சிகளைப் பொறுத்தவரை இந்தச் சமூகத்தை அரசியல் அராஜகங்களிலிருந்தும், அநியாயங்களிலிருந்தும் பாதுகாக்கும் வரலாற்றுப் பொறுப்பு அவற்றினது தோள்களில் சுமத்தப்-பட்டுள்ளன. புத்திஜீவிகளும், கல்விமான்களும் இது குறித்துக் கலந்துரையாடுவது அவசியம். ஏனெனில் இலங்கை அரசியலின் எதிர்காலம், வெறுமனே அரசியல் சக்திகள் பொது மேடைகளில் மேற்கொள்ளும் அலட்டல்களால், போலி உச்சாடனங்களால் மலினப்பட்டுவிடக் கூடாது. அது இனவாதத்துக்குத் தூபமிடக்கூடாது என்பதே சிறுபான்மை மக்களின் நியாயமான எதிர்பார்ப்பு.

எங்கள் விலா எலும்புகள்
விறகாக மாறும் எனும் நம்பிக்கையிலும்
எங்கள் கல்லறைகளிலாவது
மலர்கள் வெள்ளையாய்ப் பூக்கும்
என்ற கடைசி
நம்பிக்கையிலுமே நாம் ஆயுதம் தரித்தோம்
ஆனால், எங்களைச் சூழவுள்ள சூன்யம்
எல்லாத்தின் மீதான வெறுப்பைக்
கொணருகின்றது.

-ஐரிஷ் கவிஞர் லுட்ஸ்விக்.

நன்றி - நூலகத்திட்டம்



# கிக்கோவின் ஓவியங்கள்: கிழக்கின் தனித்த வெளிப்பாடு

கிக்கோ என்றழைக்கப்படும் றுசாந்தனின் ஓவியங்கள் தனித்துவமானதும் தீவிரமானதுமான ஒரு புதிய பரம்பரையினரது ஓவியங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவை.

இந்தப் புதிய பரம்பரையினருக்கு ஓவியம் பொழுதுபோக்கிற்குரியதல்ல, தொழில்முறைக்குரியதுமல்ல. அது அவர்களது உணர்வுகளை, கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான மொழியாகி இருக்கிறது. இந்த மொழி ரேகைகளாலும், வர்ணங்களாலும் ஆனது.

இப்புதிய பரம்பரையினர் இந்த ஓவிய மொழியை தங்களது சுயதேடலால் கையகப்படுத்திக் கொண்டவர்கள். முயற்சிகளும், தவறுகளும் என்ற வழிமுறையினூடாகத் தங்களை நிலைநிறுத்திக் கொண்டவர்கள்.

இவர்களுள் சிலருக்கு ஓவியர் மாற்கு ஆசிரியராய் வாய்த்தார். மற்றும் அநேகரும் மாற்குவுடன் தொடர்புடையவர்களாகவே இருக்கின்றனர். மாற்குவைத் தவிர ஓவியர் சிவப்பிரகாசத்திடம் பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டவர்களும் இதில் அடங்குகின்றனர்.

மரபுரீதியான பார்வையில் வரன்முறையான பயிற்சி பெறாத இப் புதிய தலைமுறையினர் ஓவியம் என்ற மொழி ஆளுகையில் கொண்டுள்ள தாடனம், அவர்களது அடிப்படைத் தராதரம் பற்றிய சந்தேகங்களை மூத்த ஓவியர்களுள் பெரும்பாலானோர் கொண்டுள்ளனர். மூத்த ஓவியர்கள் பல தலைமுறைகளைச் சேர்ந்தவர்கள். நுண்கலைக் கல்லூரிகளில் பயிற்சியும், பட்டமும் பெற்றவர்கள். ஓவிய ஆசிரியர்களாக, ஓவியபாட அதிகாரிகளாக, இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஓவியர்களாக இருந்தவர்கள், இருந்து வருபவர்கள். ஈழத் தமிழரது நவீன ஓவிய வரலாற்றை உருவாக்கித் தந்தவர்கள். எனவே அவர்களது சந்தேகங்கள் புறங்கைகளால் தட்டிவிடக் கூடியவையுமல்ல.

அதேவேளை ஒரு தசாப்த காலத்திற்கும், மேலான வளர்ச்சி கண்டுள்ள இப்புதிய பரம்பரையினரது ஓவிய ஆக்கங்கள் பற்றிய காத்திரமான மதிப்பீடுகளுக்குரிய காலம் கனிந்துள்ளது என்பதையும் கவனத்திற் கொண்டு, ஈழத் தமிழரது நவீன ஓவிய வரலாற்றில் இப்புதிய தலைமுறையினரது இன்றைய நிலை என்ன? எதிர்கால நோக்குகள் எவை? என்பது பற்றித் தீர்மானிக்க வேண்டியதாகிறது.

ஏனெனில், ஈழத்தமிழரது நவீன ஓவிய வரலாற்றில், புதிய தளங்களுக்கும், புதிய பரிமாணங்களுக்கும் ஓவியத்தை வளர்த்துச் சென்றவர்களாக இப்புதிய தலைமுறையினர் விளங்குவதும் தட்டிக்கழிக்கத்து விட முடியாததாகும்.

இப்புதிய தலைமுறையினரது விசித்திரமான தோற்றத்திற்கும், அசாதாரணமான பாய்ச்சல்களுக்கும் பின்புலமாக இருந்து வருவது சமகால வாழ்வின் அதிர்வுகளும், அந்த அதிர்வுகளுக்கான அவர்களது எதிர்வினைகளுமே ஆகும்.

இந்தச் சமகால வாழ்வு போர்க்கால வாழ்வு எனப் பெயர் பெற்றுள்ளது. இந்தப் போர்க்கால வாழ்வே இவர்களை ஓவியர்களாக்கிற்று.

இவர்கள் பாரம்பரிய ஓவியர்களைப் போல பக்தி அனுபவத்தை விளைவிக்கும் அழகியலை அவாவுபவர்கள் அல்லர், வரன்முறையான ஓவியப் பயிற்சி பெற்றவர்கள் போல் வர்ணங்களின் ஒத்திசைவு, ஓவியச் சமநிலை, ரேகைகளின் லாவகம் என்பவை பற்றிய பிரக்ஞை கொண்டவர்களும் அல்லர்.

இவர்கள் கொப்பளித்துக் கொண்டிருக்கும் உணர்வுகளையும், கருத்துக்களையும், ரேகைகள், வர்ணங்கள் மூலமாக உருவங்களாக, அருவங்களாக, அருவுருவங்களாக வரைவதிலிருந்து தங்களது பயணத்தை ஆரம்பிக்கின்றனர்.

"நான் ஒரு முழுநேர ஓவியன் அல்ல. அதற்கான கைப்பயிற்சியும் என்னிடமில்லை. உரிய சாதனங்களும் என்னிடமில்லை. ஒரு விதத்தில் பிள்ளையாரில் தொடங்கி, பிள்ளையாரில் பழகி, பிள்ளையாரிலேயே தேர்ச்சியும் பெற்றேன் எனலாம்" என்று தனது போர்க்கால ஓவியங்களான பிள்ளையார் ஓவியங்கள் பற்றி ம. நிலாந்தன் கூறுவது இதனை மேலும் புரிய வைக்குமென நம்புகிறேன்.

ஒரு தசாப்த காலத்திற்கும் மேலாக இந்தவாறாக வளர்ச்சி கண்ட புதிய தலைமுறையின் இன்றைய பிரதிநிதி தான் கிக்கோ.

இவரது வருகை ஆச்சரியமானது. மட்டக்களப்பில் முன்வழிகாட்டி எவருமற்றவராகவும், தனித்தவராகவும் காணப்படுகிறார். போர்க்கால வாழ்வின் அனுபவங்கள், அதிர்வலைகள் இவரது ஓவியங்களாகின்றன. சிறப்பான படைப்புத்திறன் உடையவரென்பதையும், அச்சமற்ற பரிசோதனையாளர் என்பதையும் இவரது படைப்புகள் புலப்படுத்துகின்றன.

சுவரொட்டித் தாள்களில், சுவரொட்டி வர்ணங்களைப் பயன்படுத்தி வரைபவைகளில் பொதுவாக இரண்டு வகையான ஓவியங்களைக் காண முடிகிறது. ஒன்று இருள் வர்ணச் சேர்க்கைகளால் அமைந்த அருபத் தன்மை வாய்ந்த, அருவுருவத் தன்மை வாய்ந்த ஓவியங்கள். மற்றையது பிரகாசமான வர்ணச் சேர்க்கைகளா லான அலங்காரத்தன்மை வாய்ந்த உருவ ஓவியங்கள். இவற்றுள் இருள் வர்ணச் சேர்கைகளாலானதும், அருவுருவத் தன்மை வாய்ந்ததுமான ஓவியங்களே ஆதிக்கம் பெற்றவையாக இருக்கின்றன. இவை பெரும்பாலும் ஓவியரது மனப்பதிவுகளாகவே (Impressions) அமைந்திருக்கின்றன.

மேலும் ரேகைகளையும், ரேகைகளாலான அலங்காரங்களையும் கொண்டதும், பக்தி அனுபவத்திற்குரிய அழகியலை அவாவுவதுமான பாரம்பரிய ஓவிய முறைமைகளினூடு சமகால அனுபவங்களை, அவை ஏற்படுத்தும் உணர்வுகளை வெளிப்படுத்த முனைகின்றார். இது தரும் அழகியல் அனுபவம் வேறுபட்டது. நவீன ஓவியத்திற்குரியது. அந்த வகையில் எதிர்ப்புணர்வுக்குரிய தன்மை வாய்ந்தது; ஆரோக்கியமான பரிசோதனை முயற்சியாக இது தென்படுகிறது.


மேற்கூறிய சுவரொட்டித்தாள், சுவரொட்டி வர்ணம் என்பவற்றிலிருந்து தைல வர்ண ஓவியங்களுக்கு மாறிய பொழுது முன்பு இவரது ஓவியங்களில் தென்பட்ட மட்டுப்பாடுகளில் இருந்து விடுபட்டவராகக் காணமுடிகிறது. பிரகாசமான வர்ணச் சேர்க்கை மேலோங்கிக் காணப்படுகின்றது. வேறுபட்ட அளவுகளிலும் ஓவிய ஆக்கங்கள் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன. தைல வர்ணத்தின் நெகிழ்ச்சித் தன்மையும், வேறுபட்ட அளவுகளிலான் ஆக்கங்களும் முன்பு ஏற்படுத்திக் கொண்டிருந்த ஒரே தன்மையான தோற்றப்பாட்டையும் இல்லாமல் செய்திருக்கின்றன.

இவ்வாறாக, ஒரு தராதரமிக்க தனிநபர் ஓவியக் காட்சியை நடத்துவதற்குரிய தகுதி படைத்தவராக தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளார் கிக்கோ.

இத்தகையதொரு தனிநபர் ஓவியக் காட்சி கிக்கோவினது ஓவியங்கள் பற்றிய மதிப்பீட்டை மேற்கொள்ளவும், அதன் மூலமாக அடுத்த கட்டப் பயணத்திற்காக அவர் தன்னைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டியவை பற்றியதுமான தேடல்களுக்கும் இது வழிதிறந்து விடும்.

மேலும் இத்தகைய இளைய தலைமுறை ஓவியர்கள் மேலதிக பயிற்சிகளைப் பெறுவதற்கோ அல்லது தங்களது திறன்களைப் பட்டை தீட்டிக் கொள்வதற்கோ எந்தவொரு வாய்ப்பும் ஏற்படுத்தப் படுவதற்கான பி ்ஞை எதுவுமற்ற சூழலே தொடர்ந்தும் நிலவி வருவதும் கடுமையான கேள்விக்குரியது.

**சி. ஜெய்சங்கர்**




கிக்கோவின் இரண்டு ஓவியங்கள்






## பெயர் மாற்றம்

ஆழ்கடலின் மணற்பரப்பில்
ஒரு
தோணிக்காய்த் தவமிருந்தோம்....

கல்பினால் முத்தமிட்டுப்
பிரிந்த மண்ணை
கழுத்து திருப்பிப் பார்க்கவும்
பயந்திருந்தோம்....

பிடரிக் குழிக்குள்
குண்டுகள் பாயலாமென
பிரமை பிடித்திருந்தோம்....

உயிர் காத்தலொன்றுக்காக
உள்ளதனைத்தும்
உதறி நின்றோம்...

நமது மண்ணில்
மனிதர்களான நாம்
மறுகரையில்
அகதிகளானோம்....

நம்மீது
ஒட்டிய பெயரழித்து மீண்டும்
உண்மைப் பெயர் சூடலெப்போ...?

அபூஹிஷாம்

நன்றி - நூலகத்திட்டம்



# புது உலகம் எமை நோக்கி:

## பெண் சிறுகதைஞர்களின் தொகுப்பு

அண்மையில் சக்தி பெண்கள் சஞ்சிகை வெளியீட்டாளர்களால் "புது உலகம் எமை நோக்கி" எனும் தலைப்பில் சிறுகதைத் தொகுதி ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. தனியாக பெண்களின் படைப்பினை உள்ளடக்கி வெளியிடப்பட்ட கவிதைத் தொகுதிகள் இரண்டிற்குப் (சொல்லாத சேதிகள், மறையாத மறுபாதி, ) பின் முதன் முதலாக பெண் எழுத்தாளர்களின் படைப்புகளை மட்டும் உள்ளடக்கி வெளிவந்துள்ள முதல் சிறுகதைத் தொகுப்பு இது என நினைக்கிறேன். புலம்பெயர்ந்த நாடுகளில் பல இன்னல்களுக்கு மத்தியில் வாழும் இவர்களின் இந்த முயற்சி மிகவும் பாராட்டத்தக்கது. ஈழத்தில் பெண் எழுத்தாளர்கள் விரல் விட்டு எண்ணக் கூடியவர்களாய் உள்ள போதிலும் புலம் பெயர்ந்து வாழும் பெண் எழுத்தாளர்கள் இவ்வளவு தூரம் முயற்சித்திருப்பது நல்ல விடயம். அத்துடன் பெண் சிறுகதை எழுத்தாளர்களுக்கான நம்பிக்கையின் முதல் அறுவடையாகவும் இது வெளிவந்துள்ளது.

இதில் வெளிவந்துள்ள சிறுகதைகள் பல புலம் பெயர்ந்த நாடுகளில் இருந்து வெளிவரும் சஞ்சிகைகளில் ஏற்கெனவே வெளிவந்துள்ளன. இத்தொகுப்பில் எழுதியுள்ள எழுத்தாளர்களில் ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் ஈழத்து வாசகர்களுக்கு அறிமுகமில்லாதவர்கள். இத்துடன் அநேகமானோர் அறிமுக எழுத்தாளர்களும் கூட.

புலம் பெயர்ந்து அந்நிய நாட்டில் வேறுபட்ட கலாசார சூழலில் வாழும் தமிழ்ப் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் முக்கியமாக புலம் பெயர் வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகள், அந்நியப்பட்ட தனிமையான சூழல், கலாசாரகாவிகளாக எப்போதும் இருக்கும் பெண்கள் அந்நிய கலாசாரத்துடன் சமரசம் கொள்ளல், ஒடுக்கு முறைகள், உளவியல் வேதனைகள் எனப் பல விடயங்கள் பற்றியும் இத்தொகுப்பில் வரும் சிறுகதைகள் பேசுகின்றன. பேசா மடந்தைகளான பெண்கள் இச்சிறுகதைகளின் ஊடாக தங்களின் உள்மனத்தின் எண்ண ஓட்டங்களை




எங்கள் முன் வைத்துள்ளார்கள்.

இவற்றிற்கப்பால் இத்தொகுப்பின் முன்னுரையில் உள்ளதைப் போல்,

புலம்பெயர் பெண்களது சிந்தனைகள் கூடிய வரை வெளியே அறியப்பட வேண்டும். இந்நோக்கை எடுத்துச் செல்லும் கலை இலக்கிய ஊடகங்களில் இத்தொகுதி நனைந்து கொள்கிறது. எழுத்தாளர்களது ஆர்வத்தைப் பெருக்கி மேலும் அவர்களை எழுதத் தூண்டுவதும் இத்தொகுதியின் நோக்கம். இச்சிறுகதைத் தொகுதி வெளிவருவதற்கு இவை உந்துதல்களாக அமைகின்றன.

..................

ஈழத்தில் தொடர்ந்து கொண்டிருக்கும் முடிவிலா யுத்தம் மக்களை உலகத்தின் நாலா பக்கமும் ஓடவைத்துள்ளது. ஓடிவந்த இடத்தில் எம்மை ஒட்டவைத்துக் கொள்வதற்கு நாம் நிகழ்த்தும் போராட்ட சிக்கல், மன உழைவுகள் என்ற சூழலிலும் புலப்பெயர்வு பல சிறப்புக்களைக் கொண்டதாக இருக்கின்றது என்று நாம் ஆழ்ந்து நோக்கும் போது புரிகிறது. புலப்பெயர்வு பல பெண் எழுத்தாளர்களை ஈழத்து இலக்கியதிற்கும் பெண்கள் இலக்கியத்திற்கும் தந்துள்ளது என்றும் கூறலாம்.

பெண்களுடைய உணர்வுகளும், கருத்துகளும், எண்ணங்களும் இலக்கிய வடிவம் பெறுவதற்கும், இலக்கிய ஆக்கம் தொடர்பான அவர்களது திறன்களை வளர்த்தெடுப்பதற்கும் சக்தி வெளியீட்டாளர்கள் எடுத்துக் கொள்ளும் முயற்சி நல்ல விடயம்.

இச்சிறுகதைத் தொகுப்பு பற்றிச் சொல்லும் போது புலம் பெயர் பெண்களின் உளவியலைப் பிரதி பலிப்பதாகவும் சிறந்த சிறுகதை இலக்கியமாகவும் வந்துள்ள "நீயும் ஒரு சிமோன் தி போவுவா போல" (காவேரி, நோர்வே.) கட்டாயம் கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய ஒரு படைப்பு. முற்போக்குவாதிகள் என்று தங்களை தாங்களே அறிவித்துக் கொள்ளும் ஆண்கள் பெண் விடுதலை என்ற போர்வையை பொய்யான முழக்கமாக வைத்து எப்படி பெண்களை ஏய்கின்றார்கள் என்பது பற்றியும், ஆண்களின் கருத்தியலினூடான ஆதிக்கத்தைப் விபரிப்பதாகவும் வந்துள்ள நல்ல சிறுகதை. அத்தோடு வடிகால் - வசந்தி ராஜா (கனடா), சுரண்டலின் கொடுக்குகள் - தேவா (ஜேர்மனி), ஒத்தைத் தண்டவாளமும் ஒரு கறுப்பு நீள முடியும் - சுருதி (சுவிஸ்) விலங்கு உடைப்போம் - சந்திரவதனா செல்வகுமாரன் (ஜேர்மனி) போன்றவையும் தரமான சிறுகதைகள். இச்சிறுகதையாசிரியர்களிடம் இருந்து நாம் நிறையவே எதிர்பார்க்கிறோம்.

மொத்தமாக எல்லாச் சிறுகதைகளுமே பெண்களுடைய பிரச்சினைகளை வெவ்வேறு தளத்தில் பேச முனைகின்றன. இந்த முயற்சி அவசியமானது. தொடர்வது நல்லது.

சக்தி வெளியீட்டாளர்கள் தொடர்ந்தும் இப்படியான நல்ல முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

- கலா

# இருமை




**'இருமை'**
**சிறுகதைத் தொகுப்பு**
**கே. எஸ். சிவகுமாரன்**
**வெளியீடு:**
**தேசிய கலை இலக்கிய பேரவையுடன்**
**இணைந்து**
**சவுத் விஷன்**
**6, தாயார் சாகிப் 2வது சந்து**
**சென்னை - 600 002**
**இலங்கை விலை ரூ. 110;-**

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 25வது ஆண்டு நிறைவு வெளியீட்டு வரிசையில் மூன்றாவது நூலாக கே. எஸ். சிவகுமாரன் அவர்களின் சிறுகதைத் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. பிரபல விமர்சகரான கே. எஸ். சிவகுமாரன் அவர்கள், இந்நூலில் கொழும்புச் சூழல் கதைகள், யாழ்ப்பாணச் சூழல் கதைகள், மட்டக்களப்புச் சூழல் கதைகள், கண்டிச் சூழல் கதைகள், தமிழகச் சூழல் கதைகள் என பிராந்திய ரீதியில் கதைகளை படைத்துள்ளார். இவை சுவையான திருப்பமான முடிவுகளுடன் கூடிய பல்வேறு பத்திரிகைகளில் வெளியான சிறுகதைகளாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. நூலில் ஆசிரியர் "இக்கதைகள் எனது வளரிளம் பருவத்தின் போதும், மணமாகாதவனாக இருந்தபோதும் எழுதப்பட்டமையால், ஆழ்ந்த அனுபவங்கள் இங்கு கதைகளாக வடிக்கப்படவில்லை" எனக் குறிப்பிடுகின்றார்.

அழகிய அட்டைப்படத்துடனும், இக்கதைகள் பற்றி எழுத்தாளர்களான வல்லிக்கண்ணன், கோகிலா மகேந்திரன் ஆகியோரின் கடிதக் குறிப்புகளுடனும் இந்நூல் வெளிவந்துள்ளது.

நிஷா

# தீயில் ...

(13ம்பக்கத் தொடர்)

அமைப்புக்களின் நடவடிக்கைகளுக்கு எதிரான உடனடிச் செயற்பாடாக அமையும். இதைத் தான் பெரும்பான்மைச் சமூகத்து நடுநிலையாளர்கள், செயற்பாட்டாளர்கள் செய்ய வேண்டும். ஏனெனில், சிறுபான்மை இனங்களுக்கெதிரான துவேஷக் குரல் செயற்பாடுகள் யாவும் அச்சமூகத்திலிருந்துதான் தோற்றம் பெறுகின்றன. மீண்டுமொரு கலவரத்தைத் தோற்றுவிக்க வீரவிதான கடும் பிரயத்தனத்தை செய்து வருகின்றது. ஒகஸ்ட் மாதத்துக்குள் கொழும்பிலிருந்து தமிழ் முஸ்லிம் மக்களை விரட்டிவிடுவதாக அது சபதமெடுத்திருக்கிறது. இவ்வாறான துவேஷ நிலைப்பாட்டை எதிர்க்கும் இக்கிராமத்து மக்கள் போன்ற பலரை நாம் இனங்காணவேண்டும். உண்மையில் இந்த நிகழ்வு அப்படியான ஒரு நிகழ்வைத் தோற்றுவித்தாலும், அது இன்னமும் பரவலாக்கப்பட வேண்டும். எல்லா ஊர்களிலும் இவர்களைப் போன்றவர்கள் ஊக்கப்படுத்தப்பட வேண்டும். இவை தான் சம்பவங்களை விட சரித்திரங்களைத் தோற்றுவிக்கிறதாய் அமையும்.


குறித்த பிரதேச மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தீர்வு காணப்பட வேண்டியவை. சிலவேளை இதுவே பிரச்சினைகளை வளர்க்கக் கூடியதாய் இருக்கும். உதாரணத்திற்குச் சொல்வதென்றால் இங்குள்ள தோட்ட நிர்வாகிகள் பெரும்பான்மையினர், இவர்கள் எப்போதும் முதலாளிகளாய் இவர்களைக் கட்டுக்குள் வைத்திருக்கவே விரும்புகிறார்கள். எட்டடிக் காம்பராக்களை வீட்டார்களுக்கேற்ப ஒழுங்குபடுத்தவும் முடியாத நிலைமை மக்களுக்கு. ஏதாவது செய்தால் தொழில் பறிபோகும் அபாயம். சொந்தப் பணத்திலாயினும் வீட்டைப் பெரிதாக்கவோ, மாற்றம் செய்யவோ முதலாளிகள் அனுமதிக்கிறார்கள் இல்லை. இவர்களுக்கான மலசலவசதி கூட இப்போது சிக்கல் தான். குழிகள் தோண்டப்பட்ட நிலையில் முதலாளிகளின் அடுத்த கட்ட நடவடிக்கைக்காய் ஏங்கி நிற்கின்றன. சம்பளங்கள் கூட இவர்களின் சீவியத்திற்குப் போதியதாய் இல்லை. கல்வி கற்க விருப்பமுள்ள இளம் தலைமுறை கை கட்டி நிற்கிறது. பெண்பிள்ளைகளின் அடுத்த சொத்தாய் கொழுந்துக் கூடையைத் தான் விட்டுச் செல்கிறார்கள். இவர்களிலிருந்து ஓரளவு படித்துத் தகுதி பெற்ற இரு யுவதிகள் (குமாரி சந்திரிகா, சத்தியப்பிரியா) நிரந்தரமாக்கப்படாத ஆசிரிய சேவையில் 1200ரூபாய் சம்பளத்துக்கு தொழில் பார்க்கிறார்கள். இப்பிரதேச இளம்பிள்ளைகளின் கல்வியில் அதிக கரிசனை காட்டும் அவர்கள், அவர்களைச் சூழ்ந்துள்ள வறுமையையும், இயலாமையையும் நொந்து கொள்கிறார்கள். இளைஞர்கள் பலர் வேலையின்றியே இன்னுமிருக்கிறார்கள். சிலர் தலைநகரில் ஏதாவது தொழில் தேடி புறப்பட்டு விடுகிறார்கள். அவர்களும் கூட தலைநகர முதலாளிகளால் சுரண்டப்படுகிறார்கள்.

இப்படியான இவர்களிடையே அன்றைய நிகழ்வு மனநிறைவானது தான். காலநிலையினால் இங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சில சமாதான நிகழ்வுகள் தடைப்பட்டமை இவர்களுக்குப் பெரிய வருத்தம். எல்லோருடனும் அன்பாக, நட்பாகப் பழகும் இவர்களின் மனவிருப்பங்கள் நிறைவு செய்யப்படுவது நாட்டின் சமாதானத்திற்கும் அமைதிக்கும் பாரிய பங்களிப்பாய் அமையும்.

vk; .Nf.vk; .v];

# அல்லாமா இக்பால்

## ஓர் அறிமுகம்




**அல்லாமா இக்பால்**
**ஓர் அறிமுகம்**
**எஸ்.எம்.ஏ.ஹஸன்**
**வெளியீடு:**
**ஒறாபி பாஷா கலாசார நிலையம்**
**கண்டி**
**விலை: 80.00**

இந்தியத் துணைக்கண்டத்தில் தன் புரட்சிகர தத்துவார்த்த சிந்தனைகளால் தனியிடம் பிடித்த மகாகவி அல்லாமா இக்பால் பற்றிய ஓர் அறிமுக நூல் இதுவாகும். இந்த நூற்றாண்டின் ஆரம்ப காலத்திற்குரியவரான இவரை மேற்குலகம் அறிந்து வைத்திருக்கும் அளவுக்கு தமிழுலகம் சரிவர அறியவில்லை என்றுதான் கூறவேண்டும். இவரின் சில கவிதைகள் நூல்வடிவில் தமிழுக்கு வந்திருப்பினும் அது பல காரணங்களுக்காக தமிழ் இலக்கிய உலகின் கவனிப்பைப் பெறவில்லை. பாரதி, ரவீந்திரநாத் தாகூர் போன்றோர் வரிசையில் இடம் பெறும் இக்பால் பற்றிய இந்நூல் வரவேற்புக்குரியதாகும். உருது, பாரசீக, ஆங்கில மொழிகள் மூலம் சுமார் 19 நூல்கள் அளவில் எழுதியுள்ள கலாநிதி இக்பால் பற்றி இந்த அறிமுக நூலைப் போலவே இவர் பற்றி இன்னுமொரு நூலொன்றும் கலாநிதி எம். ஏ.எம்.சுக்ரியால் வெளியிடப்படவுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஷகீப்

# காணாமல் போனவர்கள்



**'காணாமல் போனவர்கள்'**
**(கவிதைகள்)**
**அஷ்ரப் சிஹாப்தீன்**
**வெளியீடு:**
**'யாத்ரா'**
**நண்பர் இலக்கியக் குழு**
**விலை: 100.00**

1970களின் பிற்பகுதியில் எழுதத் தொடங்கி 'ஓட்டமாவடி அஷ்ரஃப்' எனும் பெயரில் பரவலாக அறியப்பட்டிருந்த அஷ்ரஃப் சிஹாப்தீனின் மௌனம் கலைத்த தேவதையாக பரிணமித்துள்ளது இவரின் இக்கவிதைத் தொகுப்பு நூல். 78-98 காலப்பகுதியிடையேயான இக்கவிதைகள் கிழக்கு வாழ் முஸ்லிம்களின் அச்சம் மிகுந்த இருப்பையும், அவலத்தையும் அதனிடையே துளிர்க்கிற நம்பிக்கையினையும் பேசுபவை. இதற்குச் சிறந்த உதாரணமாக இவரின் மிகப் பிரபலமான பல பல தடவை மீள் பிரசுரமான 'ஸெய்த்தூன்' கவிதையைக் குறிப்பிடலாம். ஈழத்துக் கவிதைப் பாரம்பரியத்துக்கு ஒரு நல்வரவாய் கட்டியம் கூறிய அக்கவிதை போன்று வேறு கவிதைகளை அவர் பிற்காலத்தில் தராததும், அவரின் நீண்ட மௌனமும் ஒரு குறையாகத்தான் பலரிடம் இன்றும் உள்ளது.

கவிஞர் சேரன், கலாபூஷணம் ஏ. இக்பால் ஆகியோரின் முகவுரைகளோடு மிக மிக நேர்த்தியாய் வந்திருக்கும் இக்கவிதை நூல் இலங்கையின் அரசியல் பின்புலங்களின் ஓர் பதிவாகும். இந்நூலின் தலைப்பும் இதையே சுட்டிநிற்கிறது.

நில்ஷா

நன்றி - நூலகத்திட்டம்



# எண்பது தொண்ணூறுகளில் தமிழ் நாடக இலக்கியம் - 3

- வெங்கட் சாமிநாதன்

*9*

எழுபதுகளின் இடை வருடங்களில் எப்போதோ பாதல் சர்க்கார் (வங்க மூன்றாம் தியேட்டர்காரர்) சென்னை வந்து நாடகப் பட்டறை ஒன்று நடத்தினார். மிகுந்த உற்சாகம் கொண்ட ஏழைகளின் மேடை அல்லது தெரு நாடகம் என்று ஏதோ ஒன்றில் விருப்பம் கொண்டு செயலாற்ற விழைந்த இளைஞர்களைக் கொண்ட நாடகப்பட்டறை அது. பாதல் சர்க்கார் பின்னர் பல முறை வந்து நாடகப்பட்டறைகள் நடத்தியுள்ளார். அவரது அடக்கமும், எளிமையும், அவரிடம் நம்பிக்கைக் கொள்ளத் தூண்டும் அவரது செயலூக்கமும், மற்றவர்களைத் தன் வயப்படுத்தும் ஆளுமையும் இளைஞர்களை கட்டாயம் கவர்ந்தன. அவ்வளவே. பின் நிகழ்ந்த நடைமுறைகள் அவ்விளைஞர்கள் பாதல் சர்க்கார் கற்பித்தவற்றை கோஷங்களாக ஆக்கிக் கொள்ளத் தான் கற்றார்கள் என்பது நிரூபணமாயிற்று. அவரது சமர்ப்பண ஆதரிஸமோ செயல்பாடோ, உழைப்போ, பார்வைகளோ அவர்களுக்கு வேண்டியதாக இருக்கவில்லை. (கற்ற ஒருவர் பிரளயன் என்று மட்டும் சொல்லலாம். ஆனால், அது சமூகச் செயல்பாட்டின் வெளிப்பாடாகியதே அல்லாது நாடக இலக்கியப் பிறப்பாக ஆகவில்லை. அது பாதல் சர்க்காரின் நோக்கமும் இல்லை என்பதும் உண்மை தான்).

பாதல் சர்க்கார் வரும் முன் நடந்த காந்தி கிராம நாடகப்பட்டறை, எஸ். ராமானுஜத்தின் இயக்கத்தில் தன் செயல்பாட்டை பாரம்பரிய திறந்த வெளி அரங்க நாடகங்களின் பக்கம் திரும்பியது. அது அந்நாளைய சந்தர்ப்பத்தில் தேவையாகவும் இருந்தது. அது அவசியம் என்று உணரும் அதே சந்தர்ப்பத்தில் அதைக் கற்றவர்களின் கோணல்பார்வை விபரீத விளைவுகளுக்கு இட்டுச் சென்றது பரிதாபம். மருந்துக்கு சுக்கு நீர் சாப்பிடு என்று சொன்னால், அதிலேயே மூழ்கிக் குளிப்பவனின் மூளையை என்னென்பது!

சென்னையில் கூத்துப் பட்டறை தொடங்கப்பட்டது. அதன் செயல்பாட்டில் இரண்டு ஆளுமைகள் பிரதானமானவை எனத் தோன்றுகிறது. ஒன்று தெருக்கூத்தின் இன்றைய பெருந்தலையான கண்ணப்ப தம்பிரான். இரண்டாமவர் ந. முத்துசாமி. ந. முத்துசாமியின் நாடக எழுத்துக்கள் மரபான வடிவத்திற்கும், நடைமுறைக்கும், தெரிந்த யதார்த்தத்திற்கும் மாறுபட்ட தோரணை கொண்டவையாயும் பத்தியான (Stylized) நடிப்பும், மேடையேற்ற முறை நோக்கியனவாகவும் இருந்தன. ந. முத்துசாமியின் மனத்தில் தெருக்கூத்து நடைமுறையை ஒட்டிய பத்திகளை அவரது நாடகங்கள் வேண்டி நிற்பதாக எண்ணத் தோன்றுகிறது. ஆனால், அவரது நாடகப் பிரதியை வைத்து மேடையேற்றத்தைக் கற்பனை செய்யும் போதில், இது எவ்வளவு தூரம் சரியாக இருக்கும் என்பது யோசிக்க வேண்டிய விஷயமாகிறது.

இவ்வளவும் சொன்ன பிறகு இவற்றின் பின்னணியில் நாம் கவனிக்க எண்ணிய எண்பதுகள் தொண்ணூறுகளில் நாடக இலக்கியங்களின் பக்கம் பார்வை செலுத்த வேண்டும்.

*10*

வியாபார நோக்கமே கொண்டிருந்த மத்திய பிரவாஹமாக நாடகங்களை, அவற்றின் தமாஷ்களையும் நகைச்சுவைத் துணுக்கு தோரணங்களையும், சபாக்களின் மற்ற செயல்பாடுகளின் வாலாக ஒட்டிக் கொள்ளும் நிலையும் - இவை எல்லாம் ஒரு நிமிட யோசனை கூட இல்லாமல் ஒதுக்கிப் புறந்தள்ள வேண்டியது தான். அது பிரச்சினையே இல்லை. ஏனெனில், இவற்றுக்கும் நம்மை வதைக்கும், மகிழ்விக்கும் வாழ்க்கைக்கும் எத்தகைய உறவும் இல்லை. மேலும் இவை கலாபூர்வமான நாடகமே இல்லை. எந்தத் தரத்திலிருந்து பார்த்தாலும் சரி. ஆனால், அவற்றைப் புறந்தள்ளிய இடத்தில் எதை வைப்பது? அமெரிக்க வாட்வில் (Vardville Shows) ஐ ஒதுக்கிய செயல்பாடு, டென்னஸி வில்லியம்ஸையும் யுஜினி, ஓ. நீல்லையும் அத்தோடு சேர்த்து பெருக்கித் தள்ளுவது எத்தகைய சுரணையுள்ள காரியம்? இதைத் தான் 80 -90 க்களின் தமிழ் நவீன நாடக அரங்கம் செய்தது. குழந்தையைக் குளிப்பாட்டிய நீரோடு குழந்தையையும் கடாசி எறிந்தாயிற்று. இதற்கு அர்த்தம் கடாசியவர்களுக்கு குழந்தையும்' தெரியாது. கழிவுநீரும் என்ன என்று தெரியாது என்பது தான். "கடாசு", "கடாசு" என்ற கூச்சல் ஒன்று தான் புரிந்தது. கடாசியாகி விட்டது. புரட்சி செய்துவிட்ட பெருமிதக் களிப்பு முகத்தில் தாண்டவமாடுகிறது. காலனிய எதிர்ப்பு. சுதேசிய பற்று - கோஷங்கள். அயல்நாட்டு வாட்வில்லைத் தூக்கிக் கடாசிவிட்டு சுதேசி வாட்வில்லை அரியணையில் அமர்த்தியாயிற்று.



இருப்பினும் இன்னுமொரு சிறிய நீரோடை இதன் பக்கத்தில் ஓடியது. சுஜாதாவின் நாடகங்கள் அத்தகைய ஓர் நீரோடை. வியாபார ரீதியில் இயங்கும் சபாவுடன் அவர் உறவு கொண்டார். வாஸ்தவம். அவரது நாடகங்கள் ஓர் அளவில் வியாபார வெற்றியும் கூட. அதுவும் வாஸ்தவம். ஆனால், அவர் நாடகங்கள் நல்ல கட்டமைப்புக் கொண்டவை. நிகழ்கால சமூகத்தின் பிரச்சினைகளை, சிக்கல்களை கருவாகக் கொண்டவை. நாடகத்தை மேடையில் நிகழ்த்திக் காட்ட, அவற்றிற்கு உயிரூட்ட சந்தர்ப்பம் தருபவை. பார்வையாளரின் -புத்திபூர்வமுள்ள சுரணையுள்ள -பார்வையாளரின் கவனத்தை ஈர்ப்பவை. இவை ஏன் புரிந்து கொள்ளப்படவில்லை? சிறு பத்திரிகை லேபல் ஒட்டிக் கொண்டு வந்தால் தான் கவனிப்பாய் என்றால் உன் சுரணையை என்னென்பது? அவர் நிறைய நாடகங்கள் எழுதினார். 80கள் பற்றி மாத்திரம் பேசுவோம். ஊஞ்சல் நாடகம், ஒரு என்ஜினியரைப் பற்றியது. மேதை தான் ஆனால், வேகமாக மாறிவரும் தொழில் நுணுக்கம் அவரைப் பின் தள்ளிவிடுகிறது. ஆனால், அந்த என்ஜினியரோ, இம்மாற்றத்தைப் பற்றிய பிரக்ஞையே இல்லாது தன் பழம் உலக சுகத்தில் மாய்ந்து கிடக்கிறார். ஜால்ஸாகர் என்னும் சத்யஜித் ரேயின் திரைப்படத்தில் வரும் ஜமீன்தாரைப் போல் மிகச் சக்தி வாய்ந்த நாடகம் அது. அதன் கடைசி நிகழ்வு தான் கொஞ்சம் மிகையுணர்ச்சியானது. ஆனால், இந்த நாடகத்தை நடத்தி நடித்தவருக்கு இக்காட்சிதான் உச்ச ரசனைக்கான விஷயமாக இருந்தது போலும். இதை எவ்வளவு விரசமான அழுகைக் காட்சியாக்க முடியும் பாருங்கள் என்று சவால் விட்டது போல அழுது காட்டினார் அந்த நடிகர், சென்னையில் நடந்த ஒரு பட்டறையின் பயில் வகுப்பில் அடிமைகள் என்ற நாடகம், சர்வாதிகாரியும் முரடனுமான குடும்பத் தலைவன், அவனுக்கு அடிமையாக நாட்களை, வாழ்க்கையை ஓட்டும் குடும்ப பரிவாரங்கள். அத்தலைவனை பொறுத்துக் கொள்ள முடியாது அவனைக் கொலை செய்ய சதி நடக்கிறது. ஆனால், மிகப்பயங்கொள்ளியாக, அம்முரடனுக்கு மிகவும் பணிவாக நடந்து கொள்பவனிடம் தலைமை மாறுகிறது. அவன் தலைமைப் பீடம் ஏற்றதும் பழையவனின் அச்சான கொடுமைக்காரனாக மாறுகின்றான். எத்தனையோ சரித்திர நிகழ்வுகள் இதற்கு இணையாயிருப்பதைக் காணலாம். லெனின் இடத்தில் வந்து அமர்ந்த ஸ்டாலின், ஜீயா - உல் ஹக், ஜுல்பீக்கார் அலி பூட்டோவை தொடர்ந்து இப்படி பல. எனக்கும் ஒரு இணை தோன்றுகிறது. கலோனிய வாட்வில்லை தூக்கி எறிந்த இடத்தில் சுதேசி வாட்வில் வந்தமர்ந்து கொண்டது. (இதற்குப் பெயர் நவீன நாடகம்!)

"நரேந்திரனின் விநோத வழக்கு" என்னும் நாடகத்தில் ஒரு டொக்டர் கொலைக் குற்றம் சாட்டப்படுகிறார். அவரிடம் பொறாமை கொண்ட சக டொக்டர்களாலும், அரசியல் சக்திகளாலும் சாட்சிகள் பயமுறுத்தலுக்காளாகிறார்கள். நீதித்துறையும் பயத்தில் நடுங்குகிறது. குண்டர்களும் போக்கிரிகளும் அரச அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்கிறார்கள். நடைமுறை உலகின் பிரதிபலிப்பாகத் தான் இருக்கிறது. இந்த நாடகங்கள் பழக்கமான படச்சட்ட மேடை என்று சொல்லப்படும் அரங்கின் கட்டமைப்புக் கொண்டவை. ஆனால், எளிய உருவானவை. தன் நாடக உருவாக்கலில் சுஜாதா, தன் மக்கள் கவர்ச்சி எழுத்துக்களில் காட்டும் தந்திரங்களில், மாயாஜாலங்களில், வித்தைகளில் ஆழ்வது கிடையாது. நாடகங்களுக்கு வடிவம் தருவதில் புதிய முறைகளைக் கையாள்கிறார். ஒரு சிறிய நாடகத்தில் அரங்கத்தை மேடையாகவும், பார்வையாளரை நடிகராகவும் ஆக்கிக் காட்டுகிறார். தமிழ் நாடகச் சூழலில், தமிழ் நாடகத்தை அது சூழ்ந்திருக்கும் ஆபாச சக்தியிலிருந்து மீட்டு, ஒரு நல்ல நாடக ,அனுபவத்தின் பாதைக்கு இட்டுச் செல்லும் சக்தி கொண்ட நாடகங்களை எழுதியவர் சுஜாதா. அவர் நாடகங்கள் திரும்பத் திரும்ப பல நூறு காட்சிகள் மேடையேறியவை. வருமான ரீதியில், மேடையேற்றுபவருக்கு பெருத்த லாபத்தைக் குவிக்காவிட்டாலும் நஷ்டத்தைத் தராதவை. நாடகங்கள், அரங்கம் நிரம்பி வழிய வரவேற்புப் பெற்றவை, இவையெல்லாம், சுஜாதா என்ன வெறும் வணிக எழுத்தாளர், பிரபலம் என்று உதாசீனப் படுத்துபவர்களுக்கு சுவை தருவதாக இருக்க முடியாது. சுஜாதாவை உதாசீனப்படுத்துபவர்களுக்கோ ஒரு நாடகத்தின் ஒரு மேடையேற்றத்திற்குக் கிடைப்பது 20 பேர். எப்போதும் எந்த மேடையேற்றத்திற்கும், வருடக் கணக்காகக் கிடைக்கும் அதே முப்பது அல்லது இருபது பேர். இது கூட அதிகமோ என்னவோ. பார்வையாளர் வருடக்கணக்காகப் பழகிப் போன அதே ரங்கராஜன், தருமராஜன் பழனிச் சாமி, ராமசாமிகள். ஆகவே, சுஜாதா பெயரைக் கூட உச்சாடனம் செய்யாமல் இருப்பது இவர்கள் உத்தி. சிறுபத்திரிகைச் சூழலைச் சேராத, வியாபார நிறுவனங்களுடன் உறவு கொண்ட சுஜாதா தீண்டத் தகாதவர் அப்படியிருக்க அவரது நாடகங்களைப் பற்றிக் கேள்வி ஏது? தன் எதிரியை வீழ்த்தாட்டுவதற்கு இதை விட சிறந்த உத்தி எது?

அடுத்த கவனம் பெறுபவர் இந்திரா பார்த்த சாரதி. இவர் எழுபதுகளில் தமிழ் நாடக உலகில் பிரவேசித்தவர். வழக்கமான, பழக்கமான வடிவம் கொண்டவை இவர் நாடகங்கள். படச்சட்டமேடை என்று சொல்லப்படுபவை. சுஜாதா போலவே, இந்திரா பார்த்த சாரதியும் வியாபார, நகைச்சுவைத் துணுக்குத் தோரண, சபா நாடக கலாசாரத்தை ஒதுக்கியவர். ஆனால், நவீன தமிழ் நாடகக்காரர்கள் லேபளையும், பெயரையும் கண்டு எதிர்வினை காட்டுபவர்களாதலால், இந்திரா பார்த்தசாரதியும் தக்ஷின பாரத நாடக சபா என்னும் சபாவின் விளைச்சலாதலால் அவரை ஒதுக்க வேண்டும். ஆனால் சங்கடம். சிறு பத்திரிகைகளோடும் ஏதோ ஓர் உறவு உண்டு அவருக்கு. அவருடைய ஆரம்பகால நாடகங்கள் ஏதோ ஒரு விதத்தில் மனப்பிறழ்ச்சி கொண்ட தனிமனித விசித்திரங்களை பாத்திரமாகக் கொண்டவை. ஒரு வகையில் பார்த்தால் சரித்திர நாடகங்கள், காவிய நாடகங்கள், அல்லது பழைய 'க்ளாஸிக்ஸ் என்று அவர் தழுவல், அல்லது மாறிய மற்றொரு பார்வை செலுத்திய நாடகங்களைப் பார்த்தாலும் இந்த அடிப்படைப் பார்வையில் பொறுக்கிய கருக்களாகவும் பாத்திரங்களாகவும் இருப்பதைப் பார்க்கலாம். ப்ார்த்தசாரதியிடம் ஒரு மிகச் சிறந்த குணம் உண்டு. அதிகாரத்தில் உள்ள பெருந்தலைகள், கோஷங்கள், சித்தாந்தங்கள், ஊதிப்பெருத்த மண்ணாந்தைகள். இவற்றையெல்லாம் பரிகசிக்கும், மரியாதை தர மறுக்கும் குணம். இவை அவரது நேர்ப் பேச்சில் அடிக்கடி வெடித்துச் சிதறும். உள்ளூர அவர் அடி மனதில் இந்த நகைப்பு உண்டு. எழுத்திலும் சில சமயம் வெளிப்படுவதும் உண்டு. உதாரணமாக சில நாவல்களில், சில சிறுகதைகளில். ஆனால், நாவல்களில் இக்குணத்தை அவர் காலடி எடுத்து வைத்த பாதையின் கடைசி வரை பிரயாணம் செய்ய மாட்டார். இடையிலேயே குழப்பங்கள் பல நேர்ந்து விடும். அபத்தமான நிகழ்வுகள், பாத்திரங்கள், திருப்பு முனைகள் நிகழ்ந்து விடும். ஆக, மிஞ்சுவது சில காட்சிகள் துணுக்குகள். இண்டலின் தர்க்கக் கோடியை அவர் அடைந்தது இல்லை. முடிவைக் கண்டு அவருக்கே பயமோ, கலவரமோ தெரியாது. இதை ஏன் சொல்கிறேன் என்றால், இந்தக் குணம் அவர் ஆளுமையில் இருக்கும் போது, சில சமயம் நாவல்களில், சிறுகதைகளில் வெளிப்படும் போது, நாடகங்களில் ஏன் வெளிப்படுவதில்லை என்று புரிவதில்லை. இது மிக அவசியமான வெளிப்பாட்டுத் தேவை. ஆனால், இந்திரா பார்த்தசாரதி இதை ஒத்துக்கொள்ள மறுத்துக் கொள்கிறார். நாடகம் என்று வரும் போது, ஒரு ஸீரியஸ் முகமூடி தேடிக் கொள்கிறார். சிரிக்க மாட்டவே மாட்டேன் என்று மறுக்கிறார். மனப்பிறழ்ச்சி எங்கேயடா கிடைக்கும் என்று தேட ஆரம்பிக்கிறார். அவரது இன்னொரு குணம். எந்த சித்தாந்தத்தின் தெருக்கூச்சல் பலமாகக் கேட்கிறதோ, அதை மகிழ்ச்சிப்படுத்த மிகவும் பிரயாசைப்படுகிறார். ''நந்தன்' கதை ஓர் உதாரணம். தானும் நவீன நாடகக்காரர் கட்சியில் சேர்ந்து கொள்ள வேண்டும் என்று ஆசையோ என்னவோ, இப்படி எல்லாம் ஆசை அவருக்கு அவ்வப்போது எழும். ஒரு சமயம் '' என் கையில் துப்பாக்கி மாத்திரம் இருந்தால், இந்த முதலாளித்துவ சமூகத்தையே சுட்டுக்கொன்று விடுவேன்" என்று கோஷம் எழுப்பினார். வேடிக்கையெல்லாம் செய்வார் இவ்விதம்.

(வரும்)

நன்றி - நூலகத்திட்டம்



## செம்மணி என்றால் என்ன......

நீண்ட கட்டுரைகளில், முற்போக்கு எண்ணங்கொண்ட பல்கலைக்கழக மாணவர்கள் இவ்விழாவை நடாத்துவதாகத் தம்பட்டமடித்திருந்தனர். பாலகுமாரனைப் பணங்கொடுத்து அழைத்துப் பேசவைப்பதிலும் பழுத்துப் போன பழமைவாதிகளை அழைத்துப் பல்கலைக்கழக மேடையை அலங்கரிக்க விடுவதிலும் என்ன முற்போக்குத்தான் இருக்கிறதோ தெரியவில்லை. வியாபாரத்துக்குப் புத்தகம் போடும் பாலகுமாரன் எங்கள் பிரச்சினையை எழுதுவார் என்று கிறங்கிப் போய் பலர் கும்பிடு போட்டுவிட்டு போனார்கள். நல்லது! சிலநேரம் பாலகுமாரன் போராட்டத்தில் ஈடுபடுபவர்களெல்லாம் இருதாரமணஞ் செய்தால் பிரச்சினைகள் தீரும் என்று ஏதேனும் புதிய ஐடியா கொடுப்பாரோ பொறுத்திருந்து பார்ப்போம். (வாரம் ஒரு வலத்தில் நாம் இப்போது இருதார மணத்தை நோக்கிய பாதையில் தான் சென்று கொண்டிருக்கிறோம். கொஞ்ச காலம் பொறுத்திருங்கள் தெரியும் என்று அந்த ஞானதிருஷ்டி பெற்ற எழுத்தாளர் உளறியதாயும் ஞாபகம்.)

பாலகுமாரன் தன்னை சந்தித்தவர்களிடமெல்லாம் நான் "நண்பர்" ஜெயராஜின் அழைப்பின் பேரில் தான் வந்துள்ளேன்" என்று கூறியுள்ளார். அகில இலங்கைக் கம்பன் கழக இளந்தலைமுறைத் தலைவரும் ஏனைய இளம் தலைமுறை உறுப்பினர்களும் பாலகுமாரன் எழும்புவதிலிருந்து மேடையில் ஏறுவதுவரை எல்லா இடங்களுக்கும் 'செல்போனும்" கையுமாக 'எக்ஸ்கோட்' கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இப்போது அவருக்குரிய பணத்தை மன்றப்பணத்திலிருந்து செலுத்தினால் செயற்குழுவில் மேலும் பிரச்சினைகள் எழும் என்ற காரணத்தால் வர்த்தகப் பிரமுகர்களிடம் 'கணக்குக்கு வெளியே' காசு போடக் கேட்டுத் தத்தளித்துக் கொண்டு அலைவதாகவும் ஊர்ஜிதமற்ற தகவல்கள் கூறுகின்றன.

மொத்தத்தில் இவ்விழா கம்பன் விழாவுக்கு ஒரு முன்னோடி விழாவாகவும் மக்களின் நாடி பிடித்தறியும் விழாவாகவும் தான் அமைந்துள்ளது. கடந்த கம்பன் விழாவுக்கு, கொழும்புப் பல்கலைக்கழக மாணவர்களிடமிருந்து பலத்த எதிர்ப்புக் கிளம்பியதால் அடுத்த கம்பன் விழாவை இடையூறில்லாமல் முடிக்கவும், எதிர்ப்புத் தெரிவித்த கொழும்பு பல்கலைக்கழகத்தைத் தமது விழா போன்றதொரு விழாவை நடாத்த வைத்து அவர்களது வாயை அடைக்கவுமே கம்பன் கழக தீவிர உறுப்பினராயுள்ள கொழும்பு பல்கலைக்கழக இந்துமன்ற தலைவரினூடாக அம்மூன்றுநாள் விழா அவரது தன்னிச்சையான முடிவின் படியும் அப்பாவி மாணவர்கள் ஒரு சிலரது ஆதரவுடனும் நடாத்தி முடிக்கப்பட்டுள்ளது.

இதனால்தான் வெளிப்படையாக எதிர்ப்புத் தெரிவிக்க முடியாத பலர் இந்து மன்றத்துக்கு அவமரியாதை ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக மௌனஞ் சாதித்துள்ளனர். தமது கோபத்தை அவர்கள் 'சுவரொட்டிகளில்' காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. கம்பன் கழகத் தலைவர் ஜெயராஜ் கலந்து கொள்வதாகத் தெரிவிக்கப்பட்ட சுவரொட்டிகளில் "அரங்கத் தலைமை" என்பது 'அரக்கத்தலைமை' என்று அச்சிடப்பட்டதும் பின் இவை இரவிரவாக போனாவால் திருத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## 'ராஜேஸ்வரி பால....

தழுவும் பாத்திரங்களாகவே சிருஷ்டிக்கப்பட்டுள்ளனஎன்பதும் கவனிக்கற்பாலது.

இந்த நிலையில் இந்தக் கதைகளின் ஆசிரியரின் மனநிலை எவ்வாறு இருந்திருக்கும் என்ற எனது அனுமானத்தினைத் தெரிவிப்பது பொருத்தமானது என நம்புகிறேன்.

"ஒரு கோடை விடுமுறை" இனக் கலவரத்தையும், "அரைகுறை அடிமைகள்" இனப் போராட்டத்தையும் பின்னணியாகக் கொண்டது எனக் குறிப்பிட்டேன். "ஒரு கோடை விடுமுறை" மிகவும் சிறந்த முறையில் கதை பின்னப்பட்டிருக்கிறது. உதாரணமாக..

பரமநாதன், மரியானிடையே ஏற்பட்ட கூடலை இவ்வாறு வர்ணிக்கிறார்.

"...இயற்கையின் பரிணாம சிருஷ்டியின் இரு உயிர்த் துடிப்பின் உணர்ச்சியின் சங்கமம் அன்றிரவு தெள்ளிய நிலவோடு தென்றல் கலந்த இனிமையாக மலரோடு வண்டிணைந்த வடிவத்தில் நிழலாக அவர்கள் காதல் கனிந்தது.. " எனக் கூறுவதும்,

"... யாழ்ப்பாண வீதிகளில் சுகமான மக்களின் நெருக்கம், ஆங்கிலப் பத்திரிகையிலோ சுகமற்ற மக்களின் நெருக்கம்..." எனக் குறிப்பிடுவதும் நன்றாக இருக்கிறது.

பரமநாதன் லண்டனுக்கு வந்த பின் எவ்வாறு அவனது மனம் மாறியது, எவ்வாறு போலிக் காரணங்களைக் காட்டிச் சமாளித்தான் என்பதைக் காட்ட, " ஒவ்வொரு நாளும் எழுதி.... ஒரு கிழமையாகிப்... பின்... பின்... ஒவ்வொரு விதமான உறவுகளிலும் உலகம் தான் நினைத்த அளவு புனிதமில்லை. பவுத்திரமில்லை என்ற போலி வரட்டு வேதாந்தத்தால்..." எனவும் கூறப்படுகிறது.

அவரது அரசியல் பார்வை குறித்து எனக்கு நியாயமான சந்தேகங்கள் உண்டு.(பக்கம் 45)

இரண்டு இனக் கலவரத்தைக் கண்டு தமிழர்களின் அடிப்படை மனித உரிமைகளும் பறிபோனது தானே மிச்சம் ! சிங்களவர்களும், தமிழர்களும் இனி ஒரு நாளும் ஒன்றாய் இருக்க முடியாது என்றிருக்கும் போதும் இன்றும் தேசிய ஒற்றுமை பேசும் இடதுசாரிகளை என்னவென்று நம்புவார்கள் தமிழர்கள்? இதில் தேசிய ஒற்றுமை குறித்த நிலைப்பாடு என்ன என்பது தெரியவில்லை.

".....உலகமெல்லாம் ஒடுக்குமுறைக்கெதிராக, முற்போக்கு சக்திகள் ஆர்ப்பரித்து எழும்போது இந்த இடதுசாரிகள் மட்டும் ஏன் திட்டம் போட்டு ஒரு இனத்தை அழிக்கும் ஏகாதிபத்திய மனப்பான்மை கொண்ட அரசாங்கத் திட்டங்களை எதிர்க்காமல் இருக்க முடியும்...?"

இவற்றில் முற்போக்கு சக்திகள், இடதுசாரிகள், சிங்கள ஏகாதிபத்திய வாதிகள் இவை பற்றிய குழப்பம் காணப்படுவதாகவே கருதுகிறேன்.

ஆழமான அரசியல் விவாதங்களைத் தூண்டும் பாத்திரங்களைப் படைக்கும்போது இவை பற்றிய தெளிவு அவசியம்.

▲

## தூக்கைத்......

விடுவித்திருக்கிறது உச்ச நீதிமன்றம். ஆக உச்ச நீதி மன்றத்தினால் 22 நபர்களின் உயிர் பிழைத்திருக்கிறது.

தடா நீதிமன்றத்திலேயே கூட தங்களுக்கென்று வழக்கறிஞர் வைத்து வாதாடக் கூடிய வசதி இல்லாதவர்களாகவே இருந்துள்ளார்கள். இதற்கு தமிழின உணர்வாளர்கள் பலர் இணைந்து 'தமிழர் உயிர் காப்பு வழக்கு நிதிக்குழு' எனும் அமைப்பை உருவாக்கி மக்களிடம் நிதி திரட்டப்பட்டு வழக்கு நடத்தப்பட்டமையால் 22 பேரின் உயிர் தப்பியிருக்கிறது. ஆனாலும் 4 பேருக்கு உச்ச நீதிமன்றம் மரண தண்டனையை உறுதிப்படுத்தியிருக்கிறது. முன்னர் பூந்தமல்லி தடா நீதிமன்றம் 26 பேருக்கும் மரணதண்டனை விதித்தது. பின்னர் உயர்நீதி மன்றம் 22 பேரை தூக்குத் தண்டனையிலிருந்து விடுவித்திருக்கிறது.

ஆக, 22 பேருக்கு தூக்குத் தண்டனை விதித்தது தவறானது என்பது இப்போது வெளிவந்திருப்பது போல மற்ற நான்கு பேருக்கும் மரண தண்டனை விதித்தது தவறு என்று எதிர்காலத்தில் வந்துவிடக் கூடாது என மனித உரிமைவாதிகள், மனித உரிமை இயக்கங்கள் கருத்து தெரிவிக்கின்றன. அதற்கான எதிர்ப்பு இயக்கங்களை கூட்டிப் போராடுகின்றன.

இன்று மரண தண்டனை எதிர்ப்பு இயக்கம், மரண தண்டனை மிகவும் கொடுமையானது என்று உறுதியாக நம்பி எதிர்ப்பு நடவடிக்கைகளில், பிரச்சாரங்களில் அனைத்திந்திய அளவில் ஈடுபட்டு வருகின்றனர். ஆக மரண தண்டனைக்கு எதிரான பேரியக்கம் உலகெங்கும் வலுத்து வருவதை பரவலாக காண முடிகிறது.

"நீதிமன்றம் விதித்த தண்டனையில் ஒவ்வொரு மனித உயிரும் பறிக்கப்படும் ஒவ்வொரு விடியற்காலையிலும் மனித உரிமைக் கொடி அரைக் கம்பத்தில் பறக்கிறது."

- ஒய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி வி.ஆர். கிருஷ்ணய்யர் -

▲

## "நன்றாக விசா

இத்தனைக்கும் நிலாவெளிப் பகுதிக்கு புலிகள் நினைத்த நேரத்தில் வருகிறார்கள்: போகிறார்கள். இது இராணுவத்தினருக்கும் தெரியும். என்றாலும் பொதுமக்களாகப் பார்த்துத் தேடிப்பிடித்து "புலி எங்கே" என்று விசாரிப்பது இராணுவத் தரப்பாருக்கு ஒரு மரபாகப் போய்விட்டது.

நகரப்பகுதியில் ஒரு வாலிபர் பொலிசாரிடம் சிக்கியுள்ளார். இவர் விடுதலைப்புலி உறுப்பினர் என பொலிசார் நம்புவதால் சோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. சுற்றிவளைப்புகள், சந்தி மறிப்புகள், சில மணிநேரச் சோதனை நிலைகள் என நகரம் அமர்க்களப்படுகின்றது.

மூதூரிலும் சுற்றிவளைப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. பல ஆண்டுகளுக்குப் பின் மூதூரில் இவை மீளவும் தொடங்கப்பட்டுள்ளன.

பொலிசார் எவ்வளவு தான் பவ்வியமாக நடந்து கொண்டாலும் தமிழ் மக்கள் மத்தியில் அருவருப்பு உணர்வும் தாங்கள் இரண்டாந்தரப் பிரஜைகள் என்ற எண்ணமுமே மேலோங்கி வருகிறது. சோதனைகள், கெடுபிடிகள், கைதுகள், விசாரிப்புக்கள் யாவும் தங்களுக்கு மாத்திரமே என அவர்கள் நடைமுறையூடாக அனுபவித்து வருவதால் இவ்வுணர்வுகள் மேலோங்குகின்றன என்று தான் கூறவேண்டும்.

- விவேகி.

## புதிய இடதுசாரி முன்னணி...

என்றால் நூறோடு நூற்றிஒன்றாகப் போய்விடட்டும். ஆனால் அப்படியல்ல. இது திடீரென ஏற்பட்ட, அல்லது இது வரை ஏற்படாத நிகழ்ச்சிகள் அல்ல என்பதைக் கருத்திற்கொள்வோமாயிருந்தால் இது ஒரு முக்கிய பிரச்சினை என்பது புலப்படும்.

ஒரு வருடம் கூட முற்றாக முடிவதற்குள் ஒரு இடதுசாரி முன்னணி பிளவடைந்திருக்கிறது. மூன்று தேர்தல்களைச் சந்தித்து ஒரு தேர்தலில் ஒரு மாகாணசபை உறுப்பினர் பதவியை பெற்ற பின், அப்பதவியின் காரணமாக இப்பிளவு நடந்திருக்கிறது. அப்பதவி யாரிடம் இருக்க வேண்டும் எனும் முடிவை முன்னணியின் அங்கத்துவ கட்சிகள் தீர்மானிப்பது என்று உடன்பாடு இருந்த போதிலும் அப்பதவியைக் கொண்டிருந்த ஒரே காரணத்திற்காக கொண்டிருந்தவர் துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்திருக்கிறார். தட்டிக் கேட்ட போது அதனை ஜனநாயக ரீதியில் எதிர்கொள்ள மறுத்திருக்கிறார். அமைப்பு விதியை மீறியிருக்கிறார். எஞ்சியிருந்த கட்சிகளில் சில வெளியேறி முதலில் அறிக்கைப் போரில் இறங்கின. பின்னர் ஏனைய கட்சிகளுமாகச் சேர்ந்து தமக்கிடையில் ஒரு செயலாளரை நியமித்து இடதுசாரி முன்னணியாக அடையாளம் காட்டி தொழிற்படத் தொடங்கியிருக்கின்றன.

இது தான் சாராம்சம். மொத்தம் ஆறு கட்சிகள் முன்னணியில் இருந்தன. ஈ.தம்பையா செயலாளராக இருக்கும் புதிய ஜனநாயகக் கட்சி, சிறிதுங்க ஜயசூரியவின் ஐக்கிய சோஷலிசக் கட்சி, பற்றிக் பர்ணான்டோவின் தேசிய ஜனநாயக இயக்கம், வசந்த திசாநாயக்கவின் தியெச கல்வி வட்டம், முஹிர் ரகுமானின் முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி மற்றும் நவ சமசமாஜக் கட்சி என்பனவே அவை.

இவற்றில் நவ சமசமாஜக் கட்சி தம்முடன் முஸ்லிம் ஐக்கிய முன்னணி இருப்பதாகக் கூறிக்கொள்கிறது. ஆனால் முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியானது இடது சாரி முன்னணியைப் பதிவு செய்வதற்கு ஆதரவாக தமது கட்சியையும் இணைத்துக் கொண்ட கட்சி மட்டுமே. மேலும் அது ஒரு போதும் முன்னணியின் உயர்மட்டக் கூட்டங்கள் எதிலும் கலந்து கொண்டதுமில்லை. அதுமட்டுமன்றி முன்னணி தொடக்கப்பட்டிருந்த காலம் தொட்டு எந்தத் தேர்தலிலும் சேர்ந்து போட்டியிடாததுடன், முன்னணி போட்டியிட்ட இடங்களிலெல்லாம் தான் தனித்துப் போட்டியிட்டது. முன்னணியின் செயறபாடுகள் எதிலும் செயலளலவில் ஒத்துழைத்தது கூடக் கிடையாது.

நவசமசமாஜக்கட்சி வேண்டுமாயின் தர்க்கத்துக்காக முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியும் தம்முடன் இருக்கிறதென்று கூறிக்கொள்ளலாம். ஆனால் அப்பதில் நவ சமசமாஜக்கட்சியின் நேர்மையின்மையையே காட்டுகிறது. முன்னணியில் உள்ள சகல கட்சிகளும் ஒருமித்து எதிர்க்கையில் செயலாளர் பதவியையும், மாகாணசபை உறுப்பினர் பதவியையும், தம்மிடம் வைத்துக்கொண்டிருப்பதற்கூடாக அக்கட்சி தம்மை அப்பட்டமாக அம்பலப்படுத்திக்கொண்டுள்ளது என்று தான் கூறவேண்டும்.

இதே வேளை நவ சமசமாஜக்கட்சிக்கு வெளியில் இருக்கின்ற "புதிய இடது சாரி முன்னணி"யில் அங்கம் வகித்த எந்தக் கட்சியும் நவ சமசமாஜக்கட்சி அளவுக்கு ஆட்பலம் உள்ள கட்சிகள் அல்ல. அவை விரல் விட்டு எண்ணக்கூடிய உறுப்பினர்களைக் கொண்ட கட்சிகள். புரட்சிகர கட்சிகளின் பலமானது எப்போதும் வெறும் உறுப்பினர் எண்ணிக்கையை மட்டும் வைத்து எடை போடக்கூடிய ஒன்றல்லத் தான். ஆனால் இந்த இடத்தில் அவை கருத்திற்கொள்ளப்பட வேண்டிய தேவை ஏன் ஏற்படுகிறதென்றால் இவை தட்டிக்கழித்து தாண்டிவிட்டுச் செல்லக்கூடிய பிரசசினைகள் அல்ல. பெரும்பாலும் சமகால நடைமுறை செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிற பாராளுமன்ற வழிமுறையில் நாட்டமதிகமுள்ள கட்சிகள் என்பதாலேயே. எனவே ஆட்பலம் என்பதை தட்டிக்கழித்து விட்டுப்போகவும் முடியாது.

கடந்த கால முன்னணியின் செயற்பாடுகளில் நவசமசமாஜக்கட்சியின் உறுப்பினர்களின் பங்களிப்பே பெருமளவு முன்னணியை முன்னோக்கித் தள்ளிச் சென்றுள்ளது என்பதை எவரும் மறுக்க மாட்டர்கள். எனவே ஏனைய கட்சிகள் மீது "வெறும் மேடையை பயன்படுத்திவிட்டுப் போகும் கட்சிகள் "என்கின்ற குற்றச்சாட்டும் பரவலாக உள்ளது.

இப்படியாக பரஸ்பர பிரச்சினைகளின் மத்தியில் தான் இந்தப் பிளவு, பிளவின் பின்னர் சமீபத்தில் நடத்தப்பட்ட ஆண்டு நிறைவுக் கூட்டம்.

இக்கூட்டத்தில் ஆற்றப்பட்ட உரைகள் அதிகார குழுமத்தை எதிர்த்தோ அல்லது சமகால அரசியல் நிகழ்வுகளைக் கருத்திற்கொண்டோ ஆற்றப்பட்ட உரைகளாக அமையவில்லை. நவ சமசமாஜக் கட்சியை அம்பலப்படுத்துவதற்காகவே ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டமாகத் தான் தோன்றியது.

எப்படியிருந்தாலும் இன்று விக்கிரமபாகுவும் நவ சமசமாஜக்கட்சியும் மக்கள் நம்பிக்கையை காக்க செய்யக்கூடியது தாம் பதவிக்கு பித்துபிடித்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்க மாகாண சபை உறுப்பினர் பதவியை அமைப்பு விதிப்படி ஏனைய கட்சிகளுக்கு விட்டுக் கொடுப்பதே.

அதே வேளை இடதுசாரி இயக்கங்களுக்கு வந்த முதல் சோதனை இதுவல்ல என்பதை கருத்திற் கொள்வோமாயின் இது வெறும் அரசியல் பிரச்சினையல்ல. இது அமைப்பின் கட்டமைப்போடு தொடர்பான அமைப்புத்துறை சார்ந்த பிரச்சினை. கடந்த கால இடதுசாரி இயக்கங்களின் பிளவுகளைப் பார்த்தால் அரசியல் பிரச்சினை காரணமாக ஏற்பட்ட பிளவுகளை அளவில் சிறிய எண்ணிக்கையாகவே காணலாம். மாறாக ஊன்றித் தேடிப்பார்த்தால். அனைத்திலும் அமைப்புத் துறையில் அதிகாரத்துவம் மிஞ்சி அதன் விளைவு பிளவுகளை நோக்கி இட்டுச் சென்றிருக்கும். இது பற்றி நிறையவே பேசலாம். அதன் அரசியல் பற்றியும் பேசலாம். வெறும் பேச்சுக்காக அல்ல. அந்த அனுபவங்களிலிருந்து இனியேனும் மீளும் வழி காண.

-கோமதி

நன்றி - நூலகத்திட்டம்

Registered as a newspaper in Sri Lanka

# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"

- பாரதி

இல. 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட.

தொலைபேசி / தொலைமடல் : 814859, 815003, 815004.

## மட்டக்களப்பிலும் சிறிலங்கா படைக்கு தமிழ் இளைஞர்களைத் திரட்ட முயற்சி

மட்டக்களப்பு மாவட்டத்தில் சில பகுதிகளில் சிறிலங்கா படைக்கு தமிழ் இளைஞர்களை ஆட்திரட்டுவதற்கான நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு நகருக்கு வடக்காக உள்ள வாழைச்சேனை, ஓட்டமாவடி, வாகரை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில்

முதற்கட்டமாக தமிழ் இளைஞர்களைத் திரட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நேற்று (16.8.99) வாழைச்சேனை பிரதேசத்திற்கு பொறுப்பான படை அதிகாரி கேணல் ஏ. அல்விஸ் வாழைச்சேனை, ஓட்டமாவடி, வாகரை பகுதி பிரதேச செயலாளர்களை காகித தொழிற்சாலை வளாகத்திற்குள் இயங்கி வரும் 23-2 ஆவது பிரிகேட் அலுவலகத்திற்கு அழைத்து கூட்டமொன்றினை நடத்தினார். அக்கூட்டத்தில் தமிழ் இளைஞர்களை சிறிலங்கா படைக்கு ஆட்சேர்ப்பது தொடர்பாக எடுத்துக்கூறினார்.

பிரதேச செயலாளர்கள் தமது கிராம சேவை உத்தியோகத்தர்கள் மூலம் பொதுமக்களுக்கு இந்த அறிவித்தலை வழங்குமாறும், கிராமசேவை உத்தியோகத்தர்கள் மூலம் இளைஞர்களை திரட்டுவதற்கு உதவுமாறும் படை அதிகாரி தெரிவித்தார். கல்வித் தகைமை ஆகக்குறைந்தது 8 ஆம் வகுப்பு படித்திருத்தல் வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. படையில் சேர்வதற்கு ஆர்வமுள்ள இளைஞர்கள் ஓகஸ்ட் 18 முதல் முதல் இம்மாத இறுதிவரை காகித ஆலை படைமுகாமில் நடைபெற உள்ள நேர்முகப் பரீட்சைக்கு நேரில் வருமாறும் கேட்கப்பட்டுள்ளனர். இதையடுத்து பிரதேச செயலாளர்கள் கிராமசேவை உத்தியோகத்தர்களிடம் தமது கிராங்களில் படைக்கு ஆட்சேர்ப்பது தொடர்பாக அறிவிக்குமாறு கூறினார்கள். வடக்கு கிழக்கு பகுதியில் தமிழ் இளைஞர்களை படையில் சேர்ப்பதற்கான முயற்சிகள் சில மாதங்களாக நடைபெற்று வருகின்றன. மட்டக்களப்பு நகரில் அண்மையில் படையில் இளைஞர்களை வந்து சேருமாறு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. ஆனால் எவரும் படையில் சேர்வதற்கு முன்வரவில்லை.

இதுபோல் யாழ்ப்பாணத்திலும் இரு தடவைகள் நேர்முகப் பரீட்சைக்கான திகதிகள் அறிவிக்கப்பட்டது. இளைஞர்கள் படையில் இணைந்து கொள்வதற்கு முன்வருவார்கள் என்றே படையினர் நினைத்திருந்தனர். ஆனால் படையினர் எதிர்பார்த்ததுபோல் எவரும் நேர்முகப்பரீட்சைக்குச் செல்லவில்லை. இதனால் படை அதிகாரிகள் ஏமாற்றம் அடைந்த நிலையில் மீண்டும் நேர்முகப் பரீட்சைக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளனர்.

வாழைச்சேன, ஓட்டமாவடி, வாகரை பிரதேச செயலகப் பிரிவுகளில் ஓட்டமாவடி முஸ்லிம் பிரதேசம் மாத்திரமே முழுமையான படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. ஏனைய இருபிரிவுகளில் பலபகுதிகள் படையினரின் கட்டுப்பாட்டில் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சமாதானப் பசப்பல்

கடந்தவாரப் பத்திரிகைகளில் வெளியான செய்திகளைப் பார்ப்பவர்கள் சமாதானத்திற்கு ஆதரவாகவும் யுத்தத்திற்கு எதிராகவும் இவ்வளவு குரல்கள் ஒலிக்கும் போது இன்னமும் யுத்தம் நடந்து கொண்டிருப்பது ஏன் என்ற சந்தேகத்துள்ளாகியிருப்பார்கள் என்பது நிச்சயம்.

ஒரு புறம் யுத்தத்தில் காணாமல் போன படையினரின் பெற்றோர்களும் பிள்ளைகளும் யுத்தத்திற்கெதிராக கோசமெழுப்ப மறுபுறம் அரசாங்க அமைச்சர்கள், அரசியல் வாதிகள் கூட்டும் சமாதானத்திற்காக குரலெழுப்பிய ஆர்ப்பாட்டம் ஒன்று லிப்டன் சந்தியில் நடைபெற்றது.

அதேவேளை நாடுபூராவுமிருந்து ஒரு லட்சம் மக்களை திரட்டி யுத்தத்தை நிறுத்தக் கோரும் பேரணி ஒன்றை இம்மாத இறுதியில் நடாத்தப் போவதாக சர்வோதய இயக்கத்தின் தலைவர் ஆரியரத்தன அறிவித்துள்ள அறிவிப்பு வெளியானது.

மன்னாரில் மடுமாதா தேவாலயத்தில் திருப்பலிபூசை நடாத்திய இரத்தினபுரி ஆயர் யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். சமாதானம் நிலவ வேண்டும் என்று அறிவித்தார். கொழும்பில் இனத்துவ கற்கைக்கான சர்வதேச மையத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் யுத்தத்தின் கொடூரத்தை அரசியல்வாதிகளும் புத்திஜீவிகளும் விளங்கிக் கொள்ளவில்லை என்று குற்றஞ்சாட்டியிருந்தார்.

இன்னும் ஒரு படி மேலே போய் அமைச்சர் பெர்னாண்டோப்பிள்ளை புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும் என்று தெரிவித்தார். சமாதானத்தைக் காண அதுவே உள்ள ஒரே வழி என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆக கடந்தவாரப் பத்திரிகைகளில் வெளியான இந்தச் செய்திகள் எல்லாம் நாட்டிலே யுத்தத்துக்கல்ல, மாறாக சமாதானத்திற்கே பெரும் ஆதரவு நிலவுகின்றது என்பதைக் காட்டுவதாக அமைந்தன.

லிப்டன் சதுக்க ஆர்ப்பாட்டம், இன்று யுத்தத்தை நடாத்திக் கொண்டிருக்கும் அரசாங்கத்தின் உயர்மட்ட அமைச்சர்கள், அரசியல்வாதிகளால் நடாத்தப்பட்டதும், அங்கு நடைபெற்ற கூட்டத்தில் புலிகளும், ஐ.தே.க.வின் ஒரு பகுதியினரும்தான் அமைதிக்கும் சமாதானத்திற்கும் எதிராக இருக்கிறார்கள் என்று பேசியதும் கூட கடந்தவார செய்திகளில் முக்கிய இடம்பிடித்திருந்தன.

இவற்றையெல்லாம் கவனிக்கின்ற ஒருவருக்கு, இந்த நாட்டில் யுத்தத்தை ஏதோ ஒரு அந்நிய சக்திதான் கொண்டுவந்து திணித்து விட்டதோ என்ற சந்தேகம் நிச்சயமாக எழுந்திருக்கும்.

ஏனென்றால், நாட்டிலுள்ள அனைத்து சக்திகளும் சமாதானத்தை விரும்புகின்றன, அரசாங்க அமைச்சர்கள் விரும்புகிறார்கள், புலிகள் பேச்சுவார்த்தைக்கு ஏற்கனவே கோரிக்கை விடுத்துவிட்டார்கள்.

புலிகளை இராணுவ ரீதியில் வெற்றி கொண்ட பின்தான் பேச்சுவார்த்தை செய்யப்பட வேண்டும் என்று வீரவிதான மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு இயக்க கூட்டு ஒன்று மட்டும் தான் கருத்துத் தெரிவித்திருந்தது.

ஆனால் அந்த இயக்கத்தையும் தடை செய்வது பற்றி அமைச்சரவை மட்டத்தில் பேசப்பட்டதாகவும் செய்திகள் வெளிவந்திருந்தன.

அப்படியானால் ஏன் தான் இந்த யுத்தம் நடக்கிறது? இவ்வளவு பேருடைய விருப்பத்தையும் மீறி இந்த யுத்தத்தை நடாத்துவது யார்?

அரசாங்கத்திற்கு யுத்தம் நடத்த ஆர்வமில்லை என்றால் அதை செய்யும் படி அதனை நிர்ப்பந்திப்பவர்கள் யார்?

அரசாங்கத்தின் பாதுகாப்புப் படைகளும் அதை தலைமை ஏற்று நடாத்தும் ஜனாதிபதியுமா யுத்தத்தை நடாத்துவதில் குறியாக இருக்கிறார்கள்?

இந்த அரசின் இராணுவ இயந்திரம் மட்டும் தான் இதில் தீவரமாக இருக்கிறதா?

உண்மை அதுவல்ல.

உண்மையில் பொதுமக்களும், சமாதான விரும்பிகளும் யுத்தத்திற்கு எதிராகத்தான், சமாதானத்திற்கு ஆதரவாகத் தான் எப்போதும் இருந்து வந்திருக்கிறார்கள்.

அடுத்தடுத்து நடாத்தப்பட்ட கருத்துக் கணிப்பு வாக்கெடுப்புக்கள் எல்லாம் இதை மிகவும் தெளிவாக இனங்காட்டின.

ஆனால் அரசாங்கத்திற்கு யுத்தம் அவசியமாக இருக்கிறது. யுத்த மூலம் விடுவிக்கப்படுகிற ஒவ்வொரு அங்குல மண்ணும் அடுத்த தேர்தலில் தமது வெற்றியை உறுத்திப்படுத்துகின்ற ஒவ்வொரு படிக்கறக்ள் என்று அது நம்புகிறது. ஆனால் அதை வெளிப்படையாக அதனால் சொல்ல முடியாது. தனது வேஷம் கலைபடுவதை அது விரும்பவில்லை. எனவே சமாதானத்திற்காக குரலெழுப்புமாறு தனது அமைச்சர்களை லிப்டன் சந்திக்கு அனுப்பிவைத்திருக்கிறது.

உண்மையில், சமாதானத்தில் அக்கறை இருக்குமானல் யுத்தத்தில் வெறுப்பு இருக்குமானால், அது எப்போதோ அதை நிறுத்தும் செயலை தொடக்கியிருக்கலாம். கடந்த வருட மாவீரர் தினப் பேச்சில் பிரபாகரன் அழைப்பு விடுத்த போதே அதில் இறங்கி இருக்கலாம் குறைந்த பட்சம் கடந்த மாதம் வன்னியில் புதிய பாதை திறப்பு மற்றும் சூனியபிரதேசம் உருவாக்கம் என்பன செஞ்சிலுவைச் சங்க ஆதரவுடன் செயற்பட்ட போதாவது அதற்கான நடவடிக்கை தொடங்கியிருக்கலாம். ஆனால், அது செய்யவிரும்பவில்லை.

ஒரு புறம் சமாதான வேஷம், மறுபுறம் யுத்தத்திற்கு தொடர்ந்து தீவிர தயாரிப்பு. இதுதான் சந்திரிகா அரசாங்கத்தின் பண்பு. அடுத்த ஆண்டு தேர்தல் அண்மித்துக்கொண்டிருக்கையில், சமாதான கீதத்தை இப்போதிருந்தே முழங்க ஆரம்பிப்பதன் அவசியம் புரிந்து கொள்ளப்படக் கூடியதுதான்!

சமாதானத்துக்கு ஆதரவு செலுத்தி அதன் மூலமாக ஆதரவை திரட்டும் அதேவேளை, யுத்தத்தை தீவிரப்படுத்தி அதன் மூலம் ஆதரவைத் திரட்டுவது. இருவழிகளாலும் இலாபம் பெறுவது என்ற இரட்டைக் கொள்கை - தவிர்க்க முடியாது யுத்தம் செய்கின்றோம். சமாதானத்திற்காக யுத்தம் செய்கிறோம் என்ற முழக்கத்துடன் தெளிவாக வெளிப்படுகிறது.

மக்கள் குருடர்கள் அல்ல. பிரமைகளால் ஏற்படும் குருட்டுத்தனமும் நிரந்தரமானதல்ல. சமாதானக் கோசப்பசப்பலை அரசாங்கம் செய்தாலும் அது, பற்றி பிடிப்பக்கத்தான் போகிறது. அந்தப் பற்றிப் பிடிக்கும் தீயில் அரசாங்கம் பொசுங்கிவிடப்போகிறது.

ஆம், சமாதானத்திற்கான மக்கள் குரல் தீயாக எழுகையில் யுத்தவாத போலி முகம் தீய்ந்து விடும். அப்போது அம்மாவையும், அம்மாவின் அரசாங்கத்தையும் காக்க துணைக்கு யாரும் வரப்போவதில்லை.

சமாதான முழக்கத்தைத் தவிர!

ஆம். யுத்தவாதிகளைக் கூட அதனால்தான் காப்பாற்ற முடியும்.

அதுவரைக்கும் தொடரட்டும் உங்கள் பசப்பல்!

சமாதானப் பசப்பல்!

## செம்மணி என்றால் என்ன?

### இலங்கைப்பிரச்சினை பற்றி எழுதவிருக்கும் பாலகுமாரன் கேள்வி

இலங்கைப் பிரச்சினையைப் பற்றி எழுதுவது தமிழக எழுத்தாளர்களுக்கு இப்போது பாஷனாகி விட்டது. கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கனடாவுக்கு இலக்கியச் சுற்றுலா சென்ற 'கவிஞர் வைரமுத்து தான் இலங்கைத் தமிழர்களின் கண்ணீர்க்காவியம் ஒன்றைப் படைக்கவுள்ளதாகச் சொல்லியிருந்தார். இப்போது இலங்கைக்கு விஜயம் செய்த பிரபல எழுத்தாளர் பாலகுமாரன் தானும் இலங்கைத் தமிழர்கள் பற்றி ஒரு படைப்பை வெளியிடவுள்ளதாகச் செப்பியிருக்கிறார். கொழும்பு பல்கலைக்கழக இந்துமாமன்றம் ஏற்பாடு செய்திருந்த விழாவிற்கு வருகை தந்திருந்த பாலகுமாரன் தனது வாசகர் மத்தியில்பேசும் போது இதனைத் தெரிவித்திருக்கிறார்.

இவ்விழாவில் பாலகுமாரன் தலைமையில் கவியரங்கு ஒன்றும் நடைபெற்றது. கவியரங்கத்தில் இளைய பல்கலைக்கழக மாணவர்கள் ஆவேசமாக செம்மணி பற்றிக் கவிபாடி முடித்தபின் கவியரங்குக்குத் தலைமை வகித்த பாலகுமாரன் அசட்டுத்தனமாக "அது என்ன செம்மணி? எல்லோரும் கதைக்கிறீர்கள்" என்று கேட்டாராம். இந்த பாலகுமாரன் தான் பின்னர் தான் இனி இலங்கைத் தமிழர்களின் கண்ணீர்க் கதைகளை எழுதப் போவதாகக் காது குத்திவிட்டுப் போயிருக்கிறார். நான்கு வருடங்களாக பீ.பீ.சி மற்றும் சர்வதேச ஊடகங்களில் காதுகிழியக் கதைக்கப்பட்ட செம்மணி பற்றிக் கூடத் தெரிந்து கொண்டிராத ஞானதிருஷ்டிமிக்க கடவுளின் சந்திப்பைப் பெற்ற பாலகுமாரன் தான் இனி இலங்கைத் தமிழர்களின் கதையை வெளியுலகுக்குக் கொண்டு வரப் போகிறாரா?

இந்த ஞானதிருஷ்டிமிக்க கடவுளின் சந்திப்பைப் பெற்ற பாலகுமாரனை இங்கு அழைத்துவரப் பெருமுயற்சி எடுத்தது கொழும்பு பல்கலைக்கழக இந்து மாமன்றம் அல்ல கம்பன் கழகம் தான் என்ற தகவலும் தற்போது வெளியாகியிருக்கிறது.

விழாவிற்கு பாலகுமாரனை அழைப்பது தொடர்பிலோ, கம்பன் கழகத்தினருக்கும் வெளியாருக்கும் விழா நிகழ்ச்சிகளில் முக்கியத்துவம் வழங்குவது தொடர்பிலோ கொழும்பு பல்கலைக்கழக இந்துமாமன்றச் செயற்குழுவில் பிரேரித்து முடிவெடுக்கப் படவில்லை. இதனை எதிர்த்து இணைச் செயலாளராக இருந்த முகாமைத்துவபீடப் பெண் உறுப்பினர் ஒருவர் குரல் கொடுத்ததால் விழா நூலில், செயலாளர் அறிக்கையில் அவரது பெயர் 'ரிப்பெக்ஸ்' பூசி அழிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து முகாமைத்துவபீட மாணவர்கள் நூலை விற்பனை செய்யக்கூடாது, மீறி விற்பனை செய்தால் விழாவைக் குழப்பப் போவதாகவும் அச்சுறுத்தியுள்ளனர். இதனால் கலக்கமுற்ற இந்து மன்றத் தலைவரும், மற்றைய இணைச் செயலாளரான மருத்துவபீட மாணவரும் மன்னிப்புக் கேட்டதுடன் இணைச்செயலாளரின் அறிக்கை புத்தகத்திலிருந்து கிழிக்கப்பட்ட பின்பே சில பிரதிகள் விற்பனை செய்யப்பட முகாமைத்துவ பீட மாணவர்களால் அனுமதிக்கப்பட்டதாகவும் தகவல்! பத்திரிகையில் தாம் வெளியிட்ட

19⇦

**மனித உரிமைகள் தினம்: 10 டிசம்பர்**

**மனித உரிமைகள் வினாவிடைப் போட்டி**

(மாகாண கல்வி திணைக்கள ஆதரவுடன்)

மேல், வடகிழக்கு, வடமத்திய, மத்திய மற்றும் தென் மாகாண பாடசாலைகளைச்சேர்ந்த ஆண்டு 10-13 வரையிலான மாணவர்கள் இப்போட்டியில் பங்கு கொள்ளலாம்.

ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் 05 மாணவர்கள் அடங்கிய குழுவொன்று பங்குபற்றலாம்.

அனைத்து விண்ணப்பங்களும் அதிபரின் மூலம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

இறுதி திகதி
1999 செப்டம்பர் 15

மேலதிக விபரங்களுக்கு:-
மோஜ்
சட்டக்கல்விக்கும் உதவிக்குமான திட்டம்
19/4 - 1/1. நாவல வீதி,
நுகேகொடை.
தொலைபேசி/ தொலைமடல் - 814859/ 815003-4

வெற்றிபெறும் பாடசாலைகளுக்கு பெறுமதிமிக்க பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கம்
மேல்/ வடகிழக்கு/ வடமத்திய/ மத்திய மற்றும் தென் மாகாண கல்வி திணைக்களம்

வெளியிடுபவர் : ச. பாலகிருஷ்ணன் , இல. 18/02, அலோ சாலை, கொழும்பு 03. அச்சுப்பதிவு : பிரின்ட் இன் இல. 07 [illegible] 17.08.1999